Registered as a Newspaper

பக்கங்கள் – 24
விலை – ரூபா 60

# உதயன்

சுடர் : 39
கதிர் : 273

ஞாயிற்றுக்கிழமை
25 ஒகஸ்ட் 2024

ஆவ
வள்ளுவ

## முச்சந்தி முரளி



"பாம்பின் கால் பாம்பறியுமெல்லோ, பைசல் சொல்லுறதில உண்மை இருக்கு கண்டியளோ"

## ஜனாஸா எரிப்புக்காக மன்னிப்புக்கோரிய ரணில்!

இறுதிச் சடங்குக்காக புதிய சட்டவரைவு



கொழும்பு, ஒகஸ்ட் 25

கோத்தாபயவின் அரசாங்கத்தில், கொவிட் தொற்றால் உயிரிழந்த பொதுமக்களின் ஜனாஸாக்களுக்கு 'மத ரீதியிலான இறுதிச்சடங்கு உரிமை மறுக்கப்பட்டமைக்காக' (எரிக்கப்பட்டமைக்காக) பகிரங்க மன்னிப்புக் கோருவதாக ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார்.

☞ 23

யாழ்ப்பாணத்தில்

## செப். 4,5,6 திகதிகளில் தபால் மூல வாக்களிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 25

யாழ். மாவட்டத்தில் தபால் மூல வாக்களிப்பு நடைபெறும் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதன்படி எதிர்வரும் செப்ரெம்பர் 4ஆம் திகதி பொலிஸ், மாவட்டச் செயலகம் மற்றும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் கடமையாற்றுபவர்களுக்கும்,

☞ 23

## முஸ்லிம் தலைவர்கள் இரட்டை வேடதாரிகள்

சுயமாகச் சிந்தித்து வாக்கிடுமாறு பைசல் முஸ்தபா வலியுறுத்து



கொழும்பு, ஒக. 25

ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் தலைவர்கள் யார் பக்கம் நின்றாலும், அவர்களைப் பொருட்படுத்தாமல் முஸ்லிம் மக்கள் சுயமாகச் சிந்தித்து தமது முடிவுகளை எடுக்கவேண்டும். ஏனெனில், முஸ்லிம் தலைவர்கள் இரட்டை வேடதாரிகள் என்று முன்னாள் அமைச்சர் பைசல் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

☞ 23

## மக்களின் மத உரிமைகளை இல்லாமல் செய்ய முயற்சி

சஜித் குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக. 25

மக்களின் மத உரிமைகளை இல்லாமல் செய்யும் முயற்சிகளில் அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரையொன்றில் அவர் மேலும் தெரிவித்த தாவது:-

புத்தசாசன

☞ 23

## முறைப்பாடு 901

கொழும்பு, ஒக. 25

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் 901 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை

☞ 23

## ஊழலற்ற ஆட்சிதான் ஜே.வி.பி.யின் எண்ணம்

அநுர நேற்று வெளிப்படை



கொழும்பு, ஒக. 25

பொதுமக்களினதும் ஆட்சியாளர்களினதும் எண்ணங்கள் ஒன்றுபடும் அரசாங்கத்தைக் கட்டியெழுப்பத் தயாராக உள்ளதாக, ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று இடம்

☞ 23

## ருக்மன் நேற்று காலமானார்

கொழும்பு, ஒக. 25

இலங்கையின் முதல் பிரதமர் டி.எஸ்.சேனாநாயக்கவின் பேரனும் முன்னாள் அமைச்

☞ 23

## வன்முறைக் குழுவொன்றால் மூன்று வீடுகளில் தாக்குதல்

அல்வாயில் அடாவடி



யாழ்ப்பாணம், ஒக. 25

பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல்வாய் வடக்குப் பகுதியில், மூன்று வீடுகள் மீது வன்முறைக் குழுவொன்று நேற்று அதிகாலை தாக்குதல் நடத்தியுள்ளது.

வீடுகளின் உடைமைகள் அடித்துச் சேதமாக்கப்பட்டதுடன், இரண்டரைப் பவுண் தங்கச் சங்கிலியும் அந்தக் குழுவால் கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

☞ 23

## பன்றி குதறியதில் மூதாட்டி பலி!

யாழ்ப்பாணம், ஒக. 25

பன்றியால் குத்திக் குதறித் தாக்கப்பட்ட வயோதிபப் பெண், சிகிச்சையின்போது பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நெடுந்தீவு 15ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நாகமுத்து லட்சுமி (வயது - 80) என்ற வயோதிபப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

☞ 23

## பிரசாதம் தயாரித்தவர் மயங்கிச் சரிந்து பலி!

யாழ்ப்பாணம், ஒக. 25

ஆலயம் ஒன்றில் திருவிழா இடம்பெற்றுவரும் நிலையில் அங்கு பிரசாதம் தயாரிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நபரொருவர் மயங்கிச் சரிந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் சுன்னாகம் பகுதியிலுள்ள ஆலயமொன்றில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

☞ 23

## இயக்கச்சியில் விபத்து; ஒருவர் பரிதாபச் சாவு!

யாழ்ப்பாணம், ஒக. 25

பருத்தித்துறையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பயணிகள் சொகுசுப் பேருந்தும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து ஏ-9 வீதி கிளிநொச்சி - இயக்கச்சி சந்திப்பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

☞ 23

சஞ்சீவி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லூர்த் திருவிழாவின் 17 ஆம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக.25
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தால் நல்லூர்க்கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் சிறப்பு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளன.

17 ஆம் நாள் நிகழ்வு நல்லைதிருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நி தானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்தபரமாசாா்யசுவாமிகள்மற்றும் அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் சீடர் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டு நாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க, இணுவில் சர்வானந்தமய பீட அமைப் பாளர் கலாபூஷணம் பிரம்மஸ்ரீ ப. சிவானந் தசர்மா தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம அதிதியாக சண்டிலிப்பாய் பிரதேச செய லாளர் திருமதி சுபாஜினி மதியழகன், கௌரவ அதிதியாக சிவப்பணிச்செம்மல், முனைவர் வே. சங்கரநாராயணன், சிறப்பு அதிதியாக வடக்கு மாகாணக் கல்வித் திணைக்கள ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் சற்குணானந்தன் கைலாசநாதன் மற்றும் மாகாணக் கல்வித் திணைக்கள ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சாரதாதேவி கிருஷ்ணராஜ் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

வடலியடைப்பு இந்து இளைஞர் மன்ற அறநெறிப் பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர்.

விஷேட நிகழ்வாக லலித நர்த்தனாலயா மாணவர்கள் வழங்கும் நடன நிகழ்வும் இடம் பெறவுள்ளது. (ஒ-ரி)

# இலங்கையில் அறிமுகமாகும் 'எயர் சிலாவோ' விமானசேவை!

கொழும்பு, ஓக. 25
'எயர் சிலாவோ' என்ற பெயரில் புதிய விமானசேவை ஒன்று இலங்கையில் அறிமுகமாகவுள்ளது.

மத்திய கிழக்கு நாடுங்கள், ஐரோப்பா மற்றும் அவுஸ்தி ரேலியாவுக்கான சேவைகளை இந்த நிறுவனம் நடத் தவுள்ளது.

எமது நிறுவனத்தின் சேவை ஏனைய நிறுவனங்களின் சேவையிலிருந்து தனித்துவமான சேவையாக விளங் கும் என நிறுவனத்தின் தலைவர் ஜகத் கஷன் தெரிவித் துள்ளார். (ஒ-22,6)

## கோபுரத்தில் ஏறிய இளைஞனால் பரபரப்பு

பருத்தித்துறை, ஓக. 25
கோயில் கோபுரத்தில் ஏறி இறங்க மறுத்த இளைஞனால் பருத்தித்துறை யில் பெரும் பரபரப்பு ஏற்பட்டிருந்தது.

பருத்தித்துறை துறைமுகத்தை அண்மித்ததாக அமைந்துள்ள பிள்ளை யார் ஆலயத்தின் இராஜ கோபுரத்தின் மீது நேற்றுமுன்தினம் வெள்ளிக் கிமை மாலை 5.30 மணியளவில் இளைஞர் ஒருவர் திடீரென ஏறியுள் ளார். இதனை அவதானித்த மக்கள் ஆலய நிர்வாகத்தினருக்கு தெரி வித்திருந்தனர்.

இதையடுத்து ஆலய சூழலில் பெருமளவான பொதுமக்கள் ஒன்றுகூடி யிருந்தனர். இதன்போது கோபுரத்தில் ஏறிய இளைஞன் சுப்பர்மடத்தை சேர்ந்தவர் எனவும் மனநிலை பாதிப்பிற்குள்ளானவர் என்றும் தெரிய வந்துள்ளது.

இதையடுத்து குடும்பத்தினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதுடன் குறித்த இளைஞனை கீழ் இறங்கி வருமாறு கோரியபோதும் கோபுரத்தின் உட் பகுதியில் சென்று மறைந்துகொண்டுள்ளார்.

இதையடுத்து சுப்பர்மடத்தை சேர்ந்த இளைஞர்கள் சிலர் கோபுரத்தில் ஏறி குறித்த இளைஞனை கீழே இறக்க முயற்சித்த போதிலும் அவர் ஒத்துழைக்கவில்லை. தொடர் முயற்சியின் பலனாக இரவு 9 மணியள வில் குறித்த இளைஞன் கோபுரத்தில் இருந்து பாதுகாப்பான முறையில் கீழிறக்கப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டிருந்தார்.

சம்பவத்தை கேள்வியுற்று வீதியால் சென்றவர்கள், அயல் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் அங்கு திரண் டிருந்ததுடன் சுமார் மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாக அப்பகுதி யில் பரபரப்பான சூழல் நிலவியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-100)


## கூட்டுப்பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஓக.25
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணை யில் யாழ். நல்லூர் ஸ்ரீ கந்த சுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வுகள் செப்ரெம்பர் 2ஆம் திகதி திங்கட்கிழமை வரை இடம்பெ றவுள்ளன. மட்டுவில் ஓம் நமசி வாய பஜனைக் குழுவினரின் பஜனைநிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெறவுள்ளது. (ஒ-ரி)

## ஆட்டுக்கடா வாகனத்தில் எழுந்தருளிய நல்லூரான்!

*யாழ்ப்பாணம், ஓக.25*
*நல்லூர்க்கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருவி ழாவின் 15 ஆம் நாள் மாலை உற்சவத்தை முன் னிட்டு வெள்ளி ஆட்டுக் கடா வாகனத்தில் எழுந்த ருளி பக்தர்கள் புடைசூழ வெளிவீதி உலா வந்து அருள்பாலித்தார்.*
*(ஒ-45-100)*








### நல்லூரில் திவ்ய தரிசனம் காண வாரீர்

மனதினில் முருகன் இருக்கின்றான்
அவன் கனவிலும் காட்சி தருகின்றான்
தினம் தினம் அவன் நாமம் செப்பிடு
வோம் அவன் நினைவுகள்
நல்லூரில் தெரிகின்றது.

(மனதினில்)...

சிவசின்னம் அணிந்த
அடியாரெல்லாம் முருகன் கோவில்
வலம்வந்து தொழுகின்றார்
தவமாய் விரதம் இருந்தடியார்
நாம பஜனை செய்து
துதிகின்றார் உவந்தே
உணவுத் தானம் செய்வோர்
அடியரை முருகனாய்த்
தொழுகின்றார் அவமே
போக்காது பவனி காண்போர்
அருள்மழையினிலே திளைக்கின்றார்

(மனதினில்)...

நாத மணியோசை
கேட்கையிலே முருகன்
திவ்ய தரிசனம் கண்டிடுவார்
வேத ஒலிகள் முழங்கையிலே
முருகன் தீப தரிசனம் பெற்றிடலாம்
நாத முழக்கம் கேட்கையிலே
முருகன் தோகை மயிலினில்
தோன்றிடுவான் பாத
தரிசனம் காணும்
பக்தரெல்லாம் அரோகரா! வேலா
என்று சொல்வார்

(மனதினில்)...

■ எஸ். சிவானந்தராஜா

### வேலை வணங்குவதே வேலை

காலையிலும் மாலையிலும்
கைகூப்பியே கந்தன்
வேலை வணங்குவதே
வேலையென மேலை நாள்
ஓதும் புலவோர் உரைப்படி
நல்லூர்ப் பதியில் சூது தவிர்
வேலைத் துதி

■ இ. சிவசங்கர்

நல்லை நகர் காவலனே முருகா
அல்லாடுகிறது எம்மினம் இங்கு
தொல்லை தருவோர் தொலைத்தி
டவே வல்லவேல் தாங்கி நீயும் வா

பச்சை மயில் வாகனா போதை
யில் இச்சை கொண்டு சீரழிவேர்
சமூகத்தில் மிச்சம் மீதியான எம்
இளைஞர் யுவதிகள் அச்சமின்றி
வாழ்ந்தி அருள்தாராயோ நீ

தொடர் கதையாய் தொடரும் எம்
இடர் அனைத்தும் தீர்த்து வைக்க
சுடர் வடிவேல் ஏந்தியே நீயும்
படர் தோகை மயிலேறி வாமுருகா

கான மயில் நாதனே போதைப்
பொருளால் மானம் மதிகெட்டு
ஆயுள் அற்பமான ஈனர்கள் இய
லுமானவராகி வரவே வானவர்
தலைவா வரமளித்திடுவீர்

பொல்லாப் போதைப்பொருள் தரு
வோர் இல்லாது ஒழிந்து போக
உன் துணை அல்லாது வேறு கதி
எமக்கில்லையப்பா நல்லூர்
வேலவா உன்னடி சரணமையா

■ கி. வே. கிருஷ்ணானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**"நான் உங்களுக்கு மேல் இருக்கும் நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டவன் அல்ல இந்நாட்டின் முதலாவது மக்கள் சேவையாளனாவேன்"**

**இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அடுத்த ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்ளவுள்ள நிலையில் நாட்டின் அரச மற்றும் அரச சேவைக்காக நீங்கள் ஆற்றும் அர்ப்பணிப்பான சேவை தொடர்பில் உயர் நன்மதிப்பையும், அது தொடர்பில் உயர்ந்த கௌரவத்தையும் நான் கொண்டுள்ளேன். அரச பணியில் 14 மில்லியன் பேர் வரையில் ஈடுபட்டுள்ள நிலையில், உங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுடன், உங்கள் பெருமையை பேணுவது எனது எதிர்பார்ப்பாகும்.**

- வாழ்க்கை செலவுக்கு பொருத்தமான சம்பளத்தை பெற்றுக் கொடுப்பது.
- ஒட்டு மொத்த அரச சேவையாளர்களின் அடிப்படை சம்பளத்தை 2025 ஜனவரி மாதம் முதல் ஆகக்குறைந்தது 24% இனால் உயர்த்துவது.
- சகல அரச சேவையாளர்களின் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவை ரூ. 25,000 வரை அதிகரிப்பது.
- அரச சேவையாளர்களுக்கு கொடுப்பனவுகளுடன் ஆகக்குறைந்தது ரூ. 57,500 எனும் சம்பளத்தை வழங்குவதுடன் இதனை அடுத்த ஆண்டுக்கான சம்பள உயர்வுடன் பொருந்தச் செய்வது.
- சேவை வினைத்திறன் அடிப்படையிலான ஊக்குவிப்பு பணிக் கொடுப்பனவு வழங்குவது.
- தற்போது காணப்படும் வரி விலக்கு எல்லையை தொடர்ந்தும் பேணி, அரச சேவையாளர்கள் பெரும்பாலானோரின் தனியார் மாத வருமானத்தின் மீது அறவிடப்படும் 6% முதல் 36% வரையான வரியை, 1% இலிருந்து 24% ஆக குறைப்பது.
- பணிக்கு இணைத்துக் கொள்வது மற்றும் பதவி உயர்வுகளுக்கான தகைமையை திறமை, ஆற்றல்களை கவனத்தில் கொண்டு வெளிப்படையான முறையில் முன்னெடுப்பது.
- தமது நிரந்தர வதிவிடத்துக்கமைய சேவை நிலையத்தை பெற்றுக் கொள்ளும் திட்டமிடப்பட்ட செயற்பாடு.
- அரச சேவையாளர்களுக்காக காணப்பட்ட வீட்டு மற்றும் கடன் பிரேரணை திட்டத்தை மீண்டும் செயற்படுத்துவது.
- அரச சேவையாளருக்கு எந்தவொரு அவசர தேவையின் போதும் கருமமாற்றும் ஐந்து நாட்களினுள் பெற்றுக்கொள்ளக்கூடிய, சம்பளத்தைப் போன்று பத்து மடங்கு வரை இடர் கடன் வழிமுறை.
- ஓய்வூதியம் பெற ஆரம்பிக்கும் முதல் மாதத்திலிருந்தே ஓய்வூதிய கொடுப்பனவை பெற்றுக்கொடுக்கும் துரித நடவடிக்கை.

கௌரவத்துக்குரிய நண்பர்களே, எந்தவொரு அரசியல் கட்சிக்கும் பக்கசார்பாக இராமல், சமூகத்தில் திருப்திகரமாக அமைந்திருக்கும் பெருமைக்குரிய அரச சேவையை நான் எப்போதும் நிலைநாட்டுவேன்.

நாட்டின் அபிவிருத்திக்காக எப்போதும் அர்ப்பணிப்புடன் செயலாற்றும் அரச பணியில் ஈடுபட்டுள்ள உங்கள் அனைவருக்கும் எமது தேசத்தை வெற்றியடையச் செய்வதற்காக என்னுடன் இணைந்து கொள்ளுமாறு நான் மிகவும் கௌரவத்துடன் அழைக்கின்றேன். அனைவருக்கும் வெற்றியை வழங்கும் ஐக்கியமான நாட்டை கொண்டிருக்க நாம் ஒன்றிணைவோம்.

நான் உங்களின் நண்பன்,

சஜித் பிரேமதாச
ஜனாதிபதி வேட்பாளர்
ஐக்கிய மக்கள் கூட்டணி

සජිත් ප්‍රේමදාස
சஜித் பிரேமதாச
**Sajith Premadasa**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாரணை நிறைவு

கொழும்பு, ஓக. 25

நிகழ்நிலை காப்புச்சட்டத்துக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் மீதான விசாரணைகள் யாவும் முடிவடைந்துள்ளதாக உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது. இந்த மனுக்களின் மீதான தீர்ப்பு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு அனுப்பி வைக்கப்படும் என மனுக்களை விசாரணை செய்த உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் தெரிவித்துள்ளது. (ஒ-6)

# மன்னார் மாவட்டத்தில் டெங்கு அதிகரிப்பு



மன்னார், ஓக. 25

**மன்னார் மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண காலநிலை மற்றும் மக்கள் வேறு இடங்களுக்குச் சென்று வருகின்றமையால் கடந்த காலங்களைவிட இம்முறை மன்னார் மாவட்டத்தில் டெங்குப் பரவல் அதிகரித்த நிலையில் காணப்படுவதாக மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.**

மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வருகிற நிலையில் அவற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பான அவசர கலந்துரையாடல் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

இங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மன்னாரில் இதுவரைக்கும் 228 பேர் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். மன்னார் நகரம், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சில கிராமங்களில் டெங்கு நோய்ப் பரவல் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதுதொடர்பில் நடத்தப்பட்ட கலந்துரையாடலுக்கு அமைவாக மக்களால் வீடுகளில் வளர்க்கப்படுகின்ற அலங்கார பூதாவரங்களில் நீர் காணப்படுவதனால் அவற்றில் டெங்கு நுளம்பின் குடம்பிகள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஒவ்வொரு திணைக்களங்களிலும் டெங்கு தொடர்பில் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் ஊடாக விடயங்கள் அந்தந்த அலுவலகங்களில் டெங்கு நுளம்பின் பரவலைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் -என்றார். (ஒ-56,60)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** விழிப்புடன் செயற்பட வேண்டிய நாள். செயல்களில் குழப்பம் ஏற்படும். அதிர்ஷ்டமான நாள். வேலைகளில் கவனம் செலுத்துங்கள். எதிர்பார்த்த வருமானம் வரும். எதிர்ப்பு விலகும். திட்டமிட்டு செயற்பட வேண்டிய நாள்.

**இடபம்:** கவனமாக செயற்பட வேண்டிய நாள். வியாபாரத்தில் எதிர்பார்ப்பு தள்ளிப்போகும். தேவையற்ற அலைச்சல் ஏற்படும். முயற்சி வெற்றியாகும் நாள். எதிர்பார்ப்பு நிறைவேறும். தேவை பூர்த்தியாகும்.

**மிதுனம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மற்றவர்களுடன் பேசும் போது மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொறுமை அவசியம்.

**கடகம்:** தடைகளைத் தாண்டி வெற்றிபெற வேண்டிய நாள். உங்கள் முயற்சியால் வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் உண்டாகும். நட்புகளால் நலம்காணும் நாள். உங்கள் மனக்குழப்பம் விலகும். முயற்சிகளில் வெற்றி உண்டாகும்.

**சிம்மம்:** திட்டமிட்டுச் செயற்பட வேண்டிய நாள். பணிபுரியும் இடத்தில் சில நெருக்கடி தோன்றும். மனக்குழப்பம் அதிகரிக்கும். பிரச்சினை விலகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் வரும். இறையருளால் முன்னேற்றம் காணும் நாள்.

**கன்னி:** நெருக்கடிக்கு ஆளாகும் நாள். உங்கள் முயற்சியில் சங்கடம் தோன்றும். மனதில் தேவையற்ற குழப்பம் உண்டாகும். முயற்சியால் முன்னேற்றம் காணும் நாள். திட்டமிட்டுச் செயற்படுவீர்.

**துலாம்:** புதிய முயற்சிகளை தவிர்க்க வேண்டிய நாள். பணிபுரியும் இடத்தில் வாக்கு வாதங்களைத் தவிர்ப்பது நல்லது. நினைத்ததை சாதிக்கும் நாள். உடல்நிலை சீராகும். எதிர்ப்பு விலகும். கேட்ட இடத்தில் இருந்து உதவி கிடைக்கும்.

**விருச்சிகம் :** பிறரை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள். செயல்களில் நெருக்கடி தோன்றும். எதிர்பார்ப்பு இழுபறியாகும். முன்னேற்றமான நாள். இழுபறியாக இருந்த வேலை நடந்தேறும்.

**தனுசு:** திட்டமிட்டு செயற்பட வேண்டிய நாள். நம்பிக்கையுடன் மேற்கொண்ட முயற்சியில் இழுபறி உண்டாகும். உங்கள் செல்வாக்கு உயரும் நாள். ஒரு சிலருக்கு புதிய பொறுப்பு கிடைக்கும்.

**மகரம்:** எதிர்ப்பை சந்திக்கும் நாள். தொழில் குறித்த சிந்தனை மேலோங்கும். வரவு செலவில் எதிர்பாராத நெருக்கடி ஏற்படும். முயற்சிகள் வெற்றியாகும் நாள். வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**கும்பம்:** பணிபுரியும் இடத்தில் கவனமாக செயற்பட வேண்டிய நாள். உங்கள் அலட்சியத்தால் சில சங்கடம் உண்டாகும். உங்கள் விருப்பம் நிறைவேறும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உங்கள் செயல் வெற்றியாகும்.

**மீனம்:** எதிர்பார்ப்பு இழுபறியாகும் நாள். இன்று வார்த்தைகளில் நிதானம் அவசியம். உங்கள் கோபம் உங்களுக்கே எதிராகும். நன்மையான நாள். உங்கள் சங்கடம் விலகும். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கும்.

# கைப்பணிப் போட்டி; ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஓக.25

கைப்பணிக் கைத்தொழிலில் ஈடுபடுபவர்களை தேசிய ரீதியில் கௌரவப்படுத்தும் நோக்கில் கைத்தொழில் அமைச்சினால் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவின் வழிகாட்டலுடன் தேசிய அருங்கலைப் பேரவையால் 'சில்பி அபிமானி' தேசிய கைப்பணிப் போட்டியும் விருது வழங்கலும் மற்றும் கண்காட்சிக்கான மாகாணமட்டப் போட்டிகள் வடமாகாண தொழிற்றுறைத் திணைக்களத்தால் யாழ். மத்திய கல்லூரியில் எதிர்வரும் 27, 28 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களைப் பிரதேச செயலகங்களில் பெற்றுக்கொள்ளலாம். போட்டிக்கான ஆக்கங்களை பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் அடுத்தமாதம் 24 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்கவேண்டும். களிமண், தும்பு, ஓலை,புல், பிரம்பு, மூங்கில் சார்ந்த ஆக்கங்கள், உலோக கைப்பணிப் பொருள்கள், நெசவு உற்பத்திகள், சங்கீத உபகரணங்கள், துணிகளிலான கைப்பணிப் பொருள்கள், பற்றிக், ரேந்தை, மரம் சார்ந்த பொருள்கள், கல் மூல கைப்பணிப் பொருள்கள், கடதாசி சார்ந்த உற்பத்திகள், பாரம்பரிய சிற்பங்கள், நினைவுச் சின்னங்கள், சிப்பி ஓடுகள், நானாவித கைப்பணிப் பொருள்கள் போன்றவை போட்டிக்கான பிரதான கைப்பணித்துறைகளாகும் என வடமாகாண தொழிற்றுறை பணிப்பாளர் வனஜா செல்வரட்ணம் அறிவித்துள்ளார். (ஒ-25)

தமிழாராய்ச்சிப் படுகொலை

# நினைவேந்தல் தூபி தன்னார்வலர்கள் துப்புரவு

யாழ்ப்பாணம், ஓக.25

வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்னால் உள்ள தமிழாராய்ச்சி படுகொலை நினைவேந்தல் தூபி வளாகமானது பராமரிப்பு இன்றி புற்கள் வளர்ந்திருந்தமை குறித்து ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில் தன்னார்வ ரீதியாக முன்வந்த சிலர் அந்தப் பகுதியில் வளர்ந்திருந்த புற்களை வெட்டிச் சுத்தம் செய்துள்ளனர்.

1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதிவரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற 4 ஆவது உலக தமிழாராய்ச்சி மாநாட்டின் நிறைவில் பொலிஸார் நிகழ்த்திய வன்முறையில் ஒன்பது பேர் படுகொலை செய்யப்பட்டதை நினைவுபடுத்தும் வகையில் இத்தூபி அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-25,27)

# உதவித் திட்டம்

கொடிகாமம், ஓக. 25

கொடிகாமம் நட்சத்திர மஹால் வழங்கும் சாதனை நிகழ்வும் உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வும் நட்சத்திரமஹாலின் உரிமையாளர் த.பரமானந்தம் தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட செயலாளர் க.கனகேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-22,159)

# காணி அபகரிப்பு

முல்லைத்தீவு, ஓக.25

புதுக்குடியிருப்பு, தேவிபுரத்தில் உள்ள சுடலைக்காணியின் ஒருபகுதியை தனிநபர் ஒருவர் அடாத்தாகப் பிடித்துள்ளமை குறித்து அந்தப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

3.5 ஏக்கர் பரப்புக் கொண்ட காணி எனப் பிரதேசசபையால் எல்லைப்படுத்தப்பட்டு கிராமமட்ட அமைப்புகளினால் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. நிதிப் பற்றாக்குறை காரணமாகப் பகுதியளவில் தூண்கள் போடப்பட்ட நிலையில் தனிநபர் ஒருவர் அரை ஏக்கர் காணியை கனரக இயந்திரத்தின் மூலம் துப்புரவு செய்து அதனை கையகப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர். (ஒ-25, 19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீனவர்களின் போராட்டத்துக்கு மன்னாரில் மாபெரும் அழைப்பு

மன்னார், ஓக. 25
மீனவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து மாபெரும் போராட்டத்தை அடுத்த மாதம் 10ஆம் திகதி முன்னெடுக்கவுள்ளதாக வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையம் அறிவித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் பொதுக்கூட்டத்திலேயே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எல்லை தாண்டிய இந்திய மீனவர்கள் பிரச்சினை, உள்ளூர் இழுவைமடி பிரச்சினை, தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைமையைப் பயன்படுத்தும் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை கட்டுப்படுத்தக் கோரியே இப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

இதேவேளை, வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்துக்கு புதிய நிர்வாகமும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. தலைவராக கிளிநொச்சி மாவட்ட மீனவ பிரதிநிதி ஜோசப் பிரான்சிஸ், செயலாளராக மன்னார் மாவட்டத்திலிருந்து மீனவ பிரதிநிதி முகமட் ஆலம், பொருளாளராக யாழ்ப்பாணத்திலிருந்து திருமதி பிரியாவும் தெரிவு செய்யப்பட்டனர். (ஓ-56)

## 20 குடும்பங்கள் காற்றால் பாதிப்பு

யாழ்ப்பாண, ஓக. 25
யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த இரண்டு நாள்களாக வீசும் கடும் காற்று காரணமாக 20 குடும்பங்களைச் சேர்ந்த 67 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் தரவுகளின்படி இதில் 18 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. மேலும் பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியில் புலோலி நாகதம்பிரான் ஆலயமும் கோப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட உரும்பிராய் சைவத் தமிழ் பாடசாலையும் சேதமடைந்துள்ளன. (ச-26)

## ரணிலின் சொத்துப் பிரகடனம்: ஆராய்வதே எமது முதல்பணி

தேசிய மக்கள் சக்தி தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 25
ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சொத்துகளை பற்றி புலனாய்வு செய்வதே தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்காவின் முதல் பணி என தேசிய மக்கள் சக்தி நிறைவேற்று குழு உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர்களின் சொத்து பிரகடனத்தில் தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்காவின் சொத்துக்களை விட ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் சொத்துகள் குறைவாக காணப்படுகின்றதே என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கே சுனில் ஹந்துன் நெத்தி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுவதை மக்கள் ஒரு போதும் நம்பமாட்டார்கள். சொத்துப் பிரகடன விடயத்திலும் ரணில் ஒரு தந்திரத்தை கையாண்டுள்ளார். ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததும் அவரின் சொத்துகளை பற்றி புலனாய்வு செய்வதே தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்காவின் முதல் பணி- என்றார். (ஓ-6)

## சமூகவலைத்தளத்தில் அவதூறு:

# ஓரேநாளில் மட்டும் 3,000 முறைப்பாடு!

### வியூ அமைப்பின் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 25
**ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைகள் ஆரம்பமாகியுள்ள நிலையில் ஒரேநாளில் மாத்திரம் சமூக வலைத் தளங்களில் முன்னெடுக்கப்பட்ட அவதூறுப் பரப்புரைகள் தொடர்பில் 3 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதாக வியூ அமைப்பின் தவிசாளர் ரவீந்திர தெரிவித்தார்.**

ஜனாதிபதித் தேர்தலின் போது ஊடகவியலாளர்களின் கடமை மற்றும் பொறுப்புகள் தொடர்பான பயிற்சி வேலைத்திட்டம் யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றபோது கருத்துத் தெரிவித்த வியூ அமைப்பின் தவிசாளர் மேலும் தெரிவித்ததாவது:-

சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்துவது கடினம். சில தினங்களுக்கு முன்னர் ஒரேநாளில் மாத்திரம் 3 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. அவை சமூக வலைத்தளத்தில் முன்னெடுக்கப்பட்ட அவதூறு பரப்புரைகளுடன் தொடர்புடையவை. இவ்வாறான அவதூறு பரப்புரைகளை தனிநபர் ஒருவர் முன்னெடுக்கமுடியாது. திட்டமிட்ட ரீதியில் ஒரு குழு இதைச் செய்திருக்கவேண்டும் - என்றார். (ஓ-5)

## தமிழன்தான் கிழக்கை ஆளவேண்டும்

### பிரசாந்தன் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஓக. 25
கிழக்கு மாகாணத்தை தமிழர்தான் ஆளவேண்டும். இதில் எமது கட்சி உறுதியாக உள்ளது என்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் செயலாளர் பூபாலப்பிள்ளை பிரசாந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து மட்டக்களப்பில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கிழக்கு மாகாண தமிழர்களின் அரசியல் அதிகாரத்தை எமது தலைவர் பிள்ளையான்தான் மீட்டெடுத்தார். அதேபோல நெருக்கடி நிலையிலிருந்து இந்நாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீட்டெடுத்தார்.


மஹிந்த ராஜபக்ச எமது நண்பர், நாமல் ராஜபக்ச எமது நண்பர், நண்பர்களுக்காக, உறவினர்களுக்காக வாக்கு சேகரிக்கும் நேரம் அல்ல இது. நாட்டுக்கு சிறந்த தலைமைத்துவம் தேவை. அதனால்தான் ரணிலுக்கு ஆதரவளித்துள்ளோம்.

கிழக்குத் தமிழர்களை தலைநிமிர்ந்து வாழ வைப்பதற்காகவே எமது கட்சி ஆரம்பிக்கப்பட்டது.

சஜித் பிரேமதாஸ ஆட்சிக்கு வந்தால் கிழக்கு மாகாணத்துக்கு முஸ்லிம் ஆளுநர் வேண்டுமென முஸ்லிம் காங்கிரஸ் உடன்படிக்கை செய்துள்ளதாம்.

கிழக்கு மாகாணம் எங்களுக்குரியது. தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ்வதற்காக எமது இளைஞர்கள் இந்த மண்ணில் உயிரையும், உடலையும் கொடுத்துள்ளனர். எனவே, எமது கிழக்கு மாகாணத்தை ஆள்வது தமிழராக இருக்கவேண்டும். அதுவும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியாக இருக்க வேண்டும்.


ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நடைபெறும் நாடாளுமன்ற தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி மூன்று ஆசனங்களைக் கைப்பற்றும், பிள்ளையான் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக இருப்பார் - என்றார். (ஓ-44)



## இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஓக.25
உடுவில் பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் 35 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களுக்கான இலவச மருத்துவ முகாம் பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் பல உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (ரி-66)




யாழ்ப்பாணம், ஓக.25
சண்டிலிப்பாய் பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினரால் நவாலி கிழக்கு, நவாலி தெற்கு கிராம அலுவலர் பகுதிகளைச் சேர்ந்த யுவதிகளுக்கான அழகுநாச் சேலை அணியும் பயிற்சிநெறி நவாலி தெற்கு முதியோர் சங்க மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. (ச-25-66)


## சிற்றூழியர் தேவை

உதயன் நிறுவனத்துக்கு அலுவலக சிற்றூழியர்கள் தேவைப்படுகின்றனர். தகமையுடையவர்கள் நாளை திங்கட்கிழமை (26.08.2024), நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை (27.08.2024) ஆகிய தினங்களில் நேரில் வரவும்.

## காவலர் தேவை

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள வீடொன்றுக்கு, பாது காவலர் தேவைப்படுகின்றார். தேக ஆரோக்கியமும் தகமையும் உள்ளவர்கள் தொடர்பு கொள்ள வும்.

தொடர்புக்கு: 071 220 0008


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# சதுரங்க வேட்டை

கடந்த ஆண்டு நடத்தப்பட்டிருக்கவேண்டிய உள்ளூராட்சித் தேர்தல் நிதி அமைச்சரும், ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவால் நடத்தப்பட்டிருக்கவில்லை. இதுதொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு மீதான தீர்ப்பை உயர்நீதிமன்றம் கடந்த வியாழக்கிழமை வழங்கியது. அதில் உள்ளூராட்சித் தேர்தலை விரைவில் நடத்தவேண்டும் என்பது மாத்திரமல்லாமல், தேர்தலை நடத்தாமல் விட்டதன் ஊடாக மக்களின் வாக்குரிமையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீறிவிட்டார் என்றும் சுட்டிக்காட்டியது. மக்களின் வாக்குரிமையோடு விளையாடுவது ஒன்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குப் புதிதல்ல. நல்லாட்சிக் காலத்தில் பிரதமராக இருந்து கொண்டு உள்ளூராட்சித் தேர்தல் நடத்துவதை காலம்தாழ்த்தினார், மாகாண சபைகளுக்கு தேர்தலே நடத்த முடியாதளவுக்கு அதை கிடப்பில் போடச்செய்தார் என தேர்தல் தொடை நடுங்கி என்று பெயரெடுத்தவர் ரணில் விக்கிரமசிங்க.

அதைவிட நீதிமன்றத்தின் தீர்ப்புக்களை எல்லாம் மதிப்பவர் அல்லர் ரணில் விக்கிரமசிங்க. நீதிமன்றம் ஒன்றைச் சொன்னால், தானொரு வியாக்கியானத்தைக் கூறுவார். இல்லையேல், நீதிமன்றத்தையும், நாடாளுமன்றத்தையும் மோதவிடுவார். அல்லது நீதிமன்றத்தின் சுயாதீனத்தை கேள்விக்குட்படுத்தும் வகையில் மிரட்டுவார். இறுதியாக தேசபந்து தென்னக்கோன் விடயத்தில் ரணில் எத்தகைய நாடகம் ஆடினார் என்பது வெள்ளிடைமலை. தான் ஜனாதிபதி வேட்பாளர், தன்னால் நியமனங்கள் வழங்கப்பட்டால் எதிர்க்கட்சிகள் அதை விமர்சிக்கும் என்று சொல்லிவிட்டு, அரசியல் நியமனங்களை அள்ளி அள்ளி வழங்குகின்றார். தேர்தல் கையூட்டை பகிரங்கமாகவே முன்னெடுக்கின்றார். இவ்வாறான ஜனநாயகக் கொலையாளியாக தன்னை அடையாளப்படுத்தி நிற்கின்றார் ரணில் விக்கிரமசிங்க. பின்கதவால் ஜனாதிபதி பதவிக்கு வந்தவர் ரணில் விக்கிரமசிங்க. அவர் அந்தப் பதவியை எப்பாடுபட்டாவது இன்னொரு தவணை வரையில் தக்கவைப்பதற்கே முயல்கின்றார். அதனால்தான், நாட்டில் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக எந்தவொரு தேர்தலையும் நடத்துவதில்லை என்பதில் உறுதியாக இருந்தார். சட்டரீதியாக தேர்தல்கள் ஆணைக்குழு தனது அதிகாரத்துக்கு உட்பட்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த முற்பட்டபோது தனது வழமையான கைங்கரியத்தை காண்பித்து தேர்தல்கள் ஆணைக்குழுவையே சிதைத்தார்.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான நீதிமன்றத் தீர்ப்பு வெளியான பின்னர் பேசிய ரணில் விக்கிரமசிங்க, மக்களின் பொருளாதாரமே முக்கியமானது என்பதால் தேர்தல் நடத்தாமை தொடர்பில் தான் கவலையடையவில்லை என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

மக்களின் பொருளாதார நலனுக்காகத்தான் ரணில் செயற்படுகின்றார் என்றால், உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டு அரைக் கிணறு தாண்டிய பின்னர் அதை நிறுத்தியதன் ஊடாக அந்தத் தேர்தலுக்காக வீணாக பல மில்லியன் ரூபா மக்கள் பணம் செலவிடப்பட்டிருக்கின்றது. எந்தவொரு பிரயோசனமும் இல்லாமல் அது வீணாகிவிட்டது. அடுத்து மக்களின் பொருளாதார நலன்தான் முக்கியமானது என்றால், தனது நண்பரும் முன்னாள் மத்திய வங்கி ஆளுநரும் பிணைமுறி மோசடி குற்றவாளியுமான அர்ஜுன மகேந்திரனுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுத்தார்? இந்த நாட்டின் பொருளாதாரச் சீர்கேட்டுக்கு காரணமானவர்கள் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தவர்களுக்கு எதிராக என்ன நடவடிக்கையை ரணில் எடுத்தார்? ராஜபக்சக்கள் கொள்ளையடித்த பணத்துக்கு அப்பாவி மக்கள்தான் இன்று வரியாக தங்கள் குருதியைக் கொடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட ராஜபக்சக்களிடமிருந்து கொள்ளையடித்த பணத்தை மீட்டாரா ரணில்? எதுவுமே செய்யவில்லை. ஆனாலும் நாட்டை ரணிலே மீட்கக்கூடியவர் என்று நம்பும் மக்களும் இருக்கவே செய்கின்றனர். அவர்களை நம்பியே தன் சதுரங்கவேட்டையை ஜனாதிபதித் தேர்தலில் ரணில் ஆரம்பித்திருக்கிறார். அவரது காய்நகர்த்தல்கள் இம்முறையும் எடுபடுமா என்பது செப்ரெம்பர் 21 இல் தெரிந்துவிடும்.



# நிலுவையிலுள்ள வரி ரூ. 1,131.5 பில்லியன்

**கொழும்பு, ஓக. 25**

**இலங்கையில் கடந்த ஆண்டு செலுத்தத் தவறிய மொத்த வரித்தொகை ஆயிரத்து 131.5 பில்லியன் ரூபாய் என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளிவிவரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள சிங்கள ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அதிகமான தொகை உள்நாட்டு வருமான வரித் திணைக்களத்துக்கு இழக்கப்பட்டுள்ளது. திணைக்களத்துக்குச் செலுத்தத் தவறியுள்ள மொத்த வரியின் தொகை ஆயிரத்து 66 பில்லியன் ரூபாவாகும்.

உள்நாட்டு வருமான வரித் திணைக்களத்துக்கு இழக்கப்பட்ட வரித்தொகையில் 18 ஆயிரத்து 800 கோடி ரூபாய் நிலுவையிலுள்ள தொகை. 87 ஆயிரத்து 880 பில்லியன் ரூபா தடுப்பு வரியாகும்.

இலங்கை சுங்கத் திணைக்களத்துக்குச் செலுத்தத் தவறிய வரியின் மொத்தப் பெறுமதி 58.6 பில்லியன் ரூபாவாகும். இலங்கை கலால் திணைக்களத்துக்குச் செலுத்தவுள்ள தொகை 6.9 பில்லியன். 4 ஆயிரத்து 479 பேர் வரி செலுத்தத் தவறியுள்ளதாகவும் அவர்களுள் ஒரு பில்லியனுக்கும் அதிகமான வரியை செலுத்த தவறியவர்கள் 90 பேர் உள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## கொள்கைகளை வெளியிட வேட்பாளர்களுக்கு வாய்ப்பு

கொழும்பு, ஓக. 25

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஜனாதிபதி வேட்பாளர்கள் அரச வானொலி மற்றும் தொலைக்காட்சிகளில் எதிர்வரும் 6ஆம் திகதி முதல் தமது கொள்கைகளை முன்வைக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வேட்பாளரும் அரசாங்க வானொலி மற்றும் தொலைக்காட்சியில் தங்கள் கொள்கைகளை முன்வைக்க பதினைந்து நிமிடங்களுக்கு மூன்று வாய்ப்புகள் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## கருத்துக்கணிப்பில் ஏமாற வேண்டாம்!

கொழும்பு, ஓக. 25

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பல்வேறு தரப்பினர் மேற்கொண்டுள்ள கருத்துக்கணிப்புகளை நம்பி ஏமாறவேண்டாம் என தேர்தல்கள் ஆணைக்குழு, வாக்காளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. கருத்துக்கணிப்புகளின் அடிப்படையில் தமது கருத்தை மாற்ற வேண்டிய அவசியமில்லை என்றும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (ச-இ)

## இராஜதந்திரிகளை சந்திக்கும் வேட்பாளர்கள்!

கொழும்பு, ஓக. 25

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் இராஜதந்திரிகளை சந்தித்து தமது திட்டங்கள் தொடர்பில் விளக்கமளிக்கத் திட்டமிட்டுள்ளனர். ஜனாதிபதித் தேர்தலுக்கான விஞ்ஞாபனத்தை முன்வைத்த பின்னரே இந்தச் சந்திப்பை நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-44)

## ஐக்கிய தேசியக் கட்சி சம்மேளனக்கூட்டம் இன்று

ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட சம்மேளனக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நடைபெறவுள்ளது. தமது கட்சித் தலைவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுயாதீன வேட்பாளராகக் களமிறங்கும் முடிவுக்கு கட்சியின் சம்மேளனக் கூட்டத்தில் அனுமதி பெறும் நோக்கிலேயே இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு திரும்பியுள்ள தலதா அத்துகோரள உள்ளிட்டவர்களும் விசேட கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர் என்று தெரியவருகிறது. (ச-44)

**நாளை**

**26.08.2024**

திங்கட்கிழமை - ஆவணி - 10

சுபநேரம் : 12.05 - 01.35

ராகுகாலம் : 07.35 - 09.05

**நாளொரு நல்வார்த்தை**

எல்லாத் துன்பங்களுக்கும் இரண்டு மருந்துகள் உண்டு.
ஒன்று காலம்
இன்னொன்று மௌனம்.

-அப்துல் கலாம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரக்கன்றுகள் நடுகை

யாழ்ப்பாணம், ஓக.25
இந்திய றோட்டரிக் கழக அங்கத்தவர்களின் பங்குபற்றலுடன் தனவந்திரி செயற்றிட்டத்தின் தலைவர் றோட்டரியன் தனசேகர் தலைமையில் மயிலிட்டிதெற்கு கட்டுவன் பகுதியில் அண்மையில் மரக்கன்றுகள் நடப்பட்டன. சுன்னாகம் றோட்டரிக்கழகம், இந்திய றோட்டரிக்கழக அங்கத்தவர்கள், கிறீன்லேயர் அமைப்பு மற்றும் வலிகாமம் வடக்கு பிரதேசசபையும் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்தன. நல்லூர், சுன்னாகம் பாரம்பரிய றோட்டரிக் கழகம் மற்றும் யாழ்ப்பாண கழகங்களின் ஊடாகத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கும் உதவித் திட்டங்கள் வழங்கப் படவுள்ளன. (ச-45-20)



குரும்பைகட்டி முன்பள்ளி மழலைகளின் விளையாட்டு விழா குரும்பைகட்டி முன்பள்ளியின் முகாமைத்துவக் குழுத் தலைவர் க.சந்திரபவான் தலைமையில் புலோலி முன்பள்ளி முன்றலில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் வடக்கு மாகாணப் பிரதிப் பதிவாளர் நாயகம் க.நடராசா பிரதம விருந்தினராக கலந்துகொண்டார். (ரி-66)

# மதங்கள் கடந்து உதவுவதே சந்நிதி ஆச்சிரமம்

*மோகன் சுவாமிகள் பெருமிதம்*

யாழ்ப்பாணம், ஓக.25
செல்வச்சந்நிதியான் ஆச்சிரமம் இன, மத, மொழிகளைக் கடந்து, இலங்கையின் பல பாகங்களிலும் கஷ்டப்படுவர்களுக்கு உதவிகளை வழங்கிவருவதையிட்டு பெருமிதம் அடைகிறோம் என்று ஆச்சிரம முதல்வர் மோகன் சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

மோகன் சுவாமிகளின் 75 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு, நடத்தப்பட்ட ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். போர்க்காலத்தில் துவிச்சக்கர வண்டி மூலம் நெல்லை ஏற்றிவந்து உரலில்போட்டு கோது நீக்கி முருகனை நாடிவரும் அடியவர்களுக்கு உணவு சமைத்து வழங்கினோம். இலங்கையிலுள்ள பல பாகங்களிலும் வறியப்பட்ட மக்களுக்கு அவர்களது பிரதேசம் சென்று உணவுப் பொருள்கள், மருத்துவ உபகரணங்கள், பாடசாலை மாணவர்களுக்கான உதவித் திட்டங்கள் எனப் பல்வேறு அறப்பணிகளை ஆற்றி வருகிறோம். எமது ஆச்சிரமத்தில் முஸ்லிம், கிறிஸ்தவ பிள்ளைகளும் உணவு, கல்விக்குத் தேவையான உதவித் திட்டங்களை வழங்கி வருகிறோம். அதேவேளை புலம்பெயர்நாட்டில் வசிக்கும் குடும்பம் ஒன்று காணியை அன்பளிப்பாகத் தந்துள்ள நிலையில் வெளி மவட்டத்திலிருந்து வருகைதந்து யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள மாணவிகள் தங்கக்கூடியவாறு தங்குமிட விடுதியை அமைப்பதற்கு உத்தேசித்துள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-25-20-27)






# கிளி. திருவையாறு மாணவர்கள் சாதனை

கிளிநொச்சி, ஓக.25
மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைமை அலுவலகத்தினால் நடத்தப்பட்ட சுற்றாடல் முன்னோடி தேசிய பாசறை போட்டியின் அடிப்படையில் இலங்கையில் உள்ள அனைத்து மாவட்டங்களில் இருந்தும் தங்க வர்ணப் பதக்கத்துக்கான மதிப்பீட்டில் 75 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக் கொண்ட மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் வடமாகாணத்தை பிரதி நிதித்துவப்படுத்தி தெரிவு செய்யப்பட்ட 10 மாணவர்களில் கிளிநொச்சி, திருவையாறு மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த த.தரணிகா, நீ.சுயாத்திகா, ச.கார்நிலா, இ.கலையரசன், த.தமிழ்நிலவன், ரே.துனசிகன் ஆகிய 6 மாணவர்கள் தங்க வர்ணப்பதக்கங்களைப் பெற்றுக் கொண்டனர். (ச-25, 13)

## தமிழருக்கு அதிகாரப் பகிர்வில்லை

# நாமலின் கருத்தால் பெரமுன பெருமிதம்

கொழும்பு, ஓக. 25
பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்கப்போவதில்லை என தமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் விடுத்துள்ள அறிவிப்பால் பெருமை அடைகின்றோம் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக்கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

மொட்டுக் கட்சி தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதித் தேர்தலில் உள்ள வேட்பாளர்கள் தெற்கில் ஒன்றையும், வடக்கில் வேறொன்றையும் கூறிவருகின்றனர். பொலிஸ், காணி அதிகாரம் வழங்கப்படும் என வடக்குக்குச் சென்று உறுதியளிக்கின்றனர். தமது அரசியல் இலாபத்துக்காக அரசியல்வாதிகள் இவ்வாறு இரட்டை நிலைப்பாட்டைப் பின்பற்றி வருகின்றனர்.

ஆனால், எமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச, வடக்கில் ஒன்றையும், தெற்கில் வேறொன்றையும் கூறப்போவதில்லை என அறிவித்துள்ளார். வடக்கு மக்களுக்குத் தேவையான அனைத்து அபிவிருத்திகளும் வழங்கப்படும் எனவும், அவர்களுக்குத் தேவையான எதிர்காலம் உருவாக்கப்படும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார். தமிழ் வாக்குகள் கிடைக்காது என்பதற்காக அவர் பொய்கூறவில்லை. இதுகுறித்து எமது கட்சி பெருமையடைகின்றது- என்றார். (ஒ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நீங்கள் க.பொ.த உயர்தர கல்வி தோற்றியிருப்பவராயின் [கற்றவராயின்]

இதோ உங்களுக்கு கனடா செல்லக்கூடிய ஓர் அரிய வாய்ப்பு!!!

18 முறையான வேலை அனுமதி பாதை (SX-1) குறுகிய கால திட்டங்கள்

தகைமைகள் :

- க.பொ.த (உயர்தரம்) அல்லது அதற்கு மேல் கல்வி கற்றிருத்தல்
- ஒரு வருடத்திற்கு மேலான தொழில் அனுபவம் கொண்டிருத்தல்.
- 21 – 45 வயதிற்குட்பட்ட ஆண் / பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
- IELTS தேவை இல்லை (இதற்கு பதிலாக கனடாவில் ஆங்கில கல்வி திட்டம் )
- 06 மாத காலம் ஆரம்ப பயிற்சி வழங்கப்படும்.
- விண்ணப்ப அனுமதிக்கான பதிவு கட்டணம் 500.00 கனேடிய டொலர்கள் அறவிடப்படும்.
- பாடநெறிக் கட்டணம் 5000.00 கனேடிய டொலர்கள் விசா அனுமதிக்கு பின் செலுத்தக்கூடிய வாய்ப்பு.
- உங்களது கணவன் அல்லது மனைவி மற்றும் பிள்ளைகளுடன் கனடா செல்ல முடியும் (விதிமுறைகளுக்கு உட்பட்டது)

மேலதிக தகவல்களுக்கு
0777 135 665 - Suganthi
0761 686 824 - Priya
0768 611 266 - Tharsana

AVAILABLE PROGRAMS :

- Pre-Health Science for Health, Wellness / Related Professionals
- Certificate in International Hospitality Management - Hospitality / hotel, Management / Related Background
- Enterprise Risk Management for Management / Related Background
- Pre-Information technology (IT) for IT / Related Background
- School Administration and Management for Education, Teacher and Related Background
- Programming in Business Applications for Business and IT / Related Background
- System Administration for IT / Related Background
- Business Intelligence using Data-warehousing for Business and IT / Related Background
- Project Management and Project Systems for Engineering and IT / Re... Background
- Human Resource Management for HR / Related Background
- Plant Maintenance
- Materials Management for Business, Management / Related background
- Production Planning
- Supply Chain Management
- Sales and Distribution
- Financial Management and Cost Management
- Business Systems Analysis and Design
- ESL : English as Second Language

**Consolidated Academic Lanka (Private) Limited**
No. 22-B, 1st Floor, Station Lane, Nugegoda.
ceo@academiclanka.com / info@academiclanka.com
0112 890 692
www.academiclanka.lk



## கலந்துரையாடல்

கல்முனை, ஓக.25

தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து பரப்புரை நடவடிக்கைகள் முன்னெடுக்கும் வகையில் அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பு கிளை குழு உருவாக்கம் மற்றும் தேர்தல் பரப்புரை ஒழுங்கமைப்புகள் தொடர்பாக அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுடனான கலந்துரையாடல் கல்முனையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதன் அடுத்த கட்ட கலந்துரையாடலை சிவில் சமூக பிரதிநிதிகளும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் இணைந்து கல்முனையில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடத்தத் தீர்மானித்துள்ளனர். (ஓ-25-00)



## யோக்கட் பதனிடும் இயந்திரம் வழங்கல்

முல்லைத்தீவு, ஓக.25

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட குமுழமுனை பிரதேசத்தில் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திற்கு யோக்கட் பதனிடும் இயந்திரம் முள்ளியவளை கிளையின் முகாமையாளர் செல்வரத்தினம் தினேசன் தலைமையில் கொமர்ஷல் வங்கி முள்ளியவளைக் கிளையினால் யோக்கட் இயந்திரம் கடந்த வியாழக்கிழமை வழங்கிவைக்கப்பட்டது. பிரதம விருந்தினராக கொமர்ஷல் வங்கியின் தனிநபர் வங்கிப்பிரிவு மற்றும் உதவி பொது முகாமையாளர் சிவசுப்பிரமணியம் கணேசன் கலந்து கொண்டார். (ஓ-45-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெட்டி பெட்டியாக வாங்கிவிட்டு பொதுவேட்பாளர் மீது விமர்சனம்

## நிறுத்துங்கள்: மீறினால் போட்டுத்தாக்குவோம் என்கிறார் நா.வர்ணகுலசிங்கம்

**யாழ்ப்பாணம், ஓக. 25**

**கோடி கோடியாகப் பெட்டிகளில் பணத்தை வாங்கிவிட்டு தமிழ்ப் பொதுவேட்பாளரை விமர்சிப்பவர்கள் உடனடியாக அதனை நிறுத்தா விட்டால் நேரடியாக பெயர்குறித்து போட்டுத்தாக்க வேண்டிய நிலை ஏற்படும் என வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச உப தலைவர் நாகராசா வர்ணகுலசிங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

தமிழ்ப் பொதுவேட்பாளர் விவகாரம் தொடர்பில் யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழரின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படாது அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்ட நிலையில் தமிழர்கள் ஒரு குடையின்கீழ் ஒன்றிணைந்து ஜனாதிபதித் தேர்தலில் ப.அரியநேந்திரன் பொதுவேட்பாளராக முன்னிறுத்தப்பட்டு சங்குச் சின்னமும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் சில அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடர்பில் விமர்சித்து வருகின்றனர். மக்கள் வந்து எங்களைத்தான் கேட்பார்கள், மக்களுக்குப் பொறுப்புச் சொல்ல வேண்டும் என்று அதற்கு வியாக்கியானம் கூறுகின்றனர். இப்படிச் சொல்லும் இவர்கள் எங்களுடைய மக்களுக்கு என்னத்தைச் செய்து கிழித்தார்கள்? கோடி கோடியாக வேண்டி நிரப்பிக்கொண்டு இருக்கிறார்களே தவிர மக்களுக்கு எதையுமே செய்யவில்லை.

ஆனால் தமிழ் வேட்பாளரை நிறுத்துவதாக அறிவித்த உடன் அதனை விமர்சிக்கின்றனர். தமிழ் வேட்பாளரை நிறுத்தியதும் அவர்களுக்கு குத்துது குடையுது கிண்டுது. உங்களுக்கு என்ன பிரச்சினை? நீங்கள் யாரையும் ஆதரியுங்கள், அவர்களுடன் போய் நில்லுங்கள். எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை.

தமிழ் சிவில் அமைப்புகளும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளும் இணைந்தே தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்தியுள்ளோம். சங்கு முழங்காது ஊதும் எனச் சிலர் சொல்கின்றனர். யாருக்கு ஊதும் என்பதை ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் பார்த்துக்கொள்வோம். சங்கு முழங்கியே தீரும். கோடி கோடியாகப் பெட்டிகளை வாங்கிவிட்டு தமிழ்ப் பொதுவேட்பாளரை விமர்சிப்பதை உடனடியாக நிறுத்திக்கொள்ளவேண்டும். இனிமேலும் விமர்சிப்பீர்களானால் ஒவ்வொருவருடைய பெயரையும் சொல்லிகிழிப்போம் - என்றார். (ஓ-100)


## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**இந்திரா சபாரத்தினம்**

அன்னை மடியில் 10.02.1950 — ஆண்டவன் அடியில் 25.08.2012

ஈராறு வருடங்கள் சென்றாலும் எங்களக்கா !
நினைவுகள் எம் நெஞ்சத்தில் நீங்காமல் என்றென்றும்
அழகு நடை பயிலும் ! அணி வகுத்து தினம் செல்லும் !
பாடல்கள் கேட்கையிலே, பானையில் உலை கொதிக்கையிலே
"அணிலாவுடன்" கதை பேசி "ரைகருக்கு" உணவூட்டி....
எத்தனை எத்தனை நினைவுகள் எம் இதயத்தில் !
அத்தனைக்கும் மத்தியிலே கள்ளமில்லா உங்கள் முகம்
பூப் போல மலர்ந்திருக்கும், புதிய ஒளி வீசி நிற்கும்!!

இல.05, கல்லடி வீதி, சாவகச்சேரி.

குடும்பத்தினர்
"திலக வாசம்"
தபாலக வீதி, சாவகச்சேரி.

(CR/42968) J-1

## விழி நீரால் அஞ்சலிக்கின்றோம்



நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் பணியாளராகக் கடமைபுரிந்து அமரத்துவமடைந்த

**சாந்தலிங்கம் விபுலானந்தன்**

அவர்களின் ஆத்மா நாகபூஷணித்தாயவளின் பாதக் கமலங்களில் நித்திய சாந்தியடைய பிரார்த்திப்பதோடு, பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும் :
சக பணியாளர்கள்
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு.

(cr.49981) (N-1)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1955.01.24 — மறைவு 2023.09.05

திதி : 25.08.2024

**அமரர் பொன்னம்பலம் அழகராஜா**
(ஓய்வு பெற்ற மக்கள் வங்கி உதவி முகாமையாளர்)

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கு, கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட
திரு. பொன்னம்பலம் அழகராஜா அவர்களின் நினைவஞ்சலி

காலமெல்லாம் காத்த கரங்களை தேடியபடி
ஓடி முடிந்ததே ஓராண்டு !
உங்கள் குரல் ஒலிக்கும் என எண்ணியபடி
வாழ்கின்றோம் நாம் அனைவருமே!
மண்ணில் இன்றி விண்ணிலும் வாழும் உங்கள்
ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்.....

தகவல் : பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள்
தொடர்பு :. 0774043264

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 07 1957



மறைவு 23 08 2024

**நாகரத்தினம் தனபாலசிங்கம் (திரவியம்)**
(ஓய்வுபெற்ற அதிபர் - யா / வட்டு இந்துக்கல்லூரி)

தெல்லிப்பளை - பன்னாலையைப் பிறப்பிடமாகவும் கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக்கவும் கொண்ட நாகரத்தினம் தனபாலசிங்கம் (திரவியம்) நேற்றுமுன்தினம் (23.08.2024) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம் - சின்னத்தங்கச்சி தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம் - சிதம்பரநாச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், சுமதி (முன்னாள் பணிப்பாளர் - இதம், அரசசார்பற்ற நிறுவனம்) அவர்களின் பாசமிகு கணவரும், மயில்வாகனம் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - புனித பரியோவான் கல்லூரி), திருபாலசிங்கம் (இளவாலை) மற்றும் காலஞ்சென்ற குணபாலசிங்கம் (சட்டத்தரணி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வலட்சுமி, அருள்நாயகி, தனலட்சுமி, சுரேஷ் சுரேந்திரன் (லண்டன்), கிளிப் ராஜன் (அமெரிக்கா) ஆகியோரின் மைத்துனரும், கஜனி (வைத்தியர் - தெல்லிப்பளை ஆதார வைத்திசாலை), கோபிராஜ் (பொறியியலாளர் - கட்டார்), உமேஷ் (இறுதியாண்டு பொறியியல் பீட மாணவன் - CINEC) ஆகியோ ரின் அன்புத் தந்தையும், துஷீபன் (வைத்தியர் - யாழ். போதனா வைத்தியசாலை), இன் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

39/1, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 406 3321, 077 404 9383

(cs 56011) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
12 . 05 . 1956

மறைவு
24 . 08 . 2024

## வனஜா இரவீந்திரன்

இணுவில் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பி கவும் கொண்ட வனஜா இரவீந்திரன் அவர்கள் நேற்று (24.08.2024) சனிக்கிழ றைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா ம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா-வள்ளிய மை தம்பதியரின் அன்பு மருமகளும் இரவீந்திரன் (ஓய்வு பெற்ற கிராம அலுவல ம் சமாதான நீதவானும்) அவர்களின் அன்பு மனைவியும் அருண்பிரசாத் (ஆய்வு உதவியாளர், இரசாயனவியல் துறை, யாழ் பல்கலைக்கழகம்), சோபிகா (ஆசிரிய ழ/கைவேலி கணேசா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நிரூபிகா ( விக் கணக்காளர் நொதேன் சென்றல்) அவர்களின் அன்பு மாமியாரும் பிரபாவதி ( தி), தயாபரன் (பிரான்ஸ்), மகேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கிருபாமூர்த்தி, சந்திரவதனா, கல்யாணி, காலஞ்சென்றவர்களான குலேந்திரா, சத்தி மூர்த்தி, கமலவேணி, சத்தியவேணி, விஜியவேணி, அருள்சோதி, மற்றும் சுந்தரமூர்த்தி, சண்முகேந்திரன் கலாவதி ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற சிந்துஜன் மற்றும் கீர்த்திகா, கபிதாஸ் ஆகியோரின் பெரியதாயாரும் சேந்தன் கௌசிகன், மாதுளன், துவாரகன், மாதங்கி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல்: குடும்பத்தினர்.
077 059 7402

(CS 56020) V-1

WE ARE HIRING!
MSM
Medical Sciences Manipay (Guarantee) Ltd
Finance Assistant
Qualifications:
Completed A/Level in Commerce Stream.
Proficiency in QuickBooks and Excel.
Strong computer skills.
Proficiency in English.
HNDA, NAITA Students can apply
Age:
Applicants should be above 22 years old.
Experience:
Minimum 1 year of experience in the Accounts field.
Experience in administrative roles is also required.
Submit your resume to theimsjaffna@gmail.com
Green Memorial Hospital, Manipay
0774722219 / 0212256335
imslanka.lk



IMS
Institute of Medical Sciences
WE ARE HIRING
IT & MARKETING OFFICER
WE ARE SEEKING A SKILLED IT AND MARKETING OFFICER TO JOIN OUR TEAM.
AGE: BELOW 35 YEARS.
EDUCATION: PASSED 3 A-LEVEL SUBJECTS (HIGHER QUALIFICATIONS WELCOME).
EXPERIENCE: RELEVANT IT AND MARKETING EXPERIENCE.
SKILLS: STRONG IT AND MARKETING KNOWLEDGE.
APPLY NOW
SEND YOUR RESUME
Green Memorial Hospital, Manipay
+94 760163515 / 021 225 6335
imsmanipay.info@gmail.com
www.imslanka.lk

## மீளாய்வு கூட்டம்

யாழ்.மாவட்டத்தில் யு.என்.டி.பி. நிறுவனத்தின் அனுசரணையில் முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல்10 மணிக்கு யாழ். மாவட்டச் செயலர் அலுவலகத்தில் மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் யு.என்.டி.பி. நிறுவனத்தால் சங்கானை, தெல்லிப்பழை, கோப்பாய், கரவெட்டி மற்றும் பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வாழ்வாதாரம், வீடமைப்புத்திட்டம் உள்ளடங்கலான திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன. (ச-66)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை விநாயகமூர்த்தி



யாழ்ப்பாணம் கோப்பாயைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி மத்தியை வதிவிடமாகவும் கொண்டு கனடாவில் சிலகாலம் வசித்தவருமான சின்னத்துரை விநாயகமூர்த்தி கடந்த 20.08.2024 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சரஸ்வதி தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், புனிதவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் (மனோன் - ஆசிரியர்), கந்தசாமி (ராசன் - ஆசிரியர்) ஆகியோரின் சகோதரனும், சூரியகலா, விக்னேஸ்வரன், சூரியபிரபா, சூரியலதா, சூரியமாலா, குகனேஸ்வரன், சூரியநிஷா ஆகியோரின் அன்புத் தந்தையும், இரவிகாந்தநாதன், சுதாமதி, சிவதாசன், பிரசாந், சிவகுமார், நீருஜா, இரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், யாழினி, விஜித், விஷ்ணுகா, நிஜானி, லசிகா, அபிராம், கிருஷன், தமிழ்வாகை, மகிழ்வாகை, இதழ்வாகை, அக்ஷயா, அக்ஷயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2024) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 11.00 மணியளவில் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோற்றம்
14.01.1933

மறைவு
20.08.2024

மடத்தடி வீதி,
நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.
தொடர்பு: 077 484 6660
(மருமகன்)

(CS/56017) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி வெற்றிடம்

எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் பணிநிலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வரவேற்பாளர் (Receptionist)
2. கிராபிக் டிசைனர் (Graphic Designer)

* இரவு / பகல்



மேல் குறிப்பிட்ட பணிநிலைகளுக்கு தகுதியுடையோர் கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு எதிர்வரும் 26.08.2024 திங்கட்கிழமை காலை 9.00 முதல் பி.ப 2.00 மணி மற்றும் மாலை 6.30 முதல் இரவு 8.30 மணிவரை நேரில் சமுகம்தரவும்.

உதயன்

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.




# திராவிடர் கழகத் தலைவர் வீரமணி 40 ஆண்டுகளின் பின் யாழ்.வருகை

யாழ்ப்பாணம், ஓக. 25

தமிழ்நாட்டைச் சேர்ந்த திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி 40 வருடங் களின் பின்னர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கி ழமை பிற்பகல் 1.30 மணியளவில் யாழ். சர்வதேச விமானநிலையத்தின் ஊடாக யாழ்ப்பாணம் வருகை தந்துள் ளார்.

யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள திராவி டர் கழகத் தலைவரை தமிழரசுக் கட்சி யின் தலைவர் மாவை சேனாதிராசா மற்றும் அமிர்தலிங்கம் நினைவு அறக் கட்டளையின் முக்கியஸ்தர்கள் யாழ்ப்பா ணம் சர்வதேச விமான நிலையத்துக்கு நேரில் சென்று வரவேற்பளித்தனர்.

(ஓ-22,66,20)


## விற்பனைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக 3 கடைகளும், யாழ். நீதிமன்றத்திற்கு முன்பாக 3 பரப்பு, 4 பரப்பு, 5 பரப்பு காணியும், யாழ். நல்லூர் முருகன் கோயிலுக்கு அண்மையில் 12 பரப்புக் காணியும், யாழ். பிறவுண் வீதியில் நீராவியடி பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் 7 பரப்புக் காணியும், யாழ். திருநெல்வேலி சந்திக்கு அண்மையில் 5 பரப்புக் காணியும், யாழ். கஸ்தூரியார் வீதியில் 16 அடி அகலமும், 100 அடி நீளமும் கொண்ட மாடிக் கடையும், யாழ். பலாலி வீதியில் 5 பரப்புக் காணியும், யாழ். அரியாலை பூம்புகார் வீதியில் 100 ஏக்கர் காணியும், யாழ். அச்சுவேலியில் 100 பரப்புக் காணியும், யாழ். மின்சார நிலைய வீதி, பழைய தபாற் கந்தோர் வீதியில் 5 பரப்புக் காணியும், யாழ். மின்சார நிலைய வீதியில் 1ம் ஒழுங்கையில் 1 1/2 பரப்பு, 2 1/2 பரப்புக் காணியும், யாழ். ஸ்ரான்லி வீதியில் 3 கடைகளும், யாழ். சிவன் கோயில் வடக்கு வீதியில் 3 கடைகளுடன் 5 பரப்புக் காணியும், யாழ். மானிப்பாய் வீதியில் 3 கடைகளும், யாழ். K.K.S. வீதியில் சிவன் கோவிலுக்கு அண்மையில் 5 பரப்புக் காணியும், 6 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0777 232535

## தேவை

எலக்ரோனிக் ஷோரூம் ஒன்றிற்கு அனுபவமுள்ள ஆண் வேலையாள் தேவை. யாழ் நகர்.

தொடர்பு:
T.P: 077 1999 220

## வேலைக்கு ஆள் தேவை

கொடிகாமத்தில் இயங்கும் எமது கடைக்கு வேலைக்கு ஆள் தேவை. பூமாலை கட்டத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்.

077 989 8190, 075 475 7056

## வீடு வாடகைக்கு தேவை

அரசாங்க உத்தியோகத்தர் கொண்ட சிறிய குடும்பத்திற்கு நல்ல அயல் சூழலில் கல்வியங்காடு நல்லூர், கட்டப்பிராய், திருநெல்வேலி கோண்டாவில், கொக்கு வில் பகுதியில் வீடு வாடகைக்கு தேவை. அனெக்ஸா கொடுக்க விரும்புவர்களும் தொடர்பு கொள்ளவும்.

T.P: 077 6894 358

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள கருவாட்டு கடை ஒன்றிற்கு சகல வேலையும் செய்யக்கூடிய சிங்கள மொழி தெரிந்த வேலையாட்கள் தேவை.

077 222 8312

## வாகன சாரதி தேவை
(AD Licence)

இடம் :- மருதனார்மடம் சந்தி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
075 999 7153
076 455 0621


# சதொசவில் விலை குறைப்பு!

கொழும்பு, ஓக. 25

லங்கா சதொச நிறுவனம் பல அத்தியா வசிய உணவுப் பொருள்களின் விலை களை கடந்த வியாழக்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் குறைத் துள்ளது.

வெள்ளைச் சீனி ஒரு கிலோ 5 ரூபாவால் குறைக்கப்பட்டு 242 ரூபாவாகவும், உள் ளூர் சம்பா அரிசி கிலோ 4 ரூபாவால் குறைக்கப்பட்டு 226 ரூபாவாகவும், பாசிப்பயறு 25 ரூபாவால் குறைக்கப்பட்டு 890 ரூபாவாகவும், பெரிய வெங்காயம் 20 ரூபாவால் குறைக்கப்பட்டு 470 ரூபா வாகவும், செத்தல் மிளகாய் 5 ரூபாவால் குறைக்கப்பட்டு 780 ரூபாவாகவும், கொண்டைக் கடலை 2 ரூபாவால் குறைக்கப்பட்டு 439 ரூபாவாகவும், நெத்தலி 15 ரூபாவால் குறைக்கப்பட்டு 925 ரூபாவாகவும், 425 கிராம் மீன் ரின் 75 ரூபாவால் குறைக்கப்பட்டு 500 ரூபாவாகவும், 425 கிராம் உள் ளூர் ரின் மீன் 25 ரூபாவால் குறைக் கப்பட்டு 450 ரூபாவாக வும், 155 கிராம் ரின் மீன் 20 ரூபாவால் குறைக்கப்பட்டு 270 ரூபாவாகவும் விற் பனை செய்யப்படு கின்றன.

(ஓ-22,66)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 01.10.1945

விண்ணில் 05.09.2023



### அமரர் பரமேஸ்வரி சுந்தரகாந்தன்
(ஓய்வுபெற்ற திட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர்)

ஆண்டொன்று ஆனாலும் ஆறவில்லை துயர் எமக்கு
அன்னையாக அரவணைக்க ஏழேழு பிறவிக்கும்
எம் அம்மா நீங்களே வரவேண்டும்.
வானத்து நிலவாய், வையகத்தின் தென்றலாய்,
எமது இதயத்தில் வாழும் உங்களுக்கு எங்கள்
நினைவஞ்சலிகள்
அம்மா! உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது தாயாரின் முதலாம் ஆண்டு நினைவுநாள் இன்று (25-08-2024) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற வுள்ளதால் அதில் தாங்களும் கலந்து கொண்டு சிறப்பிக்கு மாறு தயவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

கற்பகப் பிள்ளையார் கோவில்
3ம் ஒழுங்கை, உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

குடும்பத்தினர்.

(CS/55994) J-1

## விசா ஆலோசனை சேவை

- 1 மாதத்தில் UK க்கான Student Visa செய்து தரப்படும். பிரான்ஸ், இத்தாலி, கனடா, ஜேர்மனி, அவுஸ்ரேலியா, லண்டன் நாடுகளுக்கான விசிட் விசாக்களை 2 கிழமைகளில் பெற்றுக்கொள்ள முடியும்.
- சகல நாடுகளுக்குமான Work விசா ஆலோசனை நிராகரிக்கப்பட்ட விசா ஆலோசனை
- தூதுவராலய விண்ணப்ப படிவங்கள் பூரணப்படுத்தல் போன்றவற்றுக்கு எம்மை நாடவும்

M.S. Visa World (PVT) Ltd

திருநெல்வேலி யாழ்ப்பாணம் | வவுனியா | வெள்ளவத்தை கொழும்பு

தொடர்புகளுக்கு: 077 604 0373


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரெஞ் பிரதமர் யார்?

பாரிஸ், ஓக. 25

பிரான்ஸின் அடுத்த பிரதமரைத் தெரிவு செய்வதற்காக, பிரான்ஸின் அதிபர் இம்மனுவல் மக்ரோன் அந்த நாட்டின் அரசியல் கட்சியினருடன் பலசுற்றுப் பேச்சுகளை நடத்தி வருகின்றார். (ம)

### மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.

ஒரு சதுர அடி - 75 ரூபா.

நிலம் இழுத்துப் பதிக்க 100 ரூபா.

(28719) J-1

**077 334 1281**

### இணைந்த கணிதம்

A/L 2025, A/L 2026

மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புகள். வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.

**077 832 4002**

### வேலை வாய்ப்பு

கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள ஹொட்டல் ஒன்றிற்கு தங்கி நின்று வேலை செய்வ தற்கு துப்புரவுப் பணியாளர் (Room Boy) தேவை

**(தங்கி நின்று வேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது)**

தொடர்புகளுக்கு:

**077 946 7807**

## TECHNICIAN
### ORGANIC MORINGA PLANTATION
### IYAKACHCHI

Self-motivated person with 2-3 years' hands-on experience in Industrial Electrical maintenance to join the Team maintaining the equipment in the plantation and the state-of-the-art processing factory located within the plantation situated at Iyakachchi, close to the A9 Highway in Kilinochchi District.

State-of-the-art-factory is to convert Organically grown Moringa Leaves into value-added products such as Organic Moringa Leaf Powder in sachets, Capsules, Tablets, Flakes and Moringa Tea with long shelf life.

Candidates residing within the Northern Province will be preferred.

**TECHNICIAN**

**Qualifications:**

- NCT Diploma in Electrical Engineering (NVQ IV/V) or equivalent.
- 2-3 years' experience as an industrial electrician
- Excellent organization skills and is a team player
- Exceptional Verbal & Written Communication skills

All applications to reach us within 10 days of this advertisement.

Hyrin herbals

hrdlk@isfindustries.com
Chief Executive Officer
HERITAGE AGRI (PVT) LTD
Valaiththoddam, Iyakkachchi,
Palai, Kilinochchi

QUICK ADS

## SENIOR PLANTATION EXECUTIVE
### IYAKACHCHI FARM

We are part of ISF Group of companies established in 1977.

We have established an Organic Moringa Plantation with Modern Agricultural Practices to produce high-quality Organic Moringa Leaves to manufacture Moringa Powder, Moringa Leaf Flakes, Moringa powder Capsules & Tablets in a state of the art Food Processing Factory being commissioned in Iyakkachchi, Northern Sri Lanka.

We have an opening for a young energetic result-oriented Senior Plantation Executive with minimum 3 years of experience in Agriculture in Private sector willing to take new challenges with good communication skills.

The plantation is located at Iyakachi, close to the A 9 highway.

**SENIOR PLANTATION EXECUTIVE**

**Scope of Duties:**

- Planning the daily activities of the farm, allocating work for frontline workers, collecting the daily output and reporting the daily output to the management.
- Proactive approach for achieving results.
- Focus on crop health, growth, yield, optimization & cost control
- Prepare and manage plans and schedule for efficient execution of work.
- Liaise with relevant authorities and other stakeholders to ensure the use of best practices

**Qualifications:**

- Diploma in Agriculture/ Farming or related field
- Minimum 3 years of experience in estate/farm management
- In-depth knowledge about agricultural products, especially in Moringa cultivation
- Good communication & presentation skills
- Age between 25-45

Candidates resides within the Northern Province are preferred.
All applications must reach us within 10 days of this advertisement.

Hyrin herbals

hrdlk@isfindustries.com
Chief Executive Officer
HERITAGE AGRI (PVT) LTD
Valaiththoddam, Iyakkachchi,
Palai, Kilinochchi

QUICK ADS

## ASSISTANT ACCOUNTANT
### IYAKACHCHI FARM

We are an award winning group 45 years in industry with bi-national operations. we have established an organic Moringa plantation with a state of the art factory within the plantation located at Iyakkachi. with organic certification of our products recognized by EU, USAD, JAS.

State-of-the-art-factory is to convert Organically grown Moringa Leaves into value-added products such as Organic Whole Dried leaf, Organic Moringa Leaf Powder, Capsules, Tablets, Organic Moringa leaf flakes in sachets, and Moringa Tea with long shelf life.

Our plantation and manufacturing facility meets international standards.

The ideal candidate should be able to demonstrate high enthusiasm, energetic, self-motivation, result oriented to hold the position of Assistant Accountant to strengthen our team.

**ASSISTANT ACCOUNTANT**

**Scope of Duties:**

- Preparation of financial records of the Profit centers.
- Account reconciliation.
- Capturing and monitoring the cost of planting and manufacturing
- Cost control
- Handling cash float, sales collection
- Costing and variance analysis and compliance to internal controls of individual units
- Ability to coordinate with other divisions, organize, and analyze financial information on a periodical basis

**Qualifications:**

- Part qualification in any recognized Accounting body in Sri Lanka.
- Age below 35 years
- Minimum 3-5 years of experience in Commercial sector with exposure to farm and manufacturing industry will be an added advantage
- Working ability with MS Office packages (Excel, Word)
- Report writing ability and communication skills to deal with intercompany personnel & financial institutions.
- Exposure to computerized Accounting Systems.
- To be a Target oriented
- Ability to meet deadlines

**Candidates resides within the Northern Province are preferred.**
All applications must reach us within 10 days of this advertisement

Hyrin herbals

hrdlk@isfindustries.com
Chief Executive Officer
HERITAGE AGRI (PVT) LTD
Valaiththoddam, Iyakkachchi,
Palai, Kilinochchi

QUICK ADS

## QUALITY ASSURANCE EXECUTIVE
### IYAKKACHCHI FARM

We are part of ISF Group of companies established in 1977.

We have established an Organic Moringa Plantation with Modern Agricultural Practices to produce high-quality Organic Moringa Leaves to manufacture Moringa Powder, Moringa Leaf Flakes, Moringa powder Capsules & Tablets in a state of the art Food Processing Factory being commissioned in Iyakkachchi, Northern Sri Lanka.

We have an opening for a a dynamic self-motivated person to lead and efficiently manage the Quality Assurance team at the farm level and factory level.

Plantation is situated at Iyakachchi, close to the A9 Highway.

**QUALITY ASSUARANCE EXECUTIVE**

**Scope of Duties:**

- Ability to lead the team towards assuring company Quality Policies will be an essential requirement.
- Oversees all aspect of organization's production quality functions.
- Develop new policies & standards relating to product quality.
- To be the main representative of the management to liaise with the key certification bodies and regulatory institutes.
- To be part of the team of New Product Development

**Qualifications:**

- Bachelor's Degree/ Diploma in Food Science/Technology.
- Strong understanding of BRCG standards and best practices.
- Ability to work independently and as part of the team
- Ability to speak in Tamil would be an added advantage

**Candidates resides within the Northern Province are preferred.**

All applications must reach us within 10 days of this advertisement.

Hyrin herbals

hrdlk@isfindustries.com
Chief Executive Officer
HERITAGE AGRI (PVT) LTD
Valaiththoddam, Iyakkachchi,
Palai, Kilinochchi

QUICK ADS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

யாழ். பிரதான வீதியில் அமைந்திருக்கும் பிரபல வெதுப்பகம் ஒன்றிற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு **வேலைக்கு ஆட்கள் தேவை.**

- **பாண் மற்றும் ஏனைய வெதுப்பக உற்பத்தியாளர். (ஆண்கள் மட்டும்)**
- **ஐசிங் கேக் உதவியாளர் (இருபாலாரும்)**

**தொடர்புடைய துறையில் முன்னனுபவம் இருத்தல் கட்டாயமானது.**

**தொலைபேசி இல:-**

(CS/55977) J-1

**077 350 0605, 076 534 3034**

## நாகபூஷணி திருமண சேவை

**எம்மிடம் பல்லாயிரக்கணக்கில் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் உள்ளனர். நீங்கள் விரும்பும் மணமக்களை மிகப் பொருத்தமாக உடன் தெரிவு செய்து துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித்தரப்படும்.**

10/2, முதலாம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(CS/56006) J-1

**021 222 9306, 077 138 7596, 071 999 9306**



## ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்

இந்தியாவில் ஆன்மீகத்துறையில்
10 வருடங்களாக புகழ்பெற்ற

### அம்மன் அருள் வாக்கு

**தினமும் காலை : 9.00 - 12.00 மணிவரை**
**மாலை : 3.00 - 05.00 மணிவரை**

- கல்வியில் முன்னேற்றம் இல்லையா ?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?
- கால் வீக்கம், நாட்பட்ட ஆறாத புண்.

அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

**திருமதி வே. மோகனதாஸ்**

**இல.77, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**

வெளிநாட்டவர்களும் அருள்வாக்கு பெற தொடர்பு கொள்ளவும்

(CS/1196) J-1

தொடர்பு: **071 241 1234, 021 221 1239**

## தேடுகிறோம்

- பெயர் : வைத்திலிங்கம் சக்திவேலன்
- வயது : 78
- மனைவி பெயர் : பவா
- பிறந்த இடம் : தருமபுரம்
- 1960 தொடக்கம் 1968 வரை கொக்குவிலில் வசித்தார்.
- பிள்ளைகள் : 2

அவுஸ்ரேலியாவில் இருந்து தொடர்புகொள்ள விரும்புகின்றோம்:

தொடர்பு: .Dr.Tharmendra:

**077 355 0940**

(cs.55989) (N-1)

## கஜஷக்தி சிக்யூரிடி சேவிசஸ் (பிறைவட்) லிமிடட்

**சாவகச்சேரி, யாழ்ப்பாணம், சங்கானை மற்றும் சுன்னாகத்திற்கு ஆகிய இடங்களுக்கு பாதுகாப்பு அதிகாரிகளுக்கான வெற்றிடங்கள் உண்டு**

**தொடர்புக்கு : 074 - 2580758**
**0112 685 690**

## வேலையாட்கள் தேவை

வத்தளை எலகந்தையிலுள்ள முன்னணி நிறுவனமான RG Brothers(Pvt)Ltd இற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- **கணக்கு நிர்வாகி** - Accounts Executive
- **இயந்திர இயக்குநர்** - Machine Operator
- **மேற்பார்வையாளர்** - Supervisor
- **கூலி தொழிலாளி** - Wage Laborers

வயதெல்லை 20 - 30, ஆண்கள் மட்டும். தங்குமிட வசதி வழங்கப்படும்.

RG Brothers
No. 228 Canel Road,
Elakand Hendala, Wattala.

(CS/55925) J-1

**076 929 2323, 077 434 6367**

## விமானசேவை முடக்கம்

பெர்லின், ஓக. 25

ஜேர்மனியில் இருந்து டெல் அவிவ் மற்றும் தெஹ்ரோனுக்கான விமான சேவைகளை, பிராந்தியப் பதற்றம் காரணமாகத் தொடர்ந்தும் இடைநிறுத்தி வைப்பதாக ஜேர்மனி அறிவித்துள்ளது. இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்தும் அச்சநிலை நீடிப்பதாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

(ம)

### மணமகள் தேவை

யாழ். கிறிஸ்தவம் 1982 இல் பிறந்த கொழும்பில் வேலை செய்யும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை. இந்துக்களும் தொடர்பு கொள்ளலாம்.

**076 041 0334**

## மணமகன் தேவை

யாழ். இந்து (V) 1981 பூராடம் விவாகரத்தான மணமகனுக்கு மணமகள் தேவை.
(10 இல் சூரியன் செவ்வாய்)

(28717) N-1

தொடர்பு:- **077 964 9245**

## மணமகள் தேவை

யாழ். இந்து (V) 1992 பூரம் Holland PR, 1990 விசாகம் உத்தியோகம், 1987 பூசம் நியுசிலாந்து என்சினியர், 1991 அச்சுவேலி சிங்கப்பூர் என்சினியர்.

(CS/28718) J-1

தொடர்பு:- **077 964 9245**

## வீடு விற்பனைக்கு

தெஹிவளையில் 14 பேர்ச் காணியில் 9 அறைகள் உள்ள 60 வருட பழைய வீடு விற்பனைக்குண்டு.
1 பேர்ச் 55 இலட்சம்.

(CS/42979) N-1

**071 484 0610**

## களஞ்சிய சாலை தேவை

# யாழ். மாவட்டம்

### சாவகச்சேரி / கொடிகாமம்

**யாழ்ப்பாணத்தில் மேற் குறிப்பிட்ட பகுதிகளில் உணவு பொருட்கள் களஞ்சிய சாலை தேவை.**

- **4000 - 5000 சதுர அடி பரப்பு**
- **வாடகைக்கு அல்லது குத்தகைக்கு**
- **40 அடி கொள்கலன் வாகனத்தை போக்குவரத்து செய்வதற்கான இட வசதி.**

மேலதிக விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**Tel: 0776041616** Email: land377740@gmail.com

21R/8, Dabare Mawatha, Narahenpita, Colombo 5

## மணமகள் தேவை

1993 யாழ். இந்து (V) கொழும்பில் வங்கி ஒன்றில் உயர்பதவி வகிக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.

(CS/28646) J-1

**074 064 8969**

## மணமகன் தேவை

1991, இந்து, சித்திரை, **PSYCHOLOGIST,**
பூர்வீகம் - யாழ்ப்பாணம், வதியுமிடம் - கொழும்பு
மணமகள் பதிவு இல: 10884.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
70 % விலைக்கழிவு **30.08.2024** வரை மட்டுமே.

அழையுங்கள் **076 664 9401**

## மணமகன் தேவை

1997, இந்து, விசாகம், **SOFTWARE ENGINER,**
பூர்வீகம் - கொடிகாமம், வதியுமிடம் - சாவகச்சேரி
மணமகள் பதிவு இல: 10923.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
70 % விலைக்கழிவு **30.08.2024** வரை மட்டுமே.

அழையுங்கள் **076 664 9401**

## வீடு வளவு விற்பனைக்கு

சுதுமலை தெற்கு,
மானிப்பாயில் நல்ல
சுற்றாடலில் வீடுடன் காணி
விற்பனைக்குண்டு.

(CS56013) N-1

**071 838 1119**

## இணைப்ப இணையத்தளம் வழங்கும் அடுத்த தலைமுறை திருமண சேவை

தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு அறிமுகமாகின்றது இணைப்ப நவீன திருமண சேவை. ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி, தொடர்பு கொண்டு உங்கள் துணையை தெரிவுசெய்யமுடியும்.
பதிவுக் கட்டணம் இல்லை. இப்பொழுதே [illegible] உடன்

Ts&Cs apply
Www.inaipa.com

(CS/1205) J-1

## மணமகள் தேவை

1997, இந்து, பரணி **FINANCIAL ANALYST,**
பூர்வீகம் - வண்ணார்பண்ணை, வதியுமிடம் -New Zealand
மணமகன் பதிவு இல. 10941.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
70 % விலைக்கழிவு **30.08.2024** வரை மட்டுமே.

அழையுங்கள் **076 664 9401**

## மணமகள் தேவை

1995, இந்து, அஸ்வினி, **TEACHER,**
பூர்வீகம் - மட்டக்களப்பு, வதியுமிடம் - திருகோணமலை
மணமகன் பதிவு இல. 10927.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
70 % விலைக்கழிவு **30.08.2024** வரை மட்டுமே.

அழையுங்கள் **076 664 9401**

## Vacancy

We are Hiring
Data entry operator /
Call centre executives
More info :
www.koceansoft.com/careers
E-mail your cv to:
koceansoft@gmail.com

(CS/56002) J-1

Whatsapp: **077 810 2522**

## வேலை வாய்ப்பு

யாழ் நாவலர் வீதியில் அமைந்துள்ள சுப்பர் மார்க்கெட் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

1. **சிட்டை எழுதுநர்**(Billing)
2. **உதவியாளர்** (Assistant)
3. **பொதி செய்பவர்** (Packing)
4. Rack **பராமரிப்பாளர்**

**(வயது எல்லை 18-35 வரை)**
**(யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது)**

தொடர்பு: **077 419 5015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

போர்ப் படைதனில் தூங்கியவன் வெற்றியிழந்தான் - உயர்
பள்ளியில் தூங்கியவன் கல்வியிழந்தான்!
கடைதனில் தூங்கியவன் முதல் இழந்தான் - கொண்ட
கடமையில் தூங்கியவன் புகழ் இழந்தான் - இன்னும்
பொறுப்புள்ள மனிதரின் தூக்கத்தினால் - பல
பொன்னான வேலையெல்லாம் தூங்குதப்பா!
-பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

மலர் : 33 வள்ளுவர் ஆண்டு : 2055 அ ஞாயிற்றுக்கிழமை (25.08.2024) சிகரம் :215



# நள்ளிரவில் குதறப்பட்ட பெண் மருத்துவர்




## நீதி கிடைக்குமா மெளமிதாவுக்கு?



மயூ

இந்தியாவின் 78 ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடிய திளைப்பிலிருந்த இந்திய மக்களுக்கு இடியாக வந்து சேர்ந்திருக்கிறது பெண் மருத்துவர் மெளமிதா நேப்நாத்தின் படுகொலைச் செய்தி. அரியலூர் நந்தினி, நிர்பயா, ஆசிஃபா தற்போது கொல்கத்தா மருத்துவர் மெளமிதா நேப்நாத் என இந்தக் கொலைப் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

இந்தியா வல்லரசு நாடு என்று மார்தட்டிக்கொண்டாலும், அங்கு ஒரு பெண் மருத்துவர் வேலைக் களைப்பில் உறங்குவதற்கு கூட சுதந்திரம் இல்லையே. நோயாளிகளுக்காக அதிகாலை வரை பணியாற்றிய பெண்மருத்துவரை இப்படிக் குதறிப்போடுவதுதான் வல்லரசு நாட்டின் லட்சணமா?

இந்தியாவின் மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் கடந்த 9 ஆம் திகதி 'ஆர் .ஜி .கர்' மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரியில் பெண் பயிற்சி மருத்துவர் அதிகாலையில் கொடூரமாக பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டு கொல்லப்பட்டுள்ளார்.

இந்த மருத்துவமனை பிரிட்டிஷ் இந்தியாவில் முதல் தனியார் மருத்துவமனையாகவும், அதிகாரம் கைமாறிய பிறகு அரசு மருத்துவமனையாகவும் மாற்றப்பட்டு இன்று வரை செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. தினமும் பல ஆயிரம் நோயாளிகளை கையாளும் மருத்துவமனையாகும். இங்கு தான் பெண் மருத்துவருக்கு இந்தக் கொடூரம் நடந்துள்ளது.


நீட் எனும் மருத்துவ நுழைவுத்தேர்வு திணிக்கப்பட்ட பிறகு இன்று மருத்துவராவது எவ்வளவு சவால் நிறைந்த விடயம் என்பது அனைவருக்கும் தெரியும். கொல்லப்பட்ட மருத்துவர் மெளமிதா இளங்கலை மருத்துவம் முடித்து முதுகலை மருத்துவத்துக்கான நீட் நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்று இரண்டாம் ஆண்டு படித்து வருகிறார்.

மருத்துவத் துறையைப் பொறுத்த வரையில் பயிற்சி மருத்துவர்கள் தொடர்ந்து 24, 36 மணி நேரம் வேலை செய்யவேண்டிய மோசமான சூழல் உள்ளது. பணி நேரத்தில் சிறிது ஓய்வெடுப்பார்கள். அப்படி தான் நீண்ட பணிச்சுமைக்கு பிறகு அதிகாலை 2 மணிக்கு கருத்தரங்கு மண்டபத்தில் (ஓய்வறை இல்லாத காரணத்தால்) சிறிது ஓய்வெடுக்க சென்றார்.

அதிகாலை 6 மணியளவில் மருத்துவப் பணியாளர்கள் பார்க்கும் போது கொலை செய்யப்பட்டு அரை நிர்வாணமாகக் கிடந்துள்ளார். அவர் சடலம் மீட்கப்பட்ட 3 மணி நேரத்துக்குப் பிறகு மருத்துவமனையிலிருந்து பெற்றோருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. முதல் போனில் உங்கள் மகளுக்கு உடல்நிலை சரியில்லை என்று கூறியுள்ளார்கள். அடுத்த 22 நிமிடம் கழித்து போன் செய்து இறந்துவிட்டதாகவும், தற்கொலை செய்து கொண்டார் என்றும் பொய்யாகக் கூறி யுள்ளார்கள். ஏன் பொய் சொன்னார்கள், கொலையை மறைக்கப் பார்த்தார்களா? கொலையாளிகளை தப்பிக்கவைக்க முயற்சித்தார்களா? என்ன காரணம் என்று இதுவரை தெரியவில்லை.

தற்கொலை செய்து கொண்டதாக கூறியதில் சிறிதளவும் உண்மையில்லை என்பதை


அவரது உடலில் உள்ள காயங்களே உறுதிப்படுத்தியது. அவரது வாய் கிழிக்கப்பட்டிருந்தது. உதட்டில் காயங்கள் இருந்தன. பிறப்புறப்பில் காயம் இருந்தது. உடலில் ஏராளமான இடங்களில் காயங்கள் இருந்தன. இவை யாவும் அவர் பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டு கொடூரமான முறையில் கொல்லப்பட்டுள்ளார் என்பதை உணர்த்தியது. மருத்துவரின் கொலைக்கு நீதி கேட்டு போராடியவர்களுக்கு பிரேத பரிசோதனை அறிக்கை அதிர்ச்சியை உண்டாக்கியதோடு மட்டுமில்லாமல் கோபத்தை அதிகரித்தது.




அவர் கூட்டு பலாத்காரம் செய்யப்பட்டதற்கு அறிகுறி இருந்ததாக டாக்டர் டி. ஆர். சுபர்ணா கோஸ்வாமி கூறுகிறார். பிரேத பரிசோதனையில் இருந்த பல மருத்துவர்களும் இந்தக் கருத்தை உறுதிப்படுத்துகின்றனர்.

20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் மக்கள் வழிகாட்டுவார்கள்

○ உற்சவி

"யாழ்ப்பாணம் இப்பொழுது வழிகாட்டியுள்ளது" இவ்வாறு 1931 ஆம் ஆண்டு எழுதியவர் பிலிப் குணவர்த்தன. இப்பொழுது பிரதமராக உள்ள தினேஷ் குணவர்த்தனவின் தகப்பன் அவர். ஓர் இடதுசாரியாக இருந்தவர். 1931ஆம் ஆண்டு இலங்கைத்தீவின் முதலாவது தேர்தல் நடந்தபொழுது யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு இயங்கிய, யாழ்ப்பாணம் வாலிப காங்கிரஸ் தேர்தலை பகிஷ்கரிக்குமாறு மக்களைக் கேட்டது. காந்தியின் செல்வாக்குக்கு உள்ளாகிய யாழ்ப்பாணம் வாலிப காங்கிரஸ் இலங்கைத் தீவுக்கு முழு சுயாட்சிவேண்டும் என்று கேட்டு அத் தேர்தலைப் புறக்கணித்தது.

அப்புறக்கணிப்பை தென்னிலங்கையில் உள்ள இடதுசாரிகள் பெருமளவுக்கு ஆதரித்தார்கள். அவ்வாறு ஆதரித்த இடதுசாரிகளில் ஒருவராகிய பிலிப் குணவர்த்தன அது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்பொழுது மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இக்குறிப்பு யாழ்ப்பாணம் யுத் காங்கிரசைப்பற்றி கலாநிதி சீலன் கதிர்காமர் எழுதிய நூலில் காணப்படுகின்றது. ஆனால் யாழ்ப்பாணம் வாலிப காங்கிரசை பின்பற்றி தேர்தல் புறக்கணிப்பை ஆதரித்த தென்னிலங்கை இடதுசாரிகள் கடைசி நேரத்தில் குத்துக்கரணம் அடித்து தேர்தலில் பங்குபற்றினார்கள் என்பது வேறு கதை.

யாழ். வாலிப காங்கிரசின் அழைப்பை ஏற்று யாழ்ப்பாணம் பெருமளவுக்கு வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை. ஆனால் யாழ்ப்பாணத்துக்கு வெளியில் ஓரளவுக்கு வாக்களிப்பு நடந்தது. வாலிபக் காங்கிரஸ் அவ்வாறு தேர்தலை புறக்கணித்தது சரியா பிழையா என்ற விவாதத்தில் இப்பொழுது இறங்கத் தேவையில்லை. ஆனால் கடந்த நூற்றாண்டில் இலங்கைத் தீவின் முதலாவது தேர்தலை எதிர்கொள்ளும் பொருட்டு யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு இயங்கிய ஒரு இளைஞர் அமைப்பு "ப்ரோ ஆக்டிவாக" செயல் முனைப்பாக ஒரு முடிவை எடுத்துப் புறக்கணித்தது என்பதுதான் இங்கு முக்கியமானது. காலனித்துவ அரசாங்கம் நடத்திய முதலாவது தேர்தலை தமிழ்த் தரப்பு எவ்வாறு செயல்முனைப்போடு அணுகியது என்பதற்கு அது ஓர் எடுத்துக்காட்டு.

அங்கிருந்து தொடங்கி சுமார் 83 ஆண்டுகால இடைவெளிக்குள் தமிழ்த் தரப்பு அவ்வாறு தேர்தல்களை செயல் முனைப்போடு கையாண்ட மேலும் ஒரு சந்தர்ப்பம் எதுவென்றால், அது 2005ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலாகும்.

அப்பொழுது வன்னியில் ஒரு கருநிலை அரசை நிர்வகித்த விடுதலைப்புலிகள் இயக்கம் அந்தத் தேர்தலை புறக்கணிக்குமாறு அழைப்பு விடுத்தது. அவ்வாறு தேர்தலை புறக்கணிப்பதன் மூலம் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கிடைக்கக்கூடிய வாக்குகளை தடுப்பதே அந்த பகிஷ்கரிப்பின் நோக்கமாகும். ஏனென்றால் அப்பொழுது ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் ஆட்சியில் இருந்தது. அந்த அரசாங்கம் நோர்வையின் அனுசரணையோடு ஒரு சமாதான முயற்சியை முன்னெடுத்து வந்தது. சமாதான முயற்சியை விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு தருமர் பொறியாகவே பார்த்தது. எனவே அதில் இருந்து வெளிவருவதற்கு ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடிக்கவேண்டும் என்று அந்த இயக்கம் சிந்தித்தது. அதன் விளைவாக தேர்தலைப் புறக்கணிக்குமாறு தமிழ் மக்களுக்கு கோரிக்கை விடுத்தது.

தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டிருந்திருந்தால் அவர்கள் தனக்கே வாக்களித்திருந்திருப்பார்கள் என்று ரணில் விக்கிரமசிங்க இப்பொழுதும் நம்புகின்றார். தன்னுடைய வெற்றியைத் தடுத்து மஹிந்த ராஜபக்சவை ஆட்சிக்கு ஏற்றியதன்மூலம் விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதானத்தை முறிக்க விரும்பியது என்றும் அவர் நம்புகிறார்.

அத்தேர்தலில் விடுதலைப்புலிகள் இயக்கம் அதாவது தமிழ்த் தரப்பு எடுத்த முடிவானது முன்பு யாழ்ப்பான வாலிப காங்கிரஸ் எடுத்த முடிவு போலவே செயல்முனைப்பானது. தேர்தலை தமிழ்நோக்கு நிலையில் இருந்து தந்திரோபாயமாக அணுகுவது. அந்த பகிஷ்கரிப்பின் விளைவுகள் தமிழ் அரசியலின் மீது மட்டும் தாக்கத்தைச் செலுத்தவில்லை. அதற்குமப்பால் தென்னிலங்கை அரசியல், இந்த பிராந்திய அரசியல் என்று பல்வேறு பரிமாணங்களில் அந்த பகிஷ்கரிப்பின் விளைவுகள் அமைந்தன. அவற்றின் தொடர்ச்சிதான் இப்பொழுதுள்ள அரசியலும்.

இவ்வாறு தென்னிலங்கையில் இருந்து அறிவிக்கப்படும் ஒரு தேர்தலை செயல்முனைப்போடு அணுகும் மூன்றாவது முயற்சிதான் தமிழ்ப்பொதுவேட்பாளர் என்ற கருத்துருவம் ஆகும்.

கடந்த 83 ஆண்டுகளிலும் மீண்டும் ஒரு தடவை தமிழ்த் தரப்பு ஒரு தேர்தலை நிர்ணயகரமான விதங்களில் எதிர்கொள்ளும் ஒரு முடிவு இது. முன்னைய இரண்டு சந்தர்ப்பங்களிலும் தமிழ்த் தரப்பு தேர்தலைப் புறக்கணித்தது. ஆனால் இம்முறை தமிழ்த் தரப்பு தேர்தலில் பங்குபற்றுகின்றது. அதன்மூலம் தமிழ் மக்களை ஒன்று திரட்ட முயற்சிக்கின்றது. தமிழ் மக்களை ஒரு திரண்ட அரசியல் ஆக்க சக்தியாக மாற்றுவதன்மூலம் தமிழ் மக்களுடைய பேரபலத்தை அதிகப்படுத்தி, இனப்பிரச்சினை தொடர்பான மேடைகளில் தமிழ் மக்களை ஒரு திரண்ட சக்தியாக நிறுத்துவது தமிழ்ப்பொது வேட்பாளர் என்ற கருத்துருவத்தின் முதல் நிலை நோக்கமாகும். தமிழ் மக்களை அகப்பெரிய திரட்சியாக மாற்றினால் அது பேச்சுவார்த்தை மேசையிலும், நீதி கோரும் மேடைகளிலும் தமிழ்மக்களை பலமான சக்தியாக மாற்றும். அந்த அடிப்படையில்தான் ஒரு பொதுவேட்பாளர் நிறுத்தப்படுகின்றார்.

அந்த முடிவு தென்னிலங்கை வேட்பாளர்களின் மீது எவ்வாறான தாக்கத்தைச் செலுத்தியுள்ளது என்பதற்கு ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தரப்பைப் பேச அழைத்ததில் இருந்து விளங்கிக் கொள்ளலாம்.

ஆனால் தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு தென்னிலங்கையில் மட்டுமல்ல தமிழ்ப் பகுதிகளிலும் ஒரு பகுதி அரசியல்வாதிகளும் விமர்சகர்களும் கடுமையாக எதிர்ப்பைக் காட்டி வருகிறார்கள்.

> தமிழ்மக்கள் முன்னாள் உள்ள தெரிவு இரண்டுதான். ஒன்று, தென்னிலங்கை வேட்பாளர்களுக்காக காத்திருந்து மேலும் சிதறிப் போவது. இன்னொன்று தமிழ்ப்பொது வேட்பாளரை பலப்படுத்துவதன்மூலம் முழு இலங்கைக்கும் வழிகாட்டுவது.

தென்னிலங்கையில் யாரெல்லாம் தமிழ் வாக்குகளை கவர விரும்புகிறார்களோ அவர்கள் அனைவரும் பொதுவேட்பாளரைக் கண்டு பதற்றமடைகிறார்கள். அவர்களுடைய தமிழ் முகவர்கள் எஜமானர்களை விட அதிகமாக பதறுகிறார்கள். தமிழ் வாக்குகள் கிடைக்கவில்லை என்றால் தமது தென்னிலங்கை எஜமானர்கள் திருப்தியூட்டும் வெற்றிகளைப் பெறத் தவறி விடுவார்கள் என்று அவர்களுக்கு பதற்றம். ஆனால் தமது தென்னிலங்கை எஜமானர்கள் தமிழ் மக்களுக்கு எதைத் தருவார்கள் என்பதனை அவர்களால் இன்று வரை தெளிவாகக் கூற முடியவில்லை.

கடந்த வாரக் கட்டுரையில் கூறப்பட்டதுபோல, அவர்களில் யாருமே சமஸ்டியைத் தரப்போவதில்லை. அப்படி என்றால், அவர்கள் தரக்கூடிய சமஸ்டிக்கு குறைவான வாக்குறுதிகளை நம்பித்தான் அவர்களுக்கு வாக்களிக்கவேண்டும். அதாவது கடந்த ஏழு தசாப்தங்களுக்கு மேலாக தமிழ் மக்களுக்கு வாக்குறுதிகளை தந்துவிட்டு அவற்றை மீறிய, அல்லது உடன்படிக்கைகளை எழுதி விட்டு அவற்றை தாமாக முறித்துக் கொண்ட ஒரு தரப்பு இப்பொழுதும் வாக்குறுதியைத் தரும் என்று காத்திருப்பதை எப்படிப் பார்ப்பது? அவர்கள் வரலாற்றில் இருந்து எதையுமே கற்றுக் கொள்ளவில்லை.

தத்துவஞானி ஹெகல் கூறுவது போல "வரலாற்றில் இருந்து நாம் கற்றுக் கொள்வது என்னவென்றால், மனிதர்கள் வரலாற்றிலிருந்து எதையுமே கற்றுக் கொள்வதில்லை என்பதைத்தான்." இவ்வாறு வரலாற்றுக் குருடர்களாக இருக்கும் அரசியல்வாதிகள் பொதுவேட்பாளரை நிறுத்தும் தரப்பைப் பார்த்து முட்டாள்கள் என்கிறார்கள். அது ஒரு கேலிக்கூத்து என்கிறார்கள். அது ஒரு விஷப்பரீட்சை என்கிறார்கள்.

ஆனால் அவ்வாறு தமிழ்ப் பொதுவேட்பாளரை எதிர்க்கும் யாருமே இதுவரையிலும் எந்த தென்னிலங்கை வேட்பாளரை ஆதரிக்கவேண்டும் எதற்காக ஆதரிக்க வேண்டும் என்ற கருத்தைக் கூறவில்லை. இது ஒரு முக்கியமான விடயம். தமிழ்ப் பொதுவேட்பாளர் பிழை என்று சொன்னால் தென்னிலங்கையில் உள்ள எந்த வேட்பாளர் சரி என்பதை அவர்கள் தெளிவாகச் சொல்லவேண்டும். ஆனால் தமிழ்ப் பொதுவேட்பாளர் பிழை என்று சொல்பவர்கள் யாருமே இதுவரையிலும் எந்தத் தென்னிலங்கை வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்று தெளிவான முடிவை மக்களுக்கு கூறவில்லை.

ஏன் கூறவில்லை ? ஏனென்றால் தென் இலங்கையில் உள்ள எந்த ஒரு கட்சியும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்தபட்ச வாக்குறுதியைக்கூட தருவதற்குத் தயாராக இல்லை. இப்பொழுது தராத வாக்குறுதியை அவர்கள் பிறகெப்பொழுதும் தரப்போவதில்லை.


எனவே இந்த இடத்தில் தமிழ் மக்கள் தெளிவாக செயல்முனைப்போடு இரண்டு முடிவுகளில் ஒன்றைத்தான் எடுக்கலாம். ஒன்று பகிஷ்கரிப்பது அல்லது தமிழ் பொது வேட்பாளரை ஆதரிப்பது. தமிழ்ப் பொதுவேட்பாளருக்குள் பாகிஷ்கரிப்பும் உண்டு. அதாவது தென்னிலங்கையில் உள்ள எந்த ஒரு வேட்பாளரையும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதால்தான் தமிழ் வேட்பாளர் முன்னிறுத்தப்படுகிறார்.

கடந்த 84 ஆண்டுகளுக்குள் தமிழ் மக்கள் எடுத்த நிர்ணயகரமான ஒரு முடிவாக அதை மாற்றவேண்டும். அதற்காக உழைக்கவேண்டும். 83 ஆண்டுகளுக்கு முன் பிலிப் குணவர்த்தன "யாழ்ப்பாணம் இப்பொழுது வழிகாட்டியுள்ளது" என்று சொன்னார். இப்பொழுது கிழக்கிலிருந்து ஒரு பொதுவேட்பாளர் கொண்டு வரப்பட்டிருக்கிறார். இம்முறை வடக்கும் கிழக்கும் இணைந்த தமிழர் தாயகம் பொதுவேட்பாளரை முன்னிறுத்துகின்றது. தமிழ்ப் பொதுவேட்பாளர் அதிகரித்த வாக்குகளைத் திரட்டினால் அது தென்னிலங்கைக்கும் வெளியுலகத்துக்கும் தெளிவான கூர்மையான செய்திகளைக் கொடுக்கும். தமிழ் ஐக்கியத்தை மேலும் பலப்படுத்தும். எனவே இப்பொழுது தமிழ்மக்கள் முன்னாள் உள்ள தெரிவு இரண்டுதான். ஒன்று, தென்னிலங்கை வேட்பாளர்களுக்காக காத்திருந்து மேலும் சிதறிப் போவது. இன்னொன்று தமிழ்ப்பொதுவேட்பாளரை பலப்படுத்துவதன்மூலம் முழு இலங்கைக்கும் வழிகாட்டுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சென்றவாரத் தொடர்ச்சி)

# மக்களின் முதுகில் பயணிக்கும் தலைவர்கள்



ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

My No. : PS/RTIA/11/2024/02

29th February, 2024

Dear Sir,

Responding to the appeal made to the Designated Officer under the Right to Information Act No 12 of 2016

This refers to your information request dated 01.01.2024.


02. In that letter you have requested information with regard to the details of the expenses related to the details of the United Nations Climate Change Conference (COP 28) attended by the Hon. President.

03. Since the coordination of the COP 28 was handled by the Ministry of Environment, it is kindly requested to obtain the above information from the Ministry of Environment.

04. Furthermore, I am informed that the information about the officials who participated with the Hon. President at this conference cannot be given as per the provisions of Section 5(1)(b)(i) of the Right to Information Act No. 12 of 2016.

Thank you,
Yours sincerely

D.L.U. Peiris
Additional Secretary to the President
Designated Officer



ENV/RRI/01/Gen-2024
ENV/02/02/ADM/10/RTI/XVIII

08 AUG 2024

## விதிவிலக்கு

விதிவிலக்காக ஒரேயொரு சந்தர்ப்பத்தில் மாத்திரம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2023 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு மேற்கொண்ட பயணத்தின் செலவு விவரங்கள் மாத்திரம், ஜனாதிபதி செயலகத்தின் தகவல் உத்தியோகத்தருக்கு விண்ணப்பித்ததும் கிடைக்கப்பெற்றது.

ஜனாதிபதியின் சுவிஸ், உகண்டா மற்றும் அவுஸ்திரேலியாவுக்கான பயணச் செலவு விவரங்கள் தொடர்பான தகவல்கள் தம்மிடம் இல்லை என்று ஜனாதிபதி செயலகம் பதிலளித்த நிலையில் அது தொடர்பில் தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவில் மேன்முறையீடு செய்யப்பட்டு அதுவும் விசாரணையில் உள்ளது.

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெளிநாட்டுப் பயண விவரம்

| நாடு | விமானப் பயணச்சீட்டு | உணவு | தங்குமிடம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| லண்டன் (2023 மே) | 4,028,800/= | 2,547,988.70/= | 11,194,527.83/= | 17,771,316.53/= |
| சிங்கப்பூர் (2023 ஜூன்) | - | 75,729.62/= | 6,889,002.14/= | 6,964,731.76/= |
| ஜப்பான் (2023 ஜூன்) | 3,176,988.50/= | 593,471.70/= | 4,490,263.11/= | 8,260,723.31/= |
| பிரான்ஸ் (2023 ஜூன்) | 11,145,500/= | - | - | 31,498,949.08/= |
| லண்டன் (2023 ஜூன்) | - | 3,416,918.74/= | 16,936,530.34/= | |
| சிங்கப்பூர் (2023 [illegible]) | 3,561,500/= | 258,469.10/= | 1,543,434.29/= | 5,363,403.39/= |
| கியூபா (2023 [illegible]) | 23,646,817/= | 386,471.13/= | 3,309,786.45/= | 87,491,569.63/= |
| அமெரிக்கா (2023 [illegible]) | - | 3,119,913.81/= | 57,028,581.24/= | |
| ஜேர்மனி (2023 செ[illegible]) | 5,398,300/= | 2,051,113.84/= | 7,829,821.77/= | 15,279,235.61/= |
| சீனா (2023 ஒக்ரோபர்) | - | 38,153.40/= | - | 38,153.40/= |
| டுபாய் (2023 நவம்பர்) | தகவல் கைவசம் இல்லை – ஜனாதிபதி செயலகம், சுற்றாடல் அமைச்சு | | | |
| சுவிஸ் (2024 ஜனவரி) | தகவல் கைவசம் இல்லை – ஜனாதிபதி செயலகம் தகவல் அறியும் ஆணைக்குழுவில் மேன்முறையீடு | | | |
| உகண்டா (20[illegible] ஜனவரி) | | | | |
| இந்தியா (2023 ஜூலை) | 313,464/= | - | - | 313,464/= |
| அவுஸ்திரேலியா (2024 பெப்ரவரி) | தகவல் கைவசம் இல்லை – ஜனாதிபதி செயலகம் தகவல் அறியும் ஆணைக்குழுவில் மேன்முறையீடு | | | |
| இந்தோனேசியா (2024 மே) | ஜனாதிபதி செயலகத்தால் தகவல் வழங்கப்படவில்லை | | | |
| இந்தியா (2024 ஜூன்) | தகவல் கைவசம் இல்லை – ஜனாதிபதி செயலகம் | | | |

## உண்மையை மூடிமறைக்க பிரயத்தனம்

ஜனாதிபதி செயலகம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பயணச் செலவுகள் தொடர்பான விவரங்களை எப்படி வெளியிடுவதிலிருந்து தடுக்கலாம் அல்லது காலத்தை இழுத்தடிக்கலாம் என்பதையே நோக்கமாகக் கொண்டிருப்பது தெளிவாகின்றது. இந்தத் தகவல்களை மூடிமறைப்பதன் ஊடாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த நாட்டு மக்களின் வரிப்பணத்தை எப்படி விரயம் செய்கின்றார் என்ற உண்மை மக்களைச் சென்றடையாமல் தடுக்க முடியும் என்று எண்ணுகின்றனர். பொருளாதார நெருக்கடி, சர்வதேச நாணயநிதியத்துடனான ஒப்பந்தம் என்று பல்வேறு வார்த்தைகளைச் சொல்லி கண்மண் தெரியாதளவுக்கு வரிகளை உயர்த்தியிருக்கின்றது அரசாங்கம். இதனால் மக்கள் புலம்பெயர்வை தெரிவாக எடுத்துக்கொள்கின்றனர். அல்லது தங்களது உணவுகளை - தேவைகளைச் சுருக்கிக் கொள்கின்றனர்.

இலங்கையில் பொருளாதார நெருக்கடியின் பின்னர் இவையிரண்டுமே அதிகரித்திருப்பதாகவே சகல புள்ளி விவரங்களும் வெளிப்படுத்துகின்றன. ஆனால் நாட்டு மக்களைப் பாதுகாக்கவேண்டிய ஆட்சியாளர்களோ கொஞ்சம்கூட அதுபற்றிய சிரத்தை இல்லாது தங்களது ஆடம்பர வாழ்க்கையைக் குறித்தே சிந்தித்துச் செயற்படுகின்றனர். அவர்களின் ஆடம்பரக்கூத்துக்கும் சேர்த்து மக்கள் வரி கட்டவேண்டியிருக்கின்றது.

## "சொர்ப்பன சுந்தரியை யாரு வைச்சிருக்கிறா?"

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் 2023ஆம் ஆண்டு நவம்பர் மாதம் டுபாய் பயண விவரங்கள் தொடர்பான தகவல்கள் ஜனாதிபதி செயலகத்திடம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்துக்கு அமைவாக கோரப்பட்டன. ஜனாதிபதி செயலகம் அனுப்பிய கடிதத்தில், அந்தப் பயண விவரங்களை சுற்றாடல் அமைச்சே கையாண்டதாகவும் அவர்களிடம் அந்தத் தகவலை கோருமாறும் அறிவுறுத்தியிருந்தது.

இதற்கு அமைவாக சுற்றாடல் அமைச்சிடம் தகவல் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதற்குப் பதில் இல்லை.

குறித்தளிக்கப்பட்ட அலுவலரிடம் மேன்முறையீடு செய்யப்பட்டும் பதில் இல்லை. இறுதியில் தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்ட பின்னர், சுற்றாடல் அமைச்சு கடிதம் ஒன்றை அனுப்பியது.

அதில், ஜனாதிபதி 2023ஆம் ஆண்டு நவம்பர் மாதம் டுபாய்க்கு காலநிலை மாநாட்டில் பங்கேற்கச் சென்றமை தொடர்பான விவரங்கள் சுற்றாடல் அமைச்சிடம் இல்லை என்றும் ஜனாதிபதி செயலகத்தில் கோருமாறு குறிப்பிட்டுள்ளது. ஜனாதிபதியின் இந்தப் பயணச் செலவு விவரம் எங்கேதான் இருக்கின்றது?






யு.மதுசன்
தரம் -12
யா/ சென்.ஜோன்ஸ் கல்லூரி.




யே. ஷினுஸ்ரிக்கா
தரம் - 11A
மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி



சி.அபிந்திகா,
தரம் – 3A
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி



நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555



யு. சங்கவி
தரம் – 10
யா/திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாட்டெழுத மறந்த காலம்



○ கோகுலராகவன்

இரண்டு பேரை தேடத் தொடங்கினேன்.
ஒருவர் ஜோசப் கிருஷ்ணா.
இன்னொருவர் புகழேந்தி.
யார் இவர்கள்.....?

நீங்கள் திரைப்படங்களில் எழுத்தோட்டங்களை வாசிக்கும் பழக்கம் கொண்டவராக இருந்தால் இருவர் பேரையும் கண்டிருக்கலாம்.

திரைப்படங்களைப் பார்க்கும் போது திரையில் தோன்றும், நடிகர், இசையமைப்பாளர், தொழில்நுட்பக் கலைஞர்கள், நடன இயக்குநர், ஒளிப்பதிவாளர் பெயர் விவரங்களையும் மினக்கெட்டு வாசிப்பது என் வழமை இப்படித்தான் ஒளிப்பதிவாளராக இருந்த கர்ணன் எனக்கு திரையில் அறிமுகம்.

அவர் பத்து வரையான திரைப்படங்களை இயக்கியும் உள்ளார்.

அவற்றில் "எங்க பாட்டன் சொத்து" என்ற படமும் ஒன்று. ஒளிப்பதிவாளர் கர்ணன் கப்பலோட்டிய தமிழன், மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன், பொல்லாதவன் (ரஜினி நடித்தது) போன்ற படங்களுக்கு ஒளிப்பதிவாளராக இருந்தவர், சாகசக் காட்சிகளையும் பாடல் காட்சிகளையும் ஒளிப்பதிவு செய்வதில் திறமை மிக்கவர் .




இன்றைய பல இளம் ஒளிப்பதிவாளர்களுக்கு ஆதர்ஷ குருவும் கூட. ஒருநாள் எங்களிடம் வேலைக்கு வரும் கெந்தி ராசன் 'எங்க பாட்டன் சொத்து படத்தில அசோகன் தலை உருளும்' என்றான்.

நான் மனதில் இந்தப் படம் பார்க்க வேண்டும் என்று நினைத்து கொண்டேன்.

அப்ப 2000 ஆம் ஆண்டு சங்கானையில் இடம்பெயர்ந்து இருக்கிறபோது சங்கானை மனோன்மணி ஆலயம் தாண்டிப் போகும் போது ஒரு மினி சினிமா இருந்தது. பழைய மில் கட்டடம். பெயர் ஞாபகம் இல்லை.

அங்கே அன்று 'எங்க பாட்டன் சொத்து' படம்.

கெந்தி இராசன் சொன்னது ஞாபகம் வர,ஒளிப்பதிவாளர் கர்ணன் வித்தியாசமாக ஏதும் செய்திருப்பார் என்ற எண்ணத்தில் படத்துக்காக போனேன்.ஒரு பத்து பேர் தான் மினி சினிமாவில இருந்தார்கள்.

நாயகன் ஜெய்சங்கர்.

ஜெய்சங்கர் ஜேம்ஸ் பொண்ட் படங்களை பிரதி பண்ணி நடிப்பார். கொஞ்சம் விறுவிறுப்பாக இருக்கும் என்றே நினைத்தேன்.

படமா அது? கெந்தி ராசனைக் கண்டால் கட்டையாலே அடிக்க வேண்டும். படம் படு மோசம். அசோகன் தலை என்னவோ உருளும்தான். ஆனால் ஏன் ? என்று தெரியவில்லை .

அதிக வன்முறை காட்டினால் படம் இரசிகர்களை கவரும் என்று கர்ணன் நினைத்தாரோ என்னவோ?

ஜெய்சங்கர் சிங்கத்தோடு சண்டை போடுவார். எடிட்டிங் தவறால் சிங்கம் எங்கோ இருக்க ஜெய்சங்கர் எங்கோ பாய்வார். படம் பார்க்க வந்த பத்து பேரில் நாலுபேர் ஏற்கனவே போய்விட்டார்கள். நான் வீட்டை போய் என்ன செய்வது ?இடம்பெயர்ந்த நேரம். சகித்துக் கொண்டு

படம் முடியவே வெளியே வந்தேன்.

படத்தில் கதையெல்லாம் கிடையாது.

இருபது ரூபா தண்டம்.

நடிகரைத் தேடாமல் இயக்குநரைத் தேடி படம் பார்க்க ஆரம்பித்த காலம்.

இப்படி பல படங்களில் ஏமாந்தது உண்டு.

இயக்குநர் புகழேந்தி தங்கராஜ் "காற்றுக்கென்ன வேலி" என்கிற திரைப்படம் எடுத்தவர். இலங்கைத் தமிழ்ப் பெண் போராளிக்கு அடைக்கலம் கொடுக்கும் கதை. ஈழக்கதைக்காக பலரது பாராட்டையும் பெற்ற படம். புகழேந்தி தங்கராஜை யாழ்ப்பாணத்தில் "மானுடத்தின் ஒன்று கூடலில்" சந்தித்து உரையாடியும் இருக்கிறேன்.

இதன்பிறகு "உள்ளக்கடத்தல்" என்று என்றொரு படம் இயக்கினார். படம் படுமோசம். எந்தவொரு அடையாளமும் அற்ற படம். அதில் படக்கொப்பி வாடகை ஒரு ஐம்பது ரூபா நட்டம் .

'சரி ஜோசப் கிருஷ்ணா யார் ?'

அவர், இசையமைப்பாளர் எம்.எஸ். விஸ்வநாதனின் இசை ஒருங்கிணைப்பு உதவியாளர்.

புகழேந்தி கே.வி.மகாதேவனின் இசை ஒருங்கிணைப்பு உதவியாளர்.

உண்மையில் இவர்கள் போன்ற உதவியாளர்களை நம்பியே பல படங்களுக்கு இசையமைக்க எம்.எஸ்.வியும்,கே.வி.மகாதேவனும் ஒப்புக்கொள்வார்கள்.

இந்த இருவரும் பின்னாளில் ஏன் பெரிய இசையமைப்பாளர்களாக மாறவில்லை என்பதே எனது ஆச்சரியம்.

எம்.எஸ்.வியிடம் உதவியாளராக இருந்தவர்கள் சங்கர்-கணேஸ்,ஜி.கே.வெங்கடேஸிடம் உதவியாளராக இருந்தவர் இளையராஜா. இருவரும் பெரிய இசையமைப்பாளர்களாக உருவாகினார்கள்.

சங்கர்- கணேஷின் "மேகமே மேகமே வானிலா தேயுதே" பாடல் யாரால் மறக்க முடியும் ?

இசை உதவியாளரர்களின் பணி மிகப்பெரியது இசைக்குறிப்புகளை எடுப்பது, வாத்தியக்காரர்களை தேர்ந்தெடுத்து வாசிக்க வைப்பது , பாடகர்களுக்கு பாட்டைச் சொல்லிக் கொடுப்பது போன்றவை.

இவர்கள் இசையில் தேர்ந்தவராக இருக்கும் பட்சத்தில் மட்டுமே இவை சாத்தியமாகும்.

இதில் புகழேந்தி மலையாள சினிமாவில் பத்து வரையான படங்களும், தமிழில் இரண்டு படங்களுக்கும் இசையமைத்தவர். தொடர்ந்து வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஜோசப் கிருஷ்ணா தனியாக எந்தப்படத்துக்கும் இசையமைக்கவில்லை.

கே.வி.மகாதேவனின் மிகப் புகழ் பெற்ற படமான "சங்கராபரணம்" திரைப்படத்திற்கு இசையமைத்து தேசிய விருது பெற்றவர். இதில் உதவியாளர் புகழேந்தியின் பங்கு மிகமுக்கியமானது என்பதை எஸ்.பி.பாலசுப்பிரமணியம் ஒரு தடவை நேர்காணல் ஒன்றில் குறிப்பிட்டிருந்தார்.

கர்நாடக சங்கீதம் தெரியாத தன்னை கர்நாடக சங்கீத பாணியிலான பாடல்களை சங்கராபரணத்தில் பாட வைத்த பெருமை புகழேந்தியையே சாரும் என்றார் பாலசுப்ரமணியம். இருவரும் உதவியாளர்களாகவே இசையுலகில் இருந்துகாலமாகிவிட்டார்கள்.

புகழ் பெறவோ, பணம் சம்பாதிக்கவோ காலம் பாட்டெழுத வேண்டுமோ ?



## பாகம் 2

# ஊர்ப்புதினம்



○ இராகவன்

போனகிழமை ஒப்றேசன் லிபறேசனில் நடந்த சாய்ப்பைப் பற்றிச் சொன்னனான். அண்டைக்கு இளமாக்கள் எல்லாரையும் இலங்கை ஆமி சாய்ச்சுக் கொண்டு போனாப்போலை இளையண்ணனும் அதுக்குள்ளை அகப்பட்டுட்டான் எண்டு பெரியம்மா வீட்டிலயிருந்து தகவல் கிடைச்சுது. இதைக் கேட்டு அம்மா பதகளிக்கேல்ல. "உவருக்கு உதுவேணும். என்ர சொல்லக்கேட்டு வீட்டிலயிருந்திருந்தால் உது நடந்திருக்காது. தம்பி போய் நல்லாப்பட்டுப் பழுத்து வரட்டும். அப்பதான் உவருக்குப் புத்திவரும்" எண்டு சொல்லிப்போட்டு இருந்திட்டார்.

நானும் மூத்தண்ணாவும் வீட்டைதானிருந்தனாங்கள். அண்டைக்குப்பொழுதுபடகேக்குள்ள இரண்டு ஆமிக்காரர் எங்கட வீட்டுக்குள்ள வந்தாங்கள். அம்மாக்குச் சிங்களம் நல்லாத் தெரியும். அவங்களக் கண்டிட்டு அம்மா வாசலுக்குப் போனா. ஒருத்தன் 'வத்துறு' எண்டு கேட்டான். அம்மா ஒரு செம்பில தண்ணி வாத்துக் கொண்டு போனா. அதைக் கண்டுட்டு அவங்கள் 'பொன்ன வத்துறு நெ' நானட் வத்துறு' எண்டாங்கள். அம்மாவும் திருப்பி 'நானட வத்துறு நெ' எண்டா. அவங்கள் 'ஸ்துதி' எண்டு சொல்லிப்போட்டு போட்டாங்கள். பிறகு அம்மா விளக்கமாச் சொன்னா. "அவங்கள் தண்ணி கேட்டாங்கள். நான் குடிக்கிறதுக்காக்கு மெண்டுட்டு செம்பில கொண்டு போனன். பேந்து குளிக்கிற தண்ணியாம். நான் இல்லையெண்டு சொன்னன். போறாங்கள்" எண்டு சொன்னா. அண்டைக்கு ஆமிக்காரர் சாய்ச்சுக் கொண்டு போனாக்களை சாவச்சேரி றோட்டால ஆயத்துக் கொண்டு போய்ப் பிறகு மேற்கை திருப்பி கிராய்ப் பிள்ளையார் கோயிலுக்குக் கொண்டு போகிட்டாங்கள்.

இந்தக் கிராய்ப் பிள்ளையார் கோயிலத்தான் நான் முன்னம் ஊர்ப்புதினத்தில வெல்லனிற் பிள்ளையார் கோயில் எண்டும் சொல்லியிருக்கிறன். அண்டைக்கிரவு அங்கைதான் எங்கடயாக்கள வைச்சிருந்தவங்கள். எங்கடயாக்காள் அவங்களிட்ட பசிக்குதெண்டு கேட்டாப்போல அவங்கள் கோயில் களஞ்சியத்தை உடைச்சுக் சக்கரையெல்லாம் அள்ளிக் குடுத்திருக்கிறாங்கள்.

54

எங்கடயாக்களப் பற்றித் தெரியுந்தானே? அண்டைக்கிரவு தங்கிநிண்டு கோயில நாறடிச்சிட்டினம். மறுநாள்தான் பிழையான இடத்துக்கு ஆக்கள கொணந்திட்டியளெண்டு ஆமிக்கு மேலிடத்திலயிருந்து ஓர்டர் வந்திருக்கு.

பிறகு அங்கையிருந்து வந்த வழியே திருப்பிச் சாய்ச்சுக்கொண்டு போய்ப் பருத்தித்துறைக் ஹாட்லிப் பள்ளிக்கூடத்தில வைச்சிருந்து 'வெள்ளை வேட்டி சுப்பன்' எண்டொராளைப் பற்றிக் கேட்டுக் கேட்டு எல்லாருக்கும் நல்ல சாத்து விழுந்திருக்குது. இதிலயும் இளையண்ணன் எப்பிடியோ தப்பிட்டான். பிறகு அங்கை வைச்சுக் கப்பல்ல பூஸாவுக்கு ஏத்தியிட்டாங்கள். அதுக்குள்ள ஒரு பத்திருபது பேரைத்தான் விட்டவங்கள். இதில இளையண்ணனும் ஒராள். அவன் எப்பவும் நேராச் சிந்திக்காமல் குறுக்கு வளத்திலதான் சிந்திப்பான். அந்த விடயத்திலயும் அவன் அப்பிடித் திங்க் பண்ணினதால தான் பூஸாவுக்குப் போகாமல் வீட்டை திரும்பி வந்தவன். அவன் எப்பிடித் திரும்பி வந்தவன் எண்டதை வாறகிழமை சொல்லுறன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செய்யாத தவறுக்கு சிறைவாசம்

## ஒரு புலனாய்வு அதிகாரிக்கு அரசு கொடுத்த பரிசு

கே.வி.தவராசா

(சென்றவாரத் தொடர்ச்சி)



## குற்றத்தை மறுதலித்த கைதி

கைதியாகிய தர்மதாசவினால் வழங்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயமாக வழங்கப்பட்டதென நீதிமன்றம் கட்டளை வழங்கிய பின்னர் 2018 ஆம் ஆண்டு இந்த வழக்கு பிரதான விளக்கத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நீதிமன்றம் எதிராளியை நோக்கி 'நீர் வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயவிருப்பில் வழங்கப்பட்டுள்ளதாக நீதிமன்றம் கட்டளை வழங்கியுள்ளது' மேலும் 2007 ஆம் ஆண்டிலிருந்து சிறையில் உள்ளீர். உமக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்படவில்லை. அவசரகால ஒழுங்குவிதியின் கீழேயே தாக்கல் செய்யப்பட்டுள்ளது .எனவே தொடர்ந்து வழக்கை கொண்டு செல்லாமல் குற்றத்தை ஒத்துக்கொண்டால் குறைந்த தண்டனை வழங்க முடியும்' எனக் கூறியதுடன், எதிராளியின் நிலைப்பாட்டை நீதிமன்றுக்குத் தெரிவிக்கும்படி எனக்கு அறிவுறுத்தல் வழங்கி நீதிமன்ற செயற்பாடுகள் 30 நிமிடம் ஒத்திவைக்கப்பட்டன. நீதிமன்றச் செயற்பாடுகள் ஒத்திவைக்கப்பட்ட பின்னர் நான் தர்மதாசவிடம் 'குற்றத்தை ஒத்துக் கொண்டு சிறிய காலத் தண்டனை பெறச் சம்மதமா?' என வினவினேன்.

அதற்கு தர்மதாச என்னிடம், நான் கண்டியைப் பிறப்பிமாகக் கொண்டவன். எனது குடும்பம், பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் மத்திய மாகாணத்திலேயே வசிக்கின்றனர். பயங்கரவாதத் தடைப் பிரிவினர் என்னைக் கைது செய்த தினமான 2007 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதிதான் எனது கடைசி மகன் பிறந்தான். 11 வருடங்களாக என் பிள்ளையை நான் காணவில்லை. என் பிள்ளையை சிறைச்சாலைக்கு கொண்டுவந்து என்னிடம் காட்டவேண்டாம் என உறுதியாக என் மனைவியிடம் கூறியுள்ளேன். விசாரணையுமின்றி விடுதலையுமின்றி இந்த வழக்கு முடிவுக்கு வராதநிலையிலேயே எமது அமைச்சர் எஸ். பி. திஸநாயக்க மூலம் உங்களின் உதவியை நாடினோம். நான் கைதுசெய்யப்பட்டு 10 வருடங்கள் கடந்து விட்டன. நான் குற்றத்தை ஒத்துக்கொண்டு சிறிய தண்டனையை அனுபவித்து விடுதலையானாலும் எனது ஊரான கண்டிக்குச் செல்லமுடியாது .அதனாலேயே நான் குற்றத்தை ஒத்துக் கொள்ளவில்லை. நான் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு உதவி ஒத்தாசை வழங்கியதாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இந்தக் குற்றங்களை ஒத்துக்கொண்டு தண்டனையின் பின்னர் எனது ஊருக்கு செல்லமுடியுமா? எனது குடும்பத்தை உற்றாரும் உறவினரும் ஒதுக்கி வைத்துள்ளமையால் எனது குடும்பம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் நான் 11 வருடங்களாக நீரிழிவு நோயினால் கடந்த இரண்டு வருடங்களாக எனது சிறுநீரகம் செயல் இழந்து பாதிக்கப்பட்டுள்ளேன். முறையான மருத்துவமும் எனக்குக் கிடைப்பதில்லை. வழக்கு முடிவடையும் வரை நான் உயிருடன் இருப்பேனா என்பதில் எனக்கு பலத்த சந்தேகம் உண்டு. இந்த வழக்கு முடிவடைய எத்தனை வருடங்களானாலும் பரவாயில்லை.நான் நிரபராதியென விடுதலை பெற்று வீடு செல்லவேண்டும் அல்லது தண்டனை பெற்று சிறையிலேயே மடியவேண்டும் என்பதுதான் எனது ஆசை.

எனக்கு நீங்கள் விடுதலை வேண்டித் தருவீர்கள் என்ற நம்பிக்கை என் மனைவிக்கும் என் குடும்பத்தாருக்கும் உண்டு. ஆகையால் நான் குற்றத்தை ஒத்துக்கொள்ளப்போவதில்லை. நீங்கள் வழக்கை நடத்துங்கள் "

- என்று என்னிடம் மன்றாடினார்.

இந்த வழக்கின் எதிராளியாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள துர்யலாகே தர்மதாச, தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொண்டு குறைந்த கால தண்டனை பெறுவதற்கு விருப்பம் தெரிவிக்காததை நீதிமன்றிற்குத் தெரியப்படுத்தினேன். பின்னர் பிரதான வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்டு அரச தரப்பு சாட்சிகளாக பொலிஸ் பரிசோதகர் ஹேமச்சந்திர, பொலிஸ் பரிசோதகர் மொகமட் ஆப்தீன், அரச பகுப்பாளர்களான ஏ.வலியங்க மற்றும் மடவெல,ஆகிய சாட்சியங்களை அரச சட்டத்தரணி நெறிப்படுத்தினார்.

## சாட்சிய முரண்பாடுகள்

அரச புலனாய்வுத்துறை அதிகாரியான துர்யலாகே தர்மதாசவுக்கு எதிராக அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் சட்டமாஅதிபரினால் 2010 ஆம் ஆண்டு கொழும்புமேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் எதிராளியின் உடைமையில் இருந்து ஆர்.டி.எக்ஸ். வெடிமருந்து 23 கிராம் கைப்பற்றப்பட்டதாகக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டை ஒப்புறுதிப்படுத்த அரசதரப்பில் சாட்சியமளிக்க அரசபகுப்பாளர் ஏ.வலியங்க அழைக்கப்பட்டார். அவரது சாட்சியத்தின் மூலம் ஆர்.டி.எக்ஸ். வெடிமருந்து 23 கிராம் கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டு ஒப்புறுதிப்படுத்தப்பட்டது. ஆனால் அரச சாட்சியான பொலிஸ் பரிசோதகர் ஹேமச்சந்திர தனதுசாட்சியத்தில்ஆர்.டி.எக்ஸ். வெடிமருந்து 3 கிராமே எதிராளியின் உடைமையிலிருந்து கைப்பற்றியதாக சாட்சியம் அளித்தார். எனவே அரச சாட்சிகளான அரசபகுப்பாளர் ஏ.வலியங்கவின் சாட்சியமும் பொலிஸ் பரிசோதகர் ஹேமச்சந்திரவின் சாட்சியமும் பெரும் முரண்பாட்டை வெளிப்படுத்தின.

மேலும் இந்தவழக்கில் எதிராளியின் உடைமையில் இருந்து 8 சயனைட் வில்லைகளை கைப்பற்றியதாக பொலிஸ் பரிசோதகர் ஹேமச்சந்திர சாட்சியமளித்துள்ள போதிலும் வழக்கின் சான்றுப் பொருளாக 8 சயனைட் வில்லைகளும் அரசதரப்பால் நீதிமன்றில் முன்வைக்கப்படவில்லை என்பதும் எனது சமர்ப்பணத்தில் நீதிமன்றின் கவனத்துக்குகொண்டு வரப்பட்டது. பயங்கரவாதத் தடைப் பிரிவுப் பொலிஸ் பரிசோதகர் ஹேமச்சந்திர தனது சாட்சியத்தில் இந்த வழக்கின் எதிராளியான துர்யலாகே தர்மதாசவை 2007ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி பொரளையில் அமைந்துள்ள அரசபுலனாய்வுப் பிரிவுக்குச் சென்று கைது செய்த தினத்தில் மேலும் 19 சந்தேக நபர்களை கைது செய்து அவர்களின் உடைமையிலிருந்தும் வெடிபொருட்களை கைப்பற்றிதாகவும் சாட்சியமளித்தார். ஆனால் குறுக்கு விசாரணையில் கைதிகளின் உடைமையிலிருந்து கைப்பற்றி அரசபகுப்பாளர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்ட சான்றுப் பொருட்களில் பலமுரண்பாடுகள் இருந்ததை சாட்சியான பொலிஸ் பரிசோதகர் குறுக்கு விசாரணையில் ஏற்றுக்கொண்டுள்ளார்.

பொலிஸ் பரிசோதகர் தனது சாட்சியத்தில் மிகத் தெளிவாக எதிராளியான துர்யலாகே தர்மதாசாவின் தனி உடைமையிலிருந்து ஆர்.டி.எக்ஸ். வெடிமருந்து 3 கிராமை கைப்பற்றியதாகச் சாட்சியமளித்துள்ளார். ஆனால் அரசபகுப்பாளர் ஏ.வலியங்கவின் சாட்சியத்தின்படி ஆர்.டி.எக்ஸ். வெடிமருந்து 23 கிராமாகும். 3கிராம் ஆர்.டி.எக்ஸ். வெடிமருந்து எவ்வாறு 23 கிராமாகியது ?என்பதற்கான நியாயமான நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளக்கூடிய விளக்கம் அரசதரப்பால் முன்வைக்கப்படவில்லை என்ற விடயமும் நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

எதிராளியாகிய துர்யலாகே தர்மதாசவினால் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் "சுயமாக வழங்கப்பட்ட வாக்குமூலமென" நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளபோதிலும் துர்யலாகே தர்மதாச தனது கையினாலேயே சிங்கள மொழியில் எழுதிக் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் உள்ளடக்கத்தில் உள்ள பதிவுகளில் தர்மதாச மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு களை பற்றிய நிகழ்வுகள் நடைபெற்றதாக எந்தப் பதிவும் உள்வாங்கப்படவில்லை என்பதுடன் பொலிஸ் விசாரணையிலும் எந்தச் சாட்சியங்களும் ஒப்புறுதிப்படவில்லை என்பதையும் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

சட்டமா அதிபரினால் புலனாய்வுத் துறை அதிகாரியான துர்யலாகே தர்மதாசவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட இந்தவழக்கில் அரசதரப்பினால் வழங்கப்பட்ட சாட்சியங்களின் சாட்சியத்திலும் மற்றும் சான்றுப் பொருட்களிலும்காணப்பட்ட முரண்பாடுகளை நீதிமன்றம் கவனத்தில் கொண்டு எதிராளியை விடுதலை செய்யவேண்டுமென்ற வாதம் என்னால் முன்வைக்கப்பட்டது.




## தர்மதாச விடுதலை

அரச தரப்பினதும் எதிராளிகள் தரப்பினதும் வாதப்பிரதிவாதங்களை செவிமடுத்த மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் ஹெட்டிஆராச்சி தனது தீர்ப்பில் எதிராளிதரப்பு வாதத்தை கவனத்தில் கொண்டு எதிராளிமீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை அரசதரப்பு நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கத் தவறியுள்ளமையால் எதிராளியான முன்னாள் புலனாய்வுத்துறை அதிகாரியை விடுதலைசெய்தார்.

## தர்மதாசவுக்கு இழப்பீடு

பயங்கரவாதத்தடைச் சட்டத்தில் கைதுசெய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்ட கைதிக்கு நஷ்டஈடு வழங்கப்பட்ட முதல் வழக்கு இதுவாகும். 12 வருடங்களின் பின்னர் நிரபராதியென விடுதலையான கைதிக்கு நஷ்டஈடு வழங்கக் கோரி அரசுக்கு எதிராக சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவினால் மனிதஉரிமைமீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டதையடுத்து 55 லட்சத்து 23 ஆயிரத்து 808 ரூபா இழப்பீடு அரச தரப்பால் வழங்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்ட தர்மதாச சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா, பொலிஸ்மா அதிபர், களனி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொஷான் டயஸ், சிறைச்சாலைப் பொறுப்பதிகாரி, சிறைச்சாலை அத்தியட்சகர், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரை பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிட்டு அரசியலமைப்பின் 17 மற்றும் 126 ஆம் உறுப்புரைகளுக்கு அமைய இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

அந்த மனுவில் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது சிறுநீரகப் பிரச்சினையால் தர்மதாச அவஸ்தைப்பட்டுள்ளார். ஆனால் அதனைச் சிறை அதிகாரிகள் ஒரு பொருட்டாகவே எடுக்கவில்லை. சிகிச்சை அளிக்காமல் கைதியை நோயில் துடிக்க விடுவது கூட கோரமான சித்திரவதைதான். விளக்கமறியலில் இருந்தபோது தர்மதாச அடிக்கடி சுகவீனம் அடைந்துள்ளார்.

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது உரிய சிகிச்சைகள் வழங்கப்படாமையாலேயே அவரின் நோய் தீவிர நிலைமைக்குச் சென்றுள்ளது. இப்போது அவரின் இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்து இரத்தச் சுத்திகரிப்புச் செய்யவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். மனுதாரருக்கு உரிய சிகிச்சையும், பராமரிப்பும் வழங்கப்பட்டிருந்தால் இவ்வாறான மோசமான நிலையை அடைந்திருக்க மாட்டார் தர்மதாசவின் இந்நிலைக்கு பொலிஸாரும், சிறைச்சாலை தரப்பினரும், சட்டமா அதிபருமே காரணம் எனக் குற்றம் சாட்டி நீதியான நிவாரணத்தைக் கோரி உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவில் ஒரு நிரபராதியான நேர்மையான பொலிஸ் உத்தியோகத்தரை 12 வருடங்கள் சிறை வைத்திருந்து அவரின் எதிர்காலத்தையே இருளாக மாற்றி விட்டது அரசாங்கம். தர்மதாச குற்றமற்றவர் என்று விடுவிக்கப்பட்ட போதும் அவரை மீளவும் பொலிஸ் பதவியில் அமர்த்தவோ நஷ்டஈடு வழங்கவோ எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. அவர் சிறையில் இருந்தபோது மாமியாரின் ஓய்வுதியப் பணமே தர்மதாசவின் பிள்ளைகளுக் கும், மனைவிக்கும் வாழ்க்கையை கொண்டு செல்ல உதவியது. தர்மதாச விடுவிக்கப்பட்ட பின்னரும் கூட பொலிஸ் வேலை மீளக் கிடைக்காமையால் தொடர்ந்தும் அவரது குடும்பம் மாமியாரின் ஓய்வுதியப் பணத்தையே தங்கள் வாழ்வாதாரமாக நம்பியிருக்கவேண்டிய அவலம் தொடர்கின்றது என மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் தர்மதாச 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் மரணமடைந்ததையடுத்து தர்மதாசவின் மனைவியான சந்தியா தமயந்தி மனுதாரராக பெயரிடப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட மனு உயர் நீதிமன்றில் விசாரணைக்குத் திகதி குறிப்பிடப்பட்டிருந்தது. 2022.06. 24 ஆம் திகதி தர்மதாசவின் மனைவிக்கு அரசினால் 55 லட்சத்து 23 ஆயிரத்து 808 ரூபா இழப்பீடு வழங்கப்பட்டது.

(அடுத்த வழக்கு அடுத்த வாரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகப்போர் மிக அருகில்...!



ஆர்.பிரகாஷ்

ரஷ்ய - உக்ரைன் மோதல், ஓர் உலகப்போராக மாற்றம் பெறுவதற்கான அத்தனை ஏதுநிலைகளும் வலுவாக ஏற்பட்டிருக்கின்றன. உக்ரைனின் எல்லையில் உள்ள ரஷ்யப் பிராந்தியமான குர்ஸ்க் வழியாக சுமார் 12 கிலோமீற்றர் அளவுக்கு ஊடுருவியுள்ள உக்ரைன் படைகள் ரஷ்ய எல்லைக்குள் நூற்றுக்கணக்கில் தற்போது நிலை கொண்டிருக்கின்றன. உச்சக்கட்டமாக ரஷ்யாவில் தமது இராணுவத்தளமொன்றையும் உக்ரைன் படைகள் அமைத்திருக்கின்றன. தற்போது குர்ஸ்க் பிராந்தியத்துக்கு அருகிலுள்ள பிரையன்ஸ்க் பிராந்தியத்துக்குள்ளும் ஊடுருவுவதற்கு உக்ரைன் படைகள் தீவிரமாக முயன்று கொண்டிருக்கின்றன. இங்கு கோடுகாட்ட வேண்டிய விடயம் யாதெனில், இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் ரஷ்ய எல்லைக்குள் பிறிதொரு நாட்டு இராணுவம் ஆக்கிரமிப்பை மேற்கொண்டிருப்பது இதுவே முதல்முறை.

நேட்டோவில் உக்ரைன் இணைந்தால், உக்ரைனுக்கு ஆதரவாக நேட்டோக் கூட்டணி நாடுகள் ஆயுதம் ஏந்தும். அவ்வாறு ஆயுதம் ஏந்தினால், அது ரஷ்யாவின் இருப்பை இராணுவ ரீதியாகவும் பிராந்திய ரீதியாகவும் இல்லாமல் செய்யும். ரஷ்ய எல்லைக்குள் பிறிதொரு நாட்டு இராணுவம் ஆக்கிரமிப்புகளை மேற்கொள்ளும் அளவுக்கு நிலைமை கைமீறும். இந்த நிலை ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகத்தான் உக்ரைன் மீது ரஷ்யா இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது. ஆக, நேட்டோவில் இணைந்தால் எது நிகழ்ந்துவிடும் என்று ரஷ்யா அச்சம்கொண்டதோ தற்போது நேட்டோவில் இணையாமலே அதை நிகழ்த்திக் காட்டியிருக்கின்றது உக்ரைன். ஆனால், உக்ரைனின் இராணுவ நடவடிக்கையின் பின்னணியில் பலநூறு கேள்விகளும் இருக்கவே செய்கின்றன. உக்ரைனின் ஆக்கிரமிப்பு நடவடிக்கையை ஊதிப் பெருப்பித்துப் பூதாகரமாக்க வேண்டிய தேவை ரஷ்யாவுக்கு உள்ளது. ஏனெனில், ரஷ்யா திட்டமிட்டுள்ள பரந்துபட்ட போரை முன்னெடுப்பதற்கு தகுந்த ஆரம்பப் புள்ளியொன்று அதற்கு அவசியம். அந்த ஆரம்பப் புள்ளியாக குர்ஸ்க் பிராந்தியத்தை ரஷ்யா கருதுகின்றது.

ஆனால், உக்ரைனோ, 'இது ஆக்கிரமிப்பல்ல. குர்ஸ்க் பிராந்தியத்தில் நாம் போர்க் கைதிகளாகப் பிடித்துள்ள ரஷ்யப் படையினரைக்கூட விடுவிக்கத் தயாராகவுள்ளோம். குர்ஸ்க் பகுதியில் இருந்து உக்ரைனுக்குள் ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்படக்கூடாது என்பதற்காகவே இந்த நடவடிக்கை' என்று அறிவித்திருக்கின்றது.

ஆனால், குர்ஸ்க் பிராந்தியத்தை ஒரு பெரும் போருக்கான முனையாகக் கொள்வதில் தற்போது ரஷ்யா தீவிரம் காட்டி வருகின்றமையை கிரம்ளினின் நடவடிக்கைகளில் இருந்து அவதானிக்கமுடிகின்றது. நெஞ்சைப் பதைபதைக்க வைக்கும் வகையில்தான் புடினின் இறுதி அறிவிப்பு அமைந்திருக்கின்றது. 'குர்ஸ்க் பிராந்தியத்துக்குள் பிரிட்டனின் ஆயுதங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

அத்துடன், ஆங்கிலமொழி பேசுகின்ற இராணுவத்தினர் அங்கு போரிடுகின்றனர். ஆக, இது உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான போர் அல்ல' என்று புடின் தெரிவித்துள்ளார். ஆங்கிலமொழி அல்லது பிரெஞ்சு மொழி பேசுகின்ற இராணுவத்தினர் (அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ்) என்று ரஷ்ய எல்லைக்குள் கால் வைக்கின்றார்களோ அன்று அவர்கள் சார்ந்த நாடுகளின் மீது ரஷ்யா போர் அறிவிப்புச் செய்யும் என்று ஏற்கனவே எச்சரித்திருந்தவர் புடின். அத்துடன் ரஷ்யா தனது இரண்டாம் தலைமுறை ஆயுதங்களைப் பயன்படுத்தும் தீர்மானத்துக்கு வர இந்த நடவடிக்கைகள் காரணமாக இருக்கும் என்றும் புடின் தெரிவித்திருந்தார். ஆறு மாதங்களின் முன்னர் புடின் எச்சரித்த விடயம் இப்போது நிகழ்ந்திருக்கின்றது. இன்னும் சொல்வதாயின், உக்ரைனை ஒரு பொறியை நோக்கி ரஷ்யா அழைத்துச் சென்றுள்ளதா என்றும் எண்ணவேண்டியுள்ளது. அமெரிக்க அதிபர் தேர்தல் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் கமலா ஹரிஸ் வெற்றி பெற்றால் உக்ரைனுக்கான உதவிகளையும், கொள்கைகளையும் அமெரிக்கா மாற்றாது. ஆனால் ட்ரம்ப் வெற்றிபெற்றால், மாற்றங்களுக்கு இடமுண்டு. ட்ரம்ப் ரஷ்யாவைப் பகைக்க விரும்பாத நிலைப்பாடு உடையவர். அத்துடன் எதையும் தொலாகப் பார்க்கும் அவர் உக்ரைனுக்கான உதவிகளையும் நிச்சயம் குறைப்பார். அது உயரத்திலிருந்து கீழே விழுவதுபோன்ற தாக்கத்தைத்தான் உக்ரைனுக்கு ஏற்படுத்தும். இவையெல்லாவற்றையும் ஒரு நேர்கோட்டில் வைத்துப்பார்க்கையில், ஒரு பெரும் மோதலுக்கான ஆரம்பப் புள்ளியை உக்ரைன் ஆரம்பிக்கவேண்டும் என்பதற்காக, பந்தை உக்ரைனின் பக்கமே திட்டமிட்டு புடின் தட்டிவிட்டிருக்கின்றாரா? என்ற நியாயமான சந்தேகங்களும் எழவே செய்கின்றன.




# நள்ளிரவில் குதறப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு தான் கொலை செய்யப்பட்டுள்ளார் என்பதை அறிக்கை கூறுகிறது. மேலும் அவர் கத்தாமல் இருப்பதற்காக வாய் கட்டப்பட்டிருந்ததாகவும், அவரது கால் முறிக்கப்பட்டுள்ளதாகவும் அதனை ஒருவர் மட்டும் செய்ய வாய்ப்பில்லை என்றும் அந்த மருத்துவக் கல்லூரியின் தலைமை மருத்துவர் கூறியுள்ளார். அது மட்டுமில்லாமல் அவரைப் பற்றித் தெரிந்த நபர்கள் தான் செய்திருப்பார்கள் எனவும் கூறியுள்ளார்.

மொத்தத்தில் இது கூட்டுப் பாலியல் வல்லுறவு கொலை என்று உறுதியாகிறது.

அதே மருத்துவமனையில் காவல்துறையில் குடிமை தன்னார்வலராகப் பணிபுரியும் 33 வயதான சஜ்சய் ராயை கைதுசெய்துள்ளது காவல்துறை. கொலை செய்யப்பட்ட இடத்தில் அவனது ப்ளூடூத் ஹெட்போன் ஆதாரமாக சிக்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. அவன் கருத்தரங்குக்குள் சென்று வந்ததாக சி.சி.டி. வி காட்சிகளில் பதிவாகியிருப்பதாகவும் கூறுகிறார்கள்.

குற்றம் சாட்டப்பட்ட சஞ்சய்ராயின் குடும்ப வாழ்க்கையும் மோசமாக உள்ளமை காவல்துறையின் விசாரணையில் தெரிய வந்துள்ளது. அவனுக்கு நான்கு முறை திருமணம் நிகழ்ந்துள்ளதாகவும் மற்ற மூவரும் அவனை பிரிந்து செல்லக் காரணம் படுக்கையறையில் மூர்க்கத்தனமாக நடந்து கொண்டதும், அடித்துத் துன்புறுத்தியதும்தான் என காவல்துறையின் விசாரணை சொல்கிறது.

இது குறித்து முறைப்பாடு செய்தும் சஞ்சய் ராய் காவல்துறையில் பணிபுரிந்ததால் நடவடிக்கை எடுக்கவில்லை என்கிறார்கள். அவன் வசிக்கும் பகுதியில் அவனது நடத்தையும் சரியில்லை என்று கூறுகிறார்கள். இத்தனையும் தெரிந்த காவல்துறை எப்படி அவனை வேலைக்குச் சேர்த்துக் கொண்டது? ஒருவேளை இது தான் காவல்துறைக்கான தகுதியோ?

பெண் மருத்துவரின் கொலைக்கு ஒரு வகையில் காவல்துறையும் உடந்தையாக இருந்துள்ளது அவர்களது விசாரணையில் தெரிகிறது. இது கூட்டுப் பாலியல் வல்லுறவுக் கொலை என்றால் மற்றக் கொலையாளிகள் யார் என்பது இதுவரை தெரியவில்லை.

கொலை நடந்த போது 'ஆர் ஜி கர் ' மருத்துவக்கல்லூரியின் தலைவராக இருந்த சந்தீப் கோஷ் இந்தப் பிரச்சினையில் அவரது செயற்பாட்டின் காரணமாக பலத்த எதிர்ப்பை சந்தித்தார். இதிலிருந்து தப்பிப்பதற்காக பதவியை இராஜினாமாச் செய்தார். ஆனால் அடுத்த 24 மணி நேரத்திற்குள் கொல்கத்தாவில் வேறொரு மருத்துவக் கல்லூரியில் முதல்வராக நியமிக்கப்பட்டுள்ளார். போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மருத்துவர்களுக்கு இது சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது.

கொல்கத்தாவில் சுகாதாரப் பணியாளர்களின் போராட்டம் தீவிரமடைந்து வருகிறது. சுகாதாரப் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறும், கொலையாளிகளைக் கைதுசெய்து தண்டனை வழங்குமாறும் கோரிக்கை வைத்து போராடுகிறார்கள். ஆரம்பத்தில் அவசர சிகிச்சையை தவிர்த்து மற்ற மருத்துவர்கள் போராட்ட களத்தில் இருந்தார்கள். வழக்கில் முன்னேற்றம் ஏற்படாத காரணத்தால் அனைத்து மருத்துவர்களும் களத்தில் குதித்துள்ளார்கள். இதனால் நோயாளிகளுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

மாநில அரசின் விசாரணையில் பெரிய முன்னேற்றம் ஏற்படாததால் நீதிமன்றம் தலையிட்டு வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்றியுள்ளது.

இந்நிலையில் சுதந்திர தினத்தன்று மாணவர்கள் நடத்திய போராட்டத்தில் மம்தா பானர்ஜி அரசு கட்டவிழ்த்த வன்முறையை கண்டித்தும் மருத்துவ மாணவியின் கொடூரக் கொலைக்கு நீதி கேட்டும் நாடு முழுவதும் 17, 18 திகதிகளில் 24 மணி நேரமும் பணியை புறக்கணித்துப் போராட்டம் நடத்தப் போவதாக இந்திய மருத்துவர்கள் சங்கம் அறிவித்துள்ளது. அதேநேரம் அவசர சிகிச்சை உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகள் செயற்படும் என்றும் அறிவித்துள்ளது. ஆனால் என்னதான் போராட்டங்கள் நடத்தினாலும் மௌமிதாவின் உயிர் திரும்பி வரப்போவதில்லை. மனித ஓநாய்களால் குதறப்பட்ட அவளது பூவுடலுக்கு குறைந்தபட்ச நீதியாவது கிடைக்குமா? என்பதே மக்களின் இப்போதைய ஏக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விண்ணாணம்

சஞ்சீவி சிறுகதை

மகேசன் கஜேந்திரன்

"டொக்.டக்...டொக்...டக்....டொக்...டக்" குதிரைகளின் குளம்பொலி கேட்குமாப் போலிருந்தது. முகில்கள் வெண் திரள் திரளாக அசைந்து பரவுவது அவரது பங்களாவின் சாளரங்களூடாகத் தெரிந்தது.

சிவத்தார் கடும் நித்திரையில் இருந்தவர்.. கண்களை மெதுவாகத் திறந்து பார்த்தபோது அப்படித்தான்..குளம்பொலியும் முகில்நகர்வும் மூளையத்தைக் கிளறிக்கொண்டிருந்தன.

சித்திர வேலைப்பாடுகள் நிறைந்த தேக்கு மேசையில்..வெள்ளிக் குவளைக்குள் பசும் பால் ஆவி பறந்து கொண்டிருந்தது.

பக்கத்தில் மூங்கில் சிறு கூடைக்குள் திராட்சை, தோடை, மா, மாதுளை எனப் பழங்கள் வேறு. அப்போதுதான் யாரோ வைத்து விட்டுப் போயிருக்கவேண்டும். கால் கொலுசுச் சத்தம் மெது மெதுவாகத் தொனி குறைந்து கொண்டிருந்தது.

பங்களாவின் பிரதான வாசல் கதவுகள் திறந்து கொண்ட சத்தம் கேட்டது. யாரோ வருவது போல இருந்தது.சிவத்தார் என்கிற பெரியவருக்கு. சாண்டில்யனின் கதைப் புத்தகத்தை வாசித்தபடியே.. அயர்ந்துவிட்ட சிவத்தார் பகற்தூக்க அசதி முழுவதும் நீங்கியவாறு "சிவ சிவா" என்று கொட்டாவி விட்டபடி, வருபவரைக் கண்டதும் சந்தோசத்துடன்பிரமித்தே போய்விட்டார். அவரது நண்பர் முகத்தார் தான் பட்டுவேட்டி சால்வை சரசரக்க வந்து கொண்டிருந்தார்.

☒ ☒ ☒ ☒

இரண்டுபேரும் ஒரே ஊரவர்கள். நாலைஞ்சு வயதுதான் வித்தியாசம். போட்டி போட்டுக் கொண்டு ஊர்த் தொண்டு செய்யிற பேர்வழிகள்.

ஏழை எளியவரைப் படிப்பிச்சு நல்லாக்கிறது..அன்னதானம்.. இரத்ததானம்..அனாதைகள் ஆச்சிரமம் எண்டு சிவத்தார் மினக்கெடுவார்.

முகத்தார் வேற மாதிரி.

மரம்நடுகை..காடழிப்புக்கு எதிரான போராட்டம்.. கள்ளமண் அள்ளுறவையோடு கொழுவுப்படுகிறது... லட்சம் லட்சமாச் செலவழிக்கிற திருவிழாக் காரரோடை குழம்பியடிக்கிறது..எண்டமாதிரி அவற்றை பாடு போகும்.

சிவத்தார் இங்கை வந்து இரண்டரை வருசமாச்சு. கொரோனா காலத்தில வந்தவர். இன்னும் பீ.ஆர் கிடைக்கேல்லை.கிடைச்சா சிவனே எண்டு இருந்திடுவாராம்.

ஆடி..புரட்டாதி மாதங்களிலை ஒவ்வொரு வருசமும் பிள்ளைகளைப் பார்த்து வர ஆசையாம்.

"என்ரை மனுசி மூண்டு வருசத்துக்கே முதலே.. மணவறைப் பொம்பிளை மாதிரி இங்கை வந்திட்டா. அவவுக்கு பீ.ஆர்உம் கிடைச்சிட்டுது. ஒவ்வொரு சித்திரைக்கும் பிள்ளைகளிட்டைப் போய் வாறவா. மனுசி குடுத்து வைச்சது..எத்தினை பேருக்கு அவிச்சுக் கொட்டியிருக்கும்.. ஏழை பாளையெண்டு" மனைவியைப் பற்றி புளுகிக் கொண்டார் சிவத்தார்.

" அது சரி ஆறுமுகம் இண்டைக்குத்தான் வந்தனியோ..இல்லாட்டி மினக்கேடோ?".

"இல்லை சிவம் அண்ணை. ஆறு நாளைக்கு முதல் வந்திருக்க வேணும்..மூத்தவன் வெளிநாட்டிலை இருந்து வந்தவன். அவன் அலுவலை முடிச்சுக் கொண்டு போயிட்டான். நானும் இங்கை வந்திட்டன் " என்றார்.

"என்ன நீ வெளிக்கிடேக்கை ஒண்டும் விட்டிருக்காதுகளே?"

"ஓம் . அண்ணர்.. சொந்த பந்தங்களுக்கும் கவலை தான். மகள் குழறிக்கொண்டே இருந்தவள்.மனுசிதான் பாவம்..படலை வரைக்கும் வந்து அழுது போட்டு மயங்கி விழுந்திட்டுது.மூத்தவன்தான் பயணம் அனுப்பிவிட்டவன்" சிவத்தார் தொடர்ந்தார்..

" ஏன் அவசரப்பட்டு வந்தனி? குமர்காரியத்தை முடிச்சுப் போட்டு வந்திருக்கலாம்"

" என்ன செய்யிறது சிவமண்ணை.. கள்ள மணல் அள்ளுறவனோடை கடும் பிரச்சினை.அவனை மூண்டு மாதம் உள்ளுக்கும் போடுவிச்சனான்...அவனாலை தான் இங்கை வரவேண்டியதாப் போட்டுது"

" ஆர் அந்த டிப்பர் காரனாலையோ?"

" ஓமண்ணை.."

"அடக்.கடவுளே ஒண்டுக்கும் யோசிக்காதை...நல்ல இடத்துக்குத்தானே வந்திருக்கிறாய்.. கொஞ்சக் காலத்திலை உன்ரை சொந்தங்கள் பந்தங்களின்ரை கவலை போயிரும்.

நீ...நல்ல போட்டோ ஒண்டை அனுப்பி விடு..அதுகள் அதைப் பாத்துப் பாத்து பழகிடுங்கள். எனக்கு வருமாப் போல உனக்கும் பீ.ஆர். கிடைச்சதும் ஆடி..புரட்டாதி எண்டு போய் மனுசி பிள்ளைகளோடை இருந்து சாப்பிட்டுக் கீப்பிட்டு வாவன்" என்றார் சிவத்தார்.

" என்ன செய்யிறது சிவமண்ணை.. கள்ள மணல் அள்ளுறவனோடை கடும் பிரச்சினை.அவனை மூண்டு மாதம் உள்ளுக்கும் போடுவிச் சனான்...அவனாலைதான் இங்கை வரவேண்டியதாப் போட்டுது"

☒ ☒ ☒ ☒

ஆறுமுகத்தார் ஒருமுறை கண்ணைச் சுழலவிட்டார். சும்மா சொல்லக் கூடா. அருமையான இடம்தான். தென்றல் வீசிக்கொண்டிருந்தது. கிளிகள்,சிட்டுக்குருவிகள்,குயில்கள்,பசுக்கன்றுகள், மயில்கள், மைனாக்கள் சங்கீதமிசைத்தன.

இசைக்கு வரிகள் முக்கியமில்லை சந்த ஒலி போதும் என்கிற மாதிரி தீர்ப்புச் சொல்லவேண்டும் போலிருந்தது முகத்தாருக்கு. சற்று நேரத்தில்..திகைத்துப் போய்விட்டார்.எங்கோயிருந்து திருவாசகம்.'சிம்பொனி' செவியில் விழுந்தது.

" நாட்டாமை..தீர்ப்பை..மாத்து " அசரீரி கேட்குமாப்போல இருந்தது அவருக்கு. பாடலில் வரிகள்தான் சாகாவரம் கொடுக்கின்றன என வாதவூரர் உருகிப்போய்க்கொண்டிருந்தார்.



☒ ☒ ☒ ☒

" அது சரி..சிவமண்ணை.. நீங்கள் மட்டுந்தான் இங்கை இருக்கிறியளோ?" என்று சம்பாசணையைத் தொடர்ந்தார் சின்னவர் முகத்தார்.

"இல்லையடாப்பா..எக்கச்சக்கமான சனம் இருக்கு. வாழுற, வளர்கிற வயசுப் பொடி பெட்டைகள் ஆயிரக் கணக்கில இருந்ததுகள்.அதுகளுக்கு கடும் மரியாதையும் செல்வாக்கும். காத்தல் கடவுள் மாதிரித்தான் மதிப்பு அவையளுக்கு. இங்கை..அவையளின்ரை "செக்ஸன்" பிரமாண்டமான கோவில்கள் மாதிரியிருக்கும் கண்டியோ. அவையெல்லாருக்கும் பீ.ஆர். கிடைச்சு கனகாலமாப் போச்சு. அதுகள் ஒவ்வொரு வருசமும்.. கார்த்திகை கடைசிக் கிழமை முழுவதும் சொந்தங்களோடை நிண்டு போட்டு வருங்கள்" எண்டார் பரமசிவத்தார்.

☒ ☒ ☒ ☒

"தம்பி ஆறுமுகம்..உன்னை ஒண்டு கேக்கவேணும். நான்வந்து இரண்டரை வரியமாச்சு. எங்கடை ஊரவன் இங்கை ஒருவரும் வரக்காணேலை. நல்லாச் சப்பிப் போட்டு..மருந்து மாத்திரையோடை சீவிக்கிறான்கள் போல இருக்கு."

"ஏன் அண்ணை..எங்கடை சாராயக் கடை சண்முகம்..மீற்றர் வட்டி மோகனதாசு...கள்ள உறுதி முடிக்கிற பிரக்கராசியார்...அவங்கடை காசை ஆட்டையப்போட்டு "கொம்பிளக்ஸ்" கட்டின கோணேசு எல்லாம் வெளிக்கிட்டாங்கள். இங்கை வரேல்லையே?"

"இல்லையடா தம்பி...இன்குவாறி..வழக்கு எண்டு முடிஞ்சாப்பிறகு வாராங்களோ..இல்லாட்டி அதுக்கிளையே கிடக்கிறாங்களோ தெரியேல்லை..அவருக்குத்தான் வெளிச்சம்" என்று சொன்னார் பரமசிவத்தார்.

☒ ☒ ☒ ☒

"சொன்னாப்போலை...நான் இங்கை வந்து கொண்டிருக்கேக்கை... அரிசி மில் அம்பலவாணரின்டை குழறல் சத்தம் மாதிரிக் கிடந்துது. " ஐயோ...இனிப் பதுக்க மாட்டன் .மன்னிச்சு விடுங்கோ"...எண்டு கத்திக் கொண்டிருந்தது மனுசன்.நாலைஞ்சு..கரித்தடியன்கள். நூறு கிலோ நெல் அவிக்கிற பெரிய கிடாரம் ஒண்டை தூக்கிக் கொண்டு போறதைக் கண்டனான் சிவமண்ணை" இதுக்குத்தான் சொல்லுறனான் கருடபுராணத்தை பாடத்திட்டத்தில சேருங்கோ எண்டு.எங்கடை படிச்ச ஆக்கள்கேட்டாத்தானே?".

☒ ☒ ☒ ☒

"அது சரியண்ணை..நான் வந்த நேரம் தொடக்கம்..பீ.ஆர்...பீ.ஆர்... எண்டு சொன்னனீங்கள்,." பேமனன்ட் ரெசிடென்ட்" தானே அது?"

சிவத்தார் சிரிச்சுக் கொண்டு சொன்னார். அது.."பரம் பொருளிடம் சேர்தல்" (பரம்பொருள் றீச்) எண்டதைத் தான் பீ.ஆர். எண்டு சொல்லுறனான் என்றார் குசும்புக்கார படிச்ச மனுசன்.

☒ ☒ ☒ ☒

பழையபடியும்..குதிரைக் குளம்பொலிகள் கேட்கத் தொடங்கின. காட்டெருமை ஒண்டு..கதறிக் கொண்டு பின்னால் சென்றது. யாரோ ஒருவர் அதில் உட்கார்ந்து செல்வது போலவும் இருந்தது.

எருமைக்குப் பக்கத்தில் ஒரு குள்ளமான பேர்வழி தலைப்பாகையோடை..கையில் பெரிய புராணப் புத்தகம்..வேறு.

"அண்ணை...என்னண்ணை.எனக்கு ஒண்டும் விளங்கேல்லை...இஞ்சை என்ன நடக்குது?"

"எங்கடை பெரியவர் தான் போறார்..கொஞ்சப்பேரைக். கொண்டுவரப் போறார் போல."

"அதுசரி..பக்கத்தில போற கட்டையர் ஆர் ?"

"அவர் பெரியவரின்டை "சீஃப் புரோகிராமர்".. நான் அவரை "சி.பு" எண்டுதான் தமிழிலை சொல்லுறனான்" என்றார் பரமசிவத்தார்.

"சி.பு" என்றால் என்னவென்று முகத்தார் மண்டையைக் குழப்பிக் கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளில் தமிழறிஞர்:


## க. உமாமகேசுவரம்பிள்ளை

## (05.05.1934 - 20.04.2024)

7

○ பா.துவாரகன்

## 1854 இல் வெளிவந்த மிகச் சிறந்த நூல்


சைவதூஷண பரிகாரம்

யாழ்ப்பாணத்து நல்லூர்
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள்
செய்தது

ஆறுமுக நாவலர்
வித்தியாநுபாலன அச்சகம்
25 தங்கசாலைத் தெரு சென்னை 1

விலை ரூ. 2-50

8ம் பதிப்பு துன்முகி, ஆவணி செப்டம்பர் 1956
முதற்பதிப்பு - 1854

### விமர்சனம், கண்டனம் எழுதுவதில் வல்லவர்

ஒரு நூலுக்கு விமர்சனம் எழுதுவது, ஒரு இலக்கிய நிகழ்வு பற்றி நயப்புரை எழுதுவது, இசைநிகழ்ச்சி, அரங்கேற்றம் பற்றிய பார்வையாளனது இரசனைக் குறிப்பை எழுதுவது முதலான யாவுமே கலையம்சம் மிளிரும் தனித்துவமானவையாக இருத்தல் சிறப்பு. நூலின் உள்ளடக்கம் அல்லது கலை நிகழ்வின் மீது வாசகனது ஆழமான பார்வையும், இரசனையும், பரந்துபட்ட அறிவும் நேர்மையும் விமர்சனத்தில் அல்லது நயப்புரையில் வெளிப்படல் வேண்டும். அவ்வாறே ஒரு நூலுக்கு எழுதப்படும் அணிந்துரையிலும் நூல் குறித்த, எழுத்தாளர் பற்றிய ஆழமான பார்வையையும் விமர்சனத்தையும் அணிந்துரையாளர் வெளிப்படுத்துவார்.

நாவலர் கல்விப் பாரம்பரியத்தில் வந்தவரான பண்டிதர் உமாமகேசுவரன் பிழை கண்டால் பொறுக்கமாட்டார். அதை நேரே சொல்வார். உமாமகேசுவரன் ஒருவரைப் பாராட்டிப் பாராட்டி எழுதியே கண்டனம் எழுதும் கலை கைவரப் பெற்றவர். சிலவேளைகளில் இது புகழ்மொழியா அல்லது கண்டனமா என்ற ஐயத்தை ஏற்படுத்தும். உமாமகேசுவரன் கண்டனம் எழுதும் கலை வல்லார். இதுவும் நாவலர் பரம்பரையின் பண்பா?

கலாநிதி செ. சுதர்சன், "நாவில்லா உபதேசிகள்: காலனிய யாழ்ப்பாணத்தில் சிறுபுத்தகக் கலாசாரமும் சமயக் கருத்தாடலும்" என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2022 ஆம் ஆண்டு ஆற்றிய பேராசிரியர் சு. வித்தியானந்தன் நினைவுப் பேருரையில் கிறித்துவ சமயத்துக்கு எதிரான நாவலரது கண்டனங்களைப் பற்றி குறிப்பிடுகின்றார். நாவலரது "சைவதூஷண பரிகாரம்" என்ற கண்டன நூல் கண்டு கிறித்துவ மிஷனரிகள் திணறிப்போயினர் என்பதற்கு 1855 ஆம் ஆண்டு வெளிவந்த 'வெஸ்லியன் மிஷன்' அறிக்கையை மேற்கோள் காட்டுகின்றார் கலாநிதி செ.சுதர்சன். எதிரிகளே மெச்சும் அளவுக்கு எழுதுகின்ற நாவலரது சொல்வன்மையும் உண்மைத் தன்மையும் வெஸ்லியன் மிஷனரியினரது அறிக்கையில் பிரதிபலிக்கின்றது. கலாநிதி சுதர்சன் மேற்கோட்குறிக்குள் காட்டும் மெதடிஸ் மிஷனரியினரது பின்வரும் அறிக்கையிலிருந்து நாவலரது கண்டனத்தின் வலிமையை மட்டுமல்ல, கண்டனம் எழுதுகின்றபோதும் நாவலர் காண்பித்த அற ஒழுக்கத்தையும் உய்த்துணர முடிகின்றது:

> "இவ்வாண்டின் மகத்தான சம்பவம் சைவதூஷண பரிகாரம் என்ற தமிழ் நூல். அது, அசாதாரணமான இலக்கியம். கிறிஸ்து மதத்தைப் எதிர்த்து ஆணித்தரமாகச் சைவக் கோட்பாடுகளை நிலைநிறுத்தும் நூல். அது முற்றிலும் புதிய தந்திரத்தைக் கையாண்டு நமது சமயத்தைத் தாக்குகின்றது. அது, கிறிஸ்து சமயம் முறையற்றது, பயனற்றது என்று சொல்லவில்லை. சைவத்தின் சடங்குகளையும் தூக்கிப்பேசவில்லை. கிறிஸ்து ஆகமத்துக்குச் சரியான ஆகமங்களைக் காட்டி சைவத்தைவிடக் கிறிஸ்து மதத்தில் என்ன விசேடம் இருக்கிறது? என்பதை அறியத்தருகின்றது" (தர்க்க ரீதியில் கேள்விக்கு உட்படுத்துகின்றது) – மெதடிஸ் மிஷன் அறிக்கை 1855.

### மொழியைக் கையாளும் (இ)லாவகமும் அதன் (இ)லாவண்யமும்

உமாமகேசுவரன் போருக்கு எதிரானவர். உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்த போரின் கொடுமையை ஐபாட்டில் பார்த்துப் பெருந்துயர் அடைந்தவர். இந்தியா ரஷ்யாவுக்கு ஆதரவாக இருந்தமை அவருக்கு துயரைத் தந்தது. முதலாம் உலகப் போர் நடைபெற்ற காலத்தில் பாரதியார் எழுதிய "பெல்ஜியம் நாட்டுக்கு வாழ்த்து" என்ற கவிதையை நினைவு கூர்ந்து பாரதி இன்றிருந்தால் உக்ரைன் நாட்டுக்காகப் பாடியிருப்பான் என்றார்.

உமாமகேசுவரம்பிள்ளை அன்பர் ஒருவருக்கு எழுதிய அஞ்சலிடப்படாத ஒரு கடிதத்திலிருந்து சிறு பகுதியைக் கீழே தருகின்றேன். இதில் பிள்ளையவர்கள் தேர்ந்தெடுத்த சொற்களூடாக, இலங்கைத்தீவில் 30 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்த கொடிய போரானது எவ்வாறு அழகிய இலங்கைத் தீவை அழித்தது என்பதை மிக லாவகமாகக் கொண்டு வருகின்றார். அவரது சொற்கள் கவித்துவமானவை; வரிகளுக்கிடையே வாசகனுக்கு விட்டுச் செல்பவை, சொல்லாத செய்திகள் அதிகம். 'அபேரட்ட' என்ற சொல்லுக்கூடாக போரின் ஒரு முகத்தை காண்பிக்கின்றார்!:

> "இலங்கை உள்நாட்டுப் போரால் உருக்குலைந்த காலம். தமிழ் ஈழம் ஒன்றே நமது குறிக்கோள் எனக் கூறித் தமர் பிறர் என்ற பேதமற்ற அபேத வாதிகளாய் அனைவரையும் கொன்ற தமிழ்ப்போராளிகள் ஒருபுறம். அமைதியை நிலைநாட்டியே தீருவோம் எனநுழைந்த அமைதிப் படையினர் மறுபுறம். 'அபேரட்ட' கோஷமிட்டு எழுந்த இலங்கை ராணுவமும் அரசும் பிறிதொரு புறம். எல்லோரும் கூடி எங்கள் அழகான தீவை அதகளப்படுத்தி மயான பூமியாக்கிய மகிழ்ச்சியில் ஏப்பம் விட, நீங்களோ அது குறித்து ஒரு சிறிதும் கவலைப்படாது ............................ எனப் பெருமை பேசி மகிழ்கிறீர்கள். நீங்கள் ஒரு தனிப் பிறவிதானையா! சந்தேகமே இல்லை. வாழ்க! பல்லாண்டு."

உமாமகேசுவரன் வசனநடை கைவந்த வல்லாளர் என்பதற்கு அவரது எழுத்துகள் யாவுமே சான்றுபகரும். அவர் அன்பர்களுக்கு எழுதிய கடிதங்களில், நூல்களுக்கு எழுதிய அணிந்துரைகளில், எழுதிய கட்டுரைகளில் "செந்தமிழ் மொழியின் செழுமையையும் சுவையையும்" காணலாம்; நுகரலாம்.

சோ.ப. ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்து தமிழில் வெளியிட்ட விர்த்தோபநிஷத் என்ற கவிதைத் தொகுப்பு நூல் அண்மையில் (2020) வெளிவந்தது. இந்நூலுக்கு உமாமகேசுவரன் பொன்னின் குடத்துக்குப் பொட்டிட்டது போல் ஓர் அணிந்துரையை எழுதியிருந்தார். இந்த அணிந்துரையை உமாமகேசுவரன் தானே ஐபாட்டில் தட்டச்சுச் செய்தார். அருகில் இருந்து என்னை வாசிக்கச் சொல்லித் திருத்தங்கள் செய்வார்; திருத்தங்கள் செய்த பின்னரும் திருப்தி வராது. இன்னுமொரு தடவை பார்க்க வேண்டும் என்பார். என்னைக் கூப்பிட்டு சோ.ப. வுக்கு மின்னஞ்சலிடச் சொல்வார். அதன் பின்னரும் மேலும் செப்பனிடுவார். இப்படி அணிந்துரையை 3 தடவைக்கு மேல் சோ.ப. வுக்கு மின்னஞ்சல் செய்தேன்.

உமாமகேசுவரனது உரைநடையின் இலாவண்யத்துக்கு(அழகு) அவர் விர்த்தோபநிஷத் நூலுக்கு எழுதிய அணிந்துரையிலிருந்து சில பகுதிகளைத் தருகின்றேன்:

> "திரு. சோமசுந்தரம்பிள்ளை பத்மநாதன் உலகறிந்த கவிஞர். தம்மைக் கவிஞர் என்று மட்டுமே அடையாளப் படுத்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைபவர். ஆனால் அவராற்றும் பல்துறைப் பணிகள் அதற்கு இடந்தருவதாய் இல்லை. ஆய்வுக் கட்டுரைகள், அதர்ப்படயாத்தல், விமர்சனம் என அவர் புகுந்து கலக்காத துறையென எதுவுமே இல்லை. இத்தனைக்கும் மேலே பாரதி கூறிய 'ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண்கிலார்' என்ற வசையை ஒழிக்கவேண்டும் என்ற முனைப்பு வேறு. ஏனைய கவிஞர் பலர் போலத் தம்முடைய கவிதைகளை மட்டுமே சதா பாராயணஞ் செய்து பரமானந்தம் அடைபவரல்லர். எங்கெல்லாம் நல்ல கவிதை கிடைக்கிறதோ அங்கெல்லாஞ் சென்று அவற்றைச் சுவைப்பதோடு தமிழில் தந்து தமிழரையும் ஆங்கிலத்தில் தந்து உலகளாவிய கவிதைப் பித்தர்களையும் சுவைத்து இன்புற வைப்பது அவர் செய்யும் அரிய பணி. இந்தப் பணியின் சிகரம் விர்த்தோபநிஷத் தமிழ்ப் பதிப்பு."
>
> "சுந்தரத் தெலுங்கில் (2019) வெளிவந்ததொரு அருமையான கவிதை நூல் விர்த்தோபநிஷத். முதியோர் வாழ்ந்திடத் தகுதியற்றோர்; 'முதியோர் இல்லங்கள்' என்ற பெயரில் இயங்கும் சிறைகளில் அடைக்கப்பட வேண்டியோர் என்னும் கருத்துகள் வலுப்பெற முனையும் இன்றைய சூழலில் இந்த நூலின் இன்றியமையாமை நன்குணரப்படும்."

முதியவள் ஒருத்திக்கு ஏற்படும் கசப்பான அனுபவத்தை தனது அணிந்துரையில் மேற்கோள்காட்டுகின்றபோது சோ.ப. வினது கவிவரிகளைத் தேர்ந்தெடுத்துத் தருகின்றார் உமாமகேசுவரன்.

முதியவள் ஒருத்தி அரசாங்கம் வழங்கும் முதியோர் சகாயத்தைப் பெறுவதற்காக வங்கியில் நிற்கிறாள். எங்கிருந்தோ அவள் மகன் வந்து சேர்கிறான்.

*"இல்லை, தரமாட்டன்*
*என் மருந்துக்கு இது வேணும்*
*வெற்றிலை பாக்குக்கு வேணும் மேனை!*

*அவன் கேட்டால் தானே! காசைக் கவர்ந்து செல்கிறான்.*
*'யாரறிவார்;*
*இந்தக் காசைக் கொண்டு*
*அவளுடைய இறுதிச் சடங்கை*
*அவன் செய்யக் கூடும்!'*
*என்ற முத்தாய்ப்பு நம்மை அதிர வைக்கிறது."*

### தெல்லிப்பழையில் கடைசியாகக் கட்டிய கல்வீடு

தமிழ் முறைப்படி திகதி எழுதுவது என்றால் முதலில் ஆண்டு, பின்னர் மாதம், திகதி என்ற ஒழுங்கில் எழுதுதல் வேண்டும். இதை ஆசிரியர் உமாமகேசுவரனிடமிருந்தே அறிந்தேன். நாம் திகதி, மாதம், ஆண்டு என்ற வரிசையிலே ஆங்கில முறைப்படி எழுதவே பாடசாலையில் கற்றுக் கொண்டோம்.

2022.02.12 அன்று, இசை ஈடுபாடு தொடர்பில் உமாமகேசுவரனுடன் ஓர் உரையாடல், ஆசிரியர் கூறினார்:

"அந்தக்காலத்தில் விழிசிட்டியிலே இருக்கிறவர்கள் கிராமபோனில் இசை கேட்பதற்காக இரவிலே எங்களது வீட்டுக்கு வருவினம். எங்களது வீடு மண்வீடு. அதிலே ஒரு பெரிய விறாந்தை. அதனைச் சாணியால் மெழுகி இருப்பார்கள். வீட்டிலே ஒரே ஒரு பெரிய மேசையும் ஒரு கதிரையும் தான் இருந்தது. கதிரையில் அப்பா இருப்பார். நாங்கள் எல்லோரும் நிலத்திலே தான் இருப்பம். அப்போதுதான் ஊரிலே எல்லோரும் கல்வீடு கட்ட ஆரம்பித்தார்கள்."

"எல்லோரும் வீடு கட்டுகிறார்கள். வாத்தியார் கடவுளுக்குத்தான் செய்கிறார்" என்று ஊரிலுள்ளவை கதைப்பினம். அப்பா கடைசியாகத்தான் கல் வீடு கட்டினார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2025ஆம் ஆண்டு பெப்ரவரியில் பூமிக்குத் திரும்புவார் சுனிதா!

சர்வதேச விண்வெளி மையத்துக்குச் சென்று, தொழில்நுட்பப் பிரச்சினைகளால் பூமிக்குத் திரும்ப முடியாமலிருக்கும் விண்வெளி வீரர்களான சுனிதா மற்றும் வில்மோர் இருவரும் 2025ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பூமிக்கு அழைத்து வரப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோர் இருவரும் கடந்த ஜூன் மாதம் 5ஆம் திகதி ஸ்டார்லைனர் விண்கலத்தில் அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் இருந்து சர்வதேச விண்வெளி மையத்துக்குப் புறப்பட்டனர். ஜூன் 6ஆம் திகதி அவர்கள் விண்வெளி மையத்தை அடைந்தனர். விண்கலனில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அவர்களால் பூமிக்குத் திரும்ப முடியவில்லை. சுமார் 80 நாள்களாக விண்வெளியில் உள்ள அவர்கள் எப்போது பூமிக்குத் திரும்புவார்கள் என்பதில் பெரும் எதிர்பார்ப்பு நிலவியுள்ள நிலையிலேயே, அடுத்த ஆண்டுதான் அவர்கள் பூமிக்கு திரும்புவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்வெளிப் பயணம் மிகவும் ஆபத்தானது. அது பாதுகாப்பான விண்கலமாக இருந்தாலும் ஆபத்து என்பது தவிர்க்கப்பட முடியாதது. அதனால் சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோர் இருவரையும் சர்வதேச விண்வெளி மையத்தில் தங்க வைப்பது என முடிவு செய்துள்ளோம். அவர்கள் 2025ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் விண்கலத்தில் பூமிக்குத் திரும்புவார்கள் என்று நாஸாவின் பிரதானி பில் நெல்சன் தெரிவித்துள்ளார்.

தொழில்நுட்பப் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள போயிங்கின் ஸ்டார்லைனர் விண்கலனை யாருமின்றி பூமிக்கு கொண்டுவர முடிவு செய்துள்ளோம். அதுதான் பாதுகாப்பான வழியாக இருக்கும். ஸ்டார்லைனர் விண்கலத்தில் மனிதர்கள் பயணிக்கும்போது அது எதிர்பாராத பல்வேறு ஆபத்துக்களை ஏற்படுத்தும் என்றும் நெல்சன் சுட்டிக்காட்டியுள்ளார். (ம)

## ஊழலற்ற...

பெற்ற தேர்தல் பரப்புரையின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தி மீதும், என் மீதும் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கை உடைந்துபோவதற்கு நான் விடமாட்டேன். ஊழலற்ற ஆட்சியே மக்களின் எண்ணமும் நோக்கமுமாக உள்ளது. அத்தகைய நாட்டை நான் உருவாக்குவேன். உங்களைப்போலவே எனக்கும் நாடுபற்றிய உணர்வு இருக்கின்றது - என்றார். (அ-ம-சி)

## செப்...

5 மற்றும் 6ஆம் திகதிகளில் பிற அரச நிறுவனங்களில் கடமையாற்றுபவர்களுக்கும் மற்றும் பாதுகாப்புப் படையினருக்கும் தபால்மூல வாக்களிப்பு நடைபெறவுள்ளது என்று யாழ். மாவட்டப் பதில் செயலரும், தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் தபால்மூல வாக்களிப்பு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ். மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார். (அ-ச-27-66)

## ஜனாஸா...

ஜனாஸாக்கள் அவ்வாறு எரிக்கப்பட்டமைக்கு தான் எந்த விதத்திலும் பொறுப்பில்லை என்றபோதிலும், ஓர் அரசாங்கம் என்ற ரீதியில் இந்த மன்னிப்பைக் கோருவதாகவும் மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் வைத்து ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"மக்கள் உணவு இல்லாமல் இருந்தார்கள். விவசாயம் செய்ய முடியாமல் இருந்தார்கள். உரம் இருக்கவில்லை, எரிபொருள் இருக்கவில்லை, டீசல் இருக்கவில்லை, மருந்துகள் இருக்கவில்லை, மக்கள் கஷ்டத்தில் வாழ்ந்தனர். நான் ஜூலை மாதம் அரசாங்கத்தைப் பொறுப்பேற்றபோது உரத்தை வழங்கி விவசாயம் செய்வதற்கு வாய்ப்பளிக்கவேண்டும் என்று தீர்மானித்தேன். ஐந்து போகங்களும் விதைக்கப்பட்டன. ஒருமுறைகூட கைவிடப்படவில்லை. வயலையும் நிரப்பினோம். சமையல் அறையும் நிரப்பினோம். இதுதானே மக்களின் தேவை. எரிபொருள் வழங்கினோம். மருந்துகள் இருக்கின்றன. தேவையான அனைத்துப் பொருள்களும் இன்று இருக்கின்றன.

பொருளாதாரம் எழுச்சி பெறுகிறது. சுற்றுலாப் பயணிகளும் வருகின்றனர். வியாபாரமும் தடையின்றி நடக்கிறது. பொருட்களின் விலைகளும் குறைந்துள்ளன. இன்னும் குறைக்கவேண்டும் என்று கோருகின்றனர். அதனை ஏற்றுக்கொள்கிறேன். மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். இன்னும் பொருட்களின் விலைகளைக் குறைக்கவேண்டும். ரூபாவை வலுப் பெறச் செய்யவேண்டும்.

நான் பொறுப்பேற்கும் போது டொலர் ஒன்றின் விலை 370 ரூபாவாகும். தற்போது 300 ரூபா வரை குறைந்துள்ளது. தேசிய உற்பத்தியை அதிகரித்து இன்னும் கூடுதலான நிவாரணங்களை வழங்கத் தீர்மானித்துள்ளேன். இதுவெல்லாம் சஜித்தாலும், அநுரவாலும் முடியுமா? மக்கள் துன்பப்பட்டபோது தப்பியோடியவர்கள்தான் இவர்கள். உங்களின் சமையல் அறை தொடர்பிலும், உங்களின் பசி தொடர்பிலும் அவர்கள் சிந்திக்கவில்லை.

ஏன் சஜித்தும், அநுரவும் உங்களுக்கு உதவவில்லை? நீங்கள் ஏதேனும் விரும்பத்தகாத செயல்களை அவர்களுக்குச் செய்துவிட்டீர்களா?" - என்றார். (அ-ம-சி)

## பன்றி...

நேற்றுமுன்தினம் இரவு பொல்லுடன் குறித்த மூதாட்டி நின்றுள்ளார். அந்தச் சமயத்தில் அயல்வீட்டில் வளர்க்கப்பட்டு வந்த பன்றியொன்று, திடீரென வெகுண்டெழுந்து அவரை மூர்க்கத் தனமாகத் தாக்கியுள்ளது. இதையடுத்து நெடுந்தீவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். சிகிச்சையின்போது நேற்று அந்த மூதாட்டி உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## மக்களின்...

அமைச்சின் ஊடாக கிராமங்களிலும் சந்திகளிலும் நிர்மாணிக்கப்பட்டுள்ள புத்தர் சிலைகளைக் [illegible] நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்த அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றே இது நடந்து வருகிறது. இதே கணக்கடுப்பு ஏனைய மதங்களுக்கும் விரைவில் வரலாம். மதசார்பற்ற சமுதாயம் ஒன்றை உருவாக்கவே முயற்சிக்கின்றார்கள். இன்று பௌத்த தர்மத்துக்கே இவ்வாறான ஆணைகளை பிறப்பிக்கின்றனரென்றால், நாளை ஏனைய மதங்களின் நிலையை எண்ணிப் பாருங்கள்.

எனது தந்தை புத்தசாசன அமைச்சையும் ஏனைய மதங்களுக்கான தனித்தனி அமைச்சுகளையும் உருவாக்கினார். ஆனால், இன்று மதங்களை அடக்கியொடுக்கும் வெட்கம்கெட்ட வேலைகளில் செயற்படுகின்றனர் - என்றார். (அ-ம)

## ருக்மன்...

சருமான ருக்மன் சேனாநாயக்க நேற்றுத் தனது 76ஆவது வயதில் காலமானார்.

இவர் 2002 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரை சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சராகப் பதவி வகித்துள்ளார். அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தராகவும் ருக்மன் சேனாநாயக்க செயற்பட்டுள்ளார். (அ-ம-சி)

## வன்முறைக்...

மூவர் அடங்கிய குழுவே இந்தத் தாக்குதல்களை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படும் நிலையில், மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ம-100)

## பிரசாதம்...

சுன்னாகம், சூளானை பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது. (அ-ச-27)

## முறைப்பாடு...

தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 427 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 450 முறைப்பாடுகளும் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் தேர்தல் வன்முறைகளும் பதிவாகியுள்ளன. (அ-ம)

## இயக்கச்சியில்...

விபத்தில் பரந்தன், கிளிநொச்சியை சேர்ந்த தங்கவேல் விஜித்தன் (வயது-40) என்பவரே உயிரிழந்துள்ளார். விபத்துத் தொடர்பான விசாரணைகளை பளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-ச-100-113)

## முஸ்லிம்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"முஸ்லிம் தலைவர்களின் இரட்டை நிலைப்பாட்டுக் கொள்கை தற்போதைய ஜனாதிபதித் தேர்தலிலும் தொடர்கின்றது. கட்சிகளின் தலைவர்கள் சஜித் பக்கமாகவும், அதே கட்சிகளின் உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணிலின் பக்கமாகவும் நிற்கின்றனர். இதன்மூலம் யார் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றாலும், அவர்களால் அடுத்த ஜனாதிபதியை இலகுவாக அணுகக்கூடிய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நுட்பமான இரட்டை வேடதாரித்தனம் கொண்ட அரசியலை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இதற்கு முன்னரும் நாடாளுமன்றத்தில் அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தின் போதான வாக்கெடுப்பின்போது முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் அதற்கு எதிராகவும், கட்சிகளின் உறுப்பினர்கள் ஆதரவாகவும் வாக்களித்தனர். ஆனால், கட்சியின் முடிவுக்கு முரணாகச் செயற்பட்டமைக்காக அவர்களுக்கு எதிராக எந்த ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது முஸ்லிம் சமூகத்தை ஏமாற்றும் நடவடிக்கையாகும். அதனால் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில், சஜித் என யாரை ஆதரிக்கத் தீர்மானித்தாலும் முஸ்லிம் மக்கள் தமது எண்ணப்படி சுயமாகச் சிந்தித்தே தீர்மானங்களை மேற்கொள்ளவேண்டும்.


கோத்தாபய இனவாதத்தைப் பரப்பியே கடந்த தேர்தலில் வெற்றிபெற்றார். கொவிட் தொற்றால் உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அவர் நல்லடக்கம் செய்யவிடாமல் தடுத்தார். ஆதலால், ராஜபக்சக்கள் எங்கிருந்தாலும் அவர்களுடன் எனக்குத் தொடர்போ அல்லது அரசியலோ இல்லை. அன்று ராஜபக்சக்களுடன் இருந்தவர்கள்தான் இன்று ரணிலுடனும், சஜித்துடனும் உள்ளனர்" - என்றார். (அ-ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்குண்டு

## யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 240 நிலப்பரப்புக்காணி விற்பனைக்குண்டு

- 2 ½ பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நன்னீர் ஊற்று - 20 அடி பாதை
- குடியிருப்புகள் சூழ உள்ள பகுதி
- நுச்சியம்பதி பிள்ளையார் கோவில் அருகாமையில்
- வட்டுக்கோட்டை Jaffna College 1Km தூரம்
- காரைநகர் - யாழ்ப்பாணம் பிரதான காபெற் வீதி. 500 M, தூரம், 784 வழி அரச, தனியார் பேருந்துகள் செல்லும் வழி
- 1 பரப்பின் விலை 150000 / = (ஒரு லட்சத்து ஐம்பதாயிரம்)



➡ பார்வையிடும் நேரம் - காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணிவரை.

**குரு : 077 294 1521, 077 288 0152, 076 755 8006,**

(cs.1189) (N-1)

# செலவல்ல முதலீடு!

இந்திய விண்வெளி அமைப்பான இஸ்ரோவுக்காக ஒதுக்கப்படும் ஒவ்வொரு ரூபாவும், இரண்டரை மடங்கு முதலீடாக நாட்டுக்குத் திரும்புகின்றது என்று அந்த அமைப்பின் தலைவர் சோம்நாத் தெரிவித்துள்ளார். (ம)

# மணமகள் தேவை

1996 முதல் 2001 ம் ஆண்டு வரை பிறந்த மணமகள் (V), சைவபோசன முடையவர்கள் விரும்பத்தக்கது. ரோகிணி, மிருகசீரிடம், திருவாதிரை, பூசம்,ஆயிலியம், பூரம், அத்தம், அனுசம், கேட்டை, அவிட்டம், ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்த ஜாதக கிரகநிலையில் 2,4,5,7,8ல், செவ்வாய், இராகு, கேது இல்லாத ஜாதகங்களின் போட்டோ பிரதிகளையும், ஏனைய விபரங்களையும் (Profile) வட்சப்மூலம் அனுப்பிவைக்கவும், பொருத்தம் பார்த்து வட்சப்மூலம் தொடர்புகொள்வோம்.

**வட்சப் இல.(whatsapp): 077 648 1939**

# வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள புடைவையகம் ஒன்றிற்கு பின்வரும் **வேலையாட்கள் தேவை.**

- **விற்பனை உதவியாளர்**
  (ஆண்கள் - 50000 இற்கு மேல், பெண்கள் - 30000 இற்கு மேல்)
- **துப்புரவுப் பணியாளர்**
- **காசாளர்**

**சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

**074 031 3051, 074 029 3051**

(CS/56000) J-1

# நீர்க்கசிவை தடுப்பதற்கு

உங்கள் கட்டடங்களில் மழைக்காலங்களில் ஏற்படும் நீர்க்கசிவை 10 வருட உத்தரவாதத்துடன் நிறுத்தித் தருகின்றோம்.

**Finex** ஸ்தாபனத்தாரின் ஏகவிநியோகஸ்தர்களிடம் இருந்தும் உலகத்தரமிக்க **இரசாயனப் பொருட்களை** விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

**போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்**

**வடமாகாணத்தில் முதன்முறையாக அறிமுகப்படுத்தியவர்கள்**
**15 வருட அனுபவமுள்ளவர்கள்**

தற்போது கொழும்பில் தெகிவளையிலும்

North and East Engineering
55 Stanly Road, Jaffna, Srilanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northandeastengineering.com

FINEX

# தேவை

**குளிர்பான நிறுவனத்திற்கு**
**(சுன்னாக பிரதேசம்)**

1. விற்பனை பிரதிநிதி
2. கணக்காளர் (பெண்)கணினி அறிவுதெரிந்தவர்கள்
3. களஞ்சியகாப்பாளர்

**070 193 0545**
**076 193 0545**
**077 391 5630**

# விற்பனைக்கு

சொக்கட்டான் பந்தல், வளைவுப் பந்தல், சிறகுப் பந்தல், மணவறைகள், கதிரை, மேசைகள் மற்றும் சமையல் உபகரணங்கள், வுபே செற்கள் அனைத்தும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- **077 739 6171**

(CS/56001) J-1

# SPOKEN ENGLISH & GRAMMAR

ஆங்கிலம் பேச ஆர்வம் உள்ள அனைவருக்கும், தொழில் புரிவோர்,
**Grade 7 to Graduates**
**Edexcel, Cambridge Syllabuses**
யாழ் இந்து வீதியில்
K.Ganesh B.A **077 766 8725**

(CR/47963) J-1

# சமையலாளர் தேவை

கொழும்பில் உள்ள உணவகம் ஒன்றிற்கு யாழ்ப்பாண பாரம்பரிய உணவுகளை தங்கியிருந்து சமைப்பதற்கு **ஆண் சமையலாளர் தேவை.**

வயதெல்லை 25 - 35

**077 498 5181**

(CS/55983) J-1

# காணி விற்பனைக்கு

யாழ். மயிலிட்டி காங்கேசன்துறையில் 8 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
விலை பரப்பு 20 லட்சம்

**074 234 3241**

(Cs/55988) N-1

# கன்ரர் வாகனம் வாடகைக்குத் தேவை

யாழ். நகருக்குள் ஓடுவதற்கு கன்ரர் வாகனம் வாடகைக்குத் தேவை


தொடர்பு:- **076 821 9414**

# மணமகள் தேவை

யாழ். இந்து (V) 1994, கேட்டை நட்சத்திரம் 2 இல் சூரியன் செவ்வாய், பொறியியலாளருக்கு (Moratuwa Uni) அழகான, தொழில்புரியும் மணமகள் தேவை.

**077 373 6730**

# ஈராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 19 . 09 . 1969

மறைவு 18 . 08 . 2022

## அமரர் சின்னையா பாலச்சந்திரன்

**திதி : ஸப்தமி அபரபக்கம்**

எம் அன்புத்தெய்வமே அப்பா ஈராண்டு ஓடிச்சென்றதுவோ
எம்குலவிளக்கே உங்கள் குடும்பத்தை தனி ஒருவனாய் நின்று
எல்லோருக்கும் வழிகாட்டி எல்லோரையும் வாழவைத்து
இன்று உங்கள் வாழ்வை பாதியிலே விட்டு சென்றீர்களே அப்பா
நீங்கள் எம்மைவிட்டு பிரிந்தாலும் உங்கள் ஆத்மா
எம்முடனேயே இருக்கின்றது அப்பா
எல்லாவற்றிற்கும் நீங்கள் ஆத்மாவாய்
இருந்து விடும் கண்ணீர் சமர்ப்பணமாகும் அப்பா
உங்கள் ஆசீர்வாதம் என்றும் எமக்கு கிடைக்கும் அப்பா

**என்றும் உங்கள் ஆசீர்வாதத்துடன்**
**உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.**
**ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி...**

**அல்லாரை தெற்கு,**
**மீசாலை.**

(CR/42973) J-1

**குடும்பத்தினர்.**

# தேவை

இல.208 கந்தரோடை வீதி, சுன்னாகத்தில் அமைந்துள்ள ஹொட்டல் ஒன்றிற்கு ஹொட்டலை தங்கியிருந்து பராமரிப்பதற்கு பராமரிப்பாளர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப் படும்.

**077 394 5982**
**021 224 2136**

# வாடகைக்கு

வைமன் வீதி, நல்லூரில் அறைகள் வாடகைக்கு உண்டு. பல்கலைக்கழக மாணவர்கள் அலுவலகம் செல்லும் பெண்கள் விரும்பத்தக்கது

**076 787 0837**

(cs 56009) (N-1)

# வீடு வாடகைக்கு

49. கண்டி வீதி, கச்சேரிக்கு அருகாமையில் 3 அறைகளும் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. வாகன தரிப்பிட வசதியும் உண்டு.

தொடர்புகளுக்கு:-
**077 630 5721**
**0039 340 995 6714**

(CS/55995) J-1

# காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகருக்கு அருகில் பழைய பொலிஸ் நிலைய வீதியில் பயன்தரு மரங்களுடன் கூடிய 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**077 668 6039**

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111
விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... இல் உள்ள அவர்களது பணிமனையில் 25.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org